Sangathamil
# சங்கத்தமிழ்
யாதும் ஊரே யாவரும் கேளிர்
குரல் – 55 | சர்வதேச மின் செய்தித்தாள் | 15 ஆகத்து 2023

# சுதுமலைப் பிரகடனம்

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் யாழ்ப்பாணம் சுதுமலை என்னும் இடத்தில் 04.08.1987 அன்று முதன்முதலில் தமிழீழ மக்கள் முன் தோன்றி உரையாற்றினார். இவ் உரையே வரலாற்றுச் சிறப்பு மிக்க சுதுமலைப் பிரகடனமாகும்.



"இந்திய – இலங்கை ஒப்பந்தமானது எமது தேசிய இனப்பிரச்சினைக்கு ஓர் நிரந்தரத் தீர்வைப் பெற்றுத்தராது" என்பதை மிகத் தீர்க்கதரிசனமாக அவ் உரையில் கூறியிருந்தார் தலைவர் அவர்கள்.

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**




























# விளம்பரத்துக்கு அழையுங்கள்:

# 437.345.4203



## தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**இந்த நிலத்தில் புதையுண்டிருக்கும் ஆயிரமாயிரம் சமாதிக் கற்களும் விடுதலையையே குறியீடுசெய்து நிற்கின்றன. வீதிகளில், சந்துகளில் சுவர்களில் நாம் சந்திக்கும் மாவீரர்களது திருவுருவங்களும் விடுதலையின் சாட்சிகளாகவே எமக்குக் காட்சி தருகின்றன.**






# சங்கத்தமிழ்

## தொடர்புகளுக்கு

**தொலைபேசி**

437 345 4203

**மின்னஞ்சல்** (Email)

sangathamilcanada@gmail.com

**இணையத்தளம்** (Website)

www.sangathamil.ca

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# கடலன்னையின் குழந்தை கடற்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணி

உயர உயர அலைகளை வீசியெறியும் கடலுடன் நெருங்கிய நேசமான உறவை வைத்திருக்கும் அந்தக் கடற்கரை ஒரே வெண்மணல் பிரதேசம்.

சாதாரணமாக எந்த ஒரு இளம் பெண்ணுக்கும் இந்த வெண மணற் பரப்பைப் பார்த்தால் தோழியருடன் ஓடிப்பிடித்து விளை யாடத் தோன்றும்.

நீச்சல் பயிற்சியில் ஈடுபடவென கரைக்கு வந்த பெண் புலிகளின் மனம் ஏழைகளின் கண்ணீரில் இளகியது. அனுதாபத்துடன் அந்த மக்களின் நிலையைப் பற்றித் தமக்குள் பேசிக்கொண் டார்கள்.

கால்களைப் புதைய வைக்கும் அந்தக் கடற்கரை மணலிலே உறுதியாகக் காலடிகளைப் பதித்தவாறு கடற்பரப்பிலிருந்து கரையை நோக்கி வேகமாக வீசும் காற்றை ஊடறுத்தவாறு, நீச்சல் பயிற்சியில் ஈடுபடுவதற்காக கடற்புலிகள் மகளிர் படை யணி கடலை நோக்கி நடந்து கொண்டிருந்தது. பெரும் மலையையே புரட்டிவிட்டுவது போன்ற வேகத்துடன் உயரக் கிளம்பி, ‘வாருங்கள் வீராங்கனைகளே, வணக்கம்’ என்று இவர்களை நோக்கி கூறிப்பணிவது போன்று அலைகள் கீழே விழும். எத்தனை தரமும் மேலே மேலே எழுந்து விழுவதில் அந்த அலைகளுக்குச் சலிப்பதில்லை. அந்த அலை நடுவே நீந்திச் செல்வதில் பெண்புலிகளும் சளைப்பதில்லை.

திடீரென கடலின் மேற்பரப்பில் ஏதோ பரபரப்பு. மீனவர்களின் படகுகள் வேக வேகமாக கரையைநோக்கித் திருப்பப்பட்டன. சிலர் படகுகளை, வலைகளை விட்டு விட்டு நீரில் குதித்து நீந்த முயல்வது தெரிந்தது. மேற்கடலிலே எதிரியின் டோராப் படகுகள் துரத்துகின்றன போலும். அப்படித் தான் இருக்கவேண்டும். கடற்புலிகளை எதிர்நோக்குவதைத் தவிர்த்துக் கொள்வதற்காக இப்போதெல்லாம் எதிரியின் கடற்படகுகள் மேற்கடலிலேயே நின்று தாக்கி படகுகள் மேற்கடலிலேயே நின்று தாக்கிவிட்டு ஓடுவதுதான் வழமையாகிவிட்டிருந்தது.

படகுகளுடன் திரும்பியவர்களும் எல்லாவற்றையும் கட லிலேயே விட்டுவிட்டு உயிரைமட்டும் காப்பாற்றி நீந்தி வந்தவர் களும் போக ஏனையோர்...

அலையடித்து ஒவ்வொரு உடல்களையும் கரையில் கொண்டு வந்து தள்ளியது. மீனவ குடும்பங்களின் கண்ணீர் அலை கடலுடன் சேர்ந்து வந்து கொண்டிருந்தது.

நீச்சல் பயிற்சியில் ஈடுபடவென கரைக்கு வந்த பெண் புலிகளின் மனம், ஏழைகளின் கண்ணீரில் இளகியது. அனுதாபத்துடன், அந்த மக்களின் நிலைபற்றித் தமக்குள் பேசிக்கொண்டார்கள்.

அங்கயற்கண்ணியின் மனம் இறுகிப் பாறையானது.

‘இவங்களுக்கு இதுக்கு ஒரு சரியான பதிலடி குடுக்கவேணும்’

அந்த நிமிடத்திலேயே மனதளவில் அவள் ஒரு கரும்புலி யானாள். சிறீலங்காக் கடற்படையின் கப்பல் ஒன்றைக் கரும் புலித் தாக்குதல் மூலம் அழிக்கவேண்டும் என்ற எண்ணம் அப்போதுதான் அவளுள் ஆழ வேரோடியிருக்க வேணும்.

தொடர்ந்தும் எமது மக்கள் சிறீலங்காக் கடற்படையின் தாக் குதலுக்கு அஞ்சி, எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஓடி வருவதும், அன்று முழுவதும் (வருமானம் இல்லாததால்) ஒருவேளைக் கஞ்சிகூடக் குடிக்க வழியில்லாமல் பசியுடன் அழும் தம் குழந் தைகளை சமாதானம் பண்ணமுடியாமல் தமக்குள்ளேயே கண்ணீர்விடும் ஏழைத் தாய்களையும், ஏழைத் தந்தைகளை யும் அடிக்கடி காண நேர்ந்த போதெல்லாம், தான் எடுத்த முடிவில் மேலும் உறுதி பெற்றாள் அவள்.

தான் ஒரு கரும்புலியாகிப் போக விரும்புவதைத் தலைவருக் குத் தெரியப்படுத்தினாள்.

சரியாக எட்டு மணித்தியாலமும் இருபத்தேழு நிமிடங்களும் அங்கயற்கண்ணி பதினேழு கடல் மைல்களை (ஏறத்தாழ முப்பத்தைந்து கிலோ மீற்றர்கள்) நீந்திக் கடந்துவிட்டாள். பொறுப்பாளர்களுக்கு அவள்மேல் என்னவென்று சொல்லமுடி யாத ஒரு பிரியம். கடற்கரும்புலிகளுக்குரிய பயிற்சியில் ஈடுபடத் தொடங்கிய நாளிலிருந்து அவள் அந்தக் கடுமையான பயிற் சிகளில் மிகத் திறமையாக ஈடுபட்டது எல்லோருக்குமே திருப் தியைத் தந்தது. கொடுக்கப்படும் இலக்கை அவளால் சரியாகத் தாக்கமுடியும் என்பதில் யாருக்குமே சந்தேகம் இருக்கவில்லை.

காங்கேசன்துறைத் துறைமுகத்தில் நாற்பத்தைந்து அடி ஆழங் கொண்ட நீர்ப்பரப்பில் நிலை கொண்டிருந்த வடபகுதித் தலை மையகக் கப்பலை யாராலுமே தாக்கமுடியாது என்பதில் எந்தக் கடற்படை அதிகாரிக்குமே சந்தேகம் இருக்கவில்லை.

ஆறாயிரத்து முந்நூறு தொன் எடையைக் கொள்ளக்கூடியதும்




326.04 அடி நீளமும், 51.02 அடி அகலமும் கொண்டதும் அதி சக்தி வாய்ந்த ராடர்கள் பொருத்தப்பட்டதுமான நீரில் மிதக்கும், நடமாடும் தலைமையகக் கடற்படைக் கப்பலை ஒரு தனி மனிதனால் அழிக்க முடியும் என்று அவர்கள் கனவில் கூட நினைத்திருக்கவில்லை என்பது பரிபூரண உண்மை.

கடற்புலிகள் மகளிர் படையணியின் மூன்றாவது பயிற்சிப் பாசறையில் பயிற்சி எடுத்த அங்கயற்கண்ணியிடம் இயல் பாகவே ஆளுமைத் தன்மை இருந்தது. ஆரம்பத்திலிருந்து அவள் குழுத் தலைவியாகவே இருந்து வந்தாள். கடற்புலிகளின் பெண்-ஆண் போராளிகளிடையே நடாத்தப்பட்ட போட்டி ஒன் றில் முதலாவதாக வந்தாள். விளையாட்டிலே கெட்டிக்காரியாக இருந்தாள்.

ஆனால் வீட்டிலிருக்கும் வரை இதற்கு நேர்மாறான இயல்பைக் கொண்டிருந்தாள். இரவிலே தனியாக வெளியே போகமாட் டாள். எதற்கும் அம்மாவின் துணை வேண்டும் அவளுக்கு. என்று தான் ஒரு விடுதலைப் புலியாக வேண்டும் என்று எண்ணிப் புறப்பட்டாளோ அன்று அவளுள் மறைந்திருந்த ஆளுமை வெளிவந்தது.

லெப்.கேணல் பாமாவுக்கும், மேஜர் சுகன்யாவுக்கும் இவளை முழுமையாகத் தெரியும். அவர்கள் இருவருடனும்தான் அவள் நீண்ட காலம் நின்றிருக்கின்றாள். வரலாற்றுப் புகழ் மிக்க ‘தவளை நடவடிக்கை’ யின்போது இவள் லெப்.கேணல் பாமாவின் குழுவில் ஒருத்தியாக கடற் கண்காணிப்பில் ஈடுபட் டிருந்தாள். அவளது நடவடிக்கைகள், பண்புகள், எந்தப் பொறுப் பையுமே அவளிடம் நம்பிக்கொடுக்கலாம் என்ற நம்பிக்கையை எல்லோரிடமும் ஏற்படுத்தி விட்டிருந்தாள்.

இயக்கத்தோடு இணைந்த பின்னர் ஒருமுறை இவள் விடு முறையிலே வீடு சென்றிருந்தாள். தாயும் தந்தையும் சகோதரர் களும் காட்டிய பாசத்திலே நனைந்தவள்,

‘நீங்களெல்லாரும் நல்லாப் படிக்கவேணும், படிச்சு முன்னுக்கு வரவேணும்’

என்றே தன் சகோதரர்களிடம் சொன்னாளாம்.

‘நான் காத்தோட காத்தாப் போயிடுவன் அம்மா’ என்று தாயிடம் சொன்னாளாம்.

எதற்காக தன் மகள் அப்படிச் சொன்னாள் என்பதை, தன் மகளை இழந்த பின்னர்தான் அந்த அன்பான அம்மாவால் புரிந்துகொள்ளமுடிந்தது.

‘பருந்திட்ட இருந்து தன்ர குஞ்சுகளைத் தாய்க்கோழி காக்கிற மாதிரி மண்கும்பான் – வேலணையிலிருந்து நான் பத்திரமாகக் கூட்டி வந்த பிள்ளை’

என்று சொல்லிச் சொல்லி அழுது களைத்துவிட்டாள் அம்மா. எப்படித் தன் மகளால் இப்படியொரு சாதனையைச் செய்ய முடிந்தது என்று தன்னிடமே கேட்டுக் கொள்கின்றாள் அவள். சொந்தவீடு, வாசல் காணிகளை வேலணையில் சிங்கள சிறீலங்கா இராணுவத்திடம் இழந்து ஏதிலியாக நிற்கும் அவளால், இரவிலே வெளியே போகும்போது மகளுக்குத் துணைபோன அவளால், தன் மகளின் வீரத்தை ஆச்சரியத் துடன் தான் பார்க்க முடிந்தது.

கரும்புலித் தாக்குதலுக்கான பயிற்சியில் ஈடுபட்டுக் கொண் டிருந்தபோது தன் தோழிகளிடம்,



'நான் நல்லூரில் திருவிழா நடக்கிற நேரந்தான் சாகவேணும். அப்பதான் திருவிழாவில் அம்மா கச்சான் வித்து வந்த காசு இருக்கும். அந்தக் காசு இருந்தாத்தான் என்ரை நினைவு நாளுக்கு வீட்டை போற பிள்ளைகளுக்கு (சக பெண் போராளிகளுக்கு) அம்மாவாலை சாப்பாடு குடுக்க ஏலும்'

என்று அடிக்கடி சொல்வாளாம். அவளின் தோழிகள் ஒவவொருவரின் மனதிலும் அங்கயற்கண்ணியின் இந்த வசனம் கல்லிலே செதுக்கியது போலத் தெளிவாகப் பதிவாகியிருக்கின்றது. எத்தனை தரம் கேட்டாலும் அவர்கள் திருப்பித் திருப்பிச் சொல்கின்றார்கள்.

எல்லாம் தயார்.

கடற்புலிகள் மகளிர் படையணியின் சிறப்புத் தளபதி லெப். கேணல் நளாயினி அவர்கள் அங்கயற்கண்ணியிடம்,

'என்னம்மா ஏதாவது சொல்ல நினைக்கிறாயா?' என்று கேட்டார்.

தயக்கமில்லாமல் மிகத் தெளிவாக அங்கயற்கண்ணியிடமிருந்து பதில் வந்தது.

'உங்கட அன்பும், அண்ணையின்ர (தலைவரின்) அன்பும் எப்பவும் எனக்கு இருக்கவேணும்'

தாயை நேசிப்பதையும் விட அதற்கும் மேலாக தலைவரையும், தன்னை வளர்த்துவிட்ட பொறுப்பாளர்களையும், தாயகத்தையும் நேசிப்பவர்கள்தான் கரும்புலிகள்.

அங்கயற்கண்ணியை கடற்கரை வரை சிலர் வழியனுப்ப, அதன் பின்னரும் விடாது சில போராளிகள் அவளுடனேயே நீந்தி ஒரு குறிப்பிட்ட தூரம் வரை வழியனுப்ப, அதன் பின்னரும் இலக்கிலிருந்து ஒரு குறிப்பிட்ட தொலைவு வரை வந்து பிரியாவிடை கொடுத்தனர் சக போராளிகள்.

'இலக்கை அடிக்காம நான் திரும்பமாட்டேன்'

என்று சொல்லி விட்டு அங்கயற்கண்ணி விடைபெற்றாள். தூரத்தே அவளது அசைவுகள் தெரியும் தூரம் வரை அதன் பின்னரும் கண்கள் வலிக்க வலிக்க வெறும் அலைகளை உற்றுப் பார்த்துக்கொண்டேயிருந்து விட்டு ஏனையவர்கள் திரும்பினார்கள்.

1994.08.16 அதிகாலை 12.35 மணியளவில், காத்துக் கொண்டிருந்த போராளிகளின் செவியில் பெரும் அதிர்வு. எத்தனையோ மைல்களுக்கு அப்பால் உறங்கிக் கொண்டிருந்த மக்களின் செவிகளிலே கூட அந்த ஓசை கேட்டதென்றால் காங்கேசன்துறையில் நின்றிருந்த இராணுவத்தினரைப் பற்றிச் சொல்லவா வேண்டும்?

எல்லோருக்குமே பரபரப்பு.

தமது கனவுக் கோட்டைகளில் ஒன்று தகர்ந்ததால் ஸ்ரீலங்கா இராணுவத் தலைமை பரபரப்படைந்தது.

> **"என்னம்மா, ஏதாவது சொல்ல நினைக்கிறாயா?"**
> **– லெப். கேணல் நளாயினி.**
> **"உங்கட அன்பும், அண்ணையின்ரை (தலைவரின்) அன்பும் எப்பவும் எனக்கு இருக்கவேணும்"**
> **– கப்டன் அங்கயற்கண்ணி.**

## 'அபித' கட்டளைக் கண்காணிப்புக்கப்பல்





கடற்கரும்புலி கப்டன் அங்கையற்கண்ணி
புஸ்பகலா துரைசிங்கம்
மண்கும்பான், யாழ்ப்பாணம்
16.08.1994 யாழ் காங்கேசன் துறைக் கடற்பரப்பில் தரிந்து நின்ற கட்டளைக் கண்காணிப்புக்கலம் மீதான கரும்புலித் தாக்குதல்

**“நான் நல்லூரில திருவிழா நடக்கிற நேரந்தான் சாகவேணும்; அப்பதான் திருவிழாவில அம்மா கச்சான் வித்துவந்த காசு இருக்கும். அந்த காசு இருந்தாத்தான், என்ரை நினைவுநாளுக்கு வீட்டை போற பிள்ளைகளுக்கு [சக பெண் போராளிகளுக்கு] அம்மாவாலை சாப்பாடு குடுக்க ஏலும்”.**

**– கப்டன் அங்கயற்கண்ணி.**



## தமிழீழத் தேசிய தலைவர் அவர்களோடு முதற் கடற் கரும்புலி அங்கயற்கண்ணி

‘எங்கடை பிள்ளையள்தான் எங்கையோ ஆமியை அடிச்சிட்டாங்கள் போல. இன்னும் எவ்வளவு நேரம் கிடக்குது விடியிறத்துக்கு?’

என்று, பத்திரிகையைப் பார்த்துச் செய்தியறிய வேண்டும் என்ற ஆவலில் மளமளவென நடு இரவிலேயே படுக்கையைச் சுருட்டி வைத்தவர்களும்,

‘ஆர் பெத்த பிள்ளையோ? எப்பதான் எங்களுக்கும் பிள்ளைய ளுக்கும் விடியப் போகுதோ? என்ற ஆதங்கத்துடன் கண்கள் கலங்கியவாறு சுவரோடு சாய்ந்து அமர்ந்து விடியும்வரை விழித்திருந்தவர்களுமாய் மக்கள் பரபரப்படைந்தனர்.

‘ரைட், கட்டளைக் கப்பல் அவுட்’

என்று உற்சாகத்துடன் கூறிக்கொண்டாலும் அங்கயற்கண்ணியின் நினைவு எல்லோர் மனங்களிலும் மோதியது. போராளிகள் பரபரப்படைந்தனர்.

ஆர்ப்பரித்து எழுந்த அலை …

சீறியெழுந்த அலையை அந்த இருட்டிலேயே மீண்டும் மீண்டும்



நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆவணி 07 23-08-94 செவ்வாய்க்கிழமை ஓசை 186

# கடற்படை தாய்க்கப்பல் தகர்ப்பில் முதற்பெண்கடற்கரும்புலிவீரச்சாவு

காங்கேசன் துறைமுகத்தில் கட்டளைக் கப்பலையும்,டோறா பீரங்கிப் படகையும் தகர்த்து வீர சாதனை புரிந்த தாக்குதலில் வீரச் சாவடைந்த முதலாவது பெண் கடற் கருப்புலி கப்டன் அங்கயற்கண்ணி, தேசியத் தலைவர் வே. பிரபாகரனுடன் காணப்படுகிறார்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறைத் துறைமுகத்தினுள் கடந்த பதினாறாம் திகதி கடற்புலிகளின் விசேட படையணியினர் நடத்திய வெற்றிகரமான தாக்குதலின்போது கடற்கரும்புலிகளைச்சேர்ந்த பெண் போராளி ஒருவர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

தாக்குதலுக்குச் சென்ற கடற்புலிகளின் விசேட அணியில் அங்கம் வகித்த கடற்கரும்புலியான கப்டன் அங்கயற்கண்ணி என்பவரே வீரச்சாவைத் தழுவிக்கொண்டவராவார். இவர் கடற்கரும்புலிகளில் வீரச்சாவடைந்த முதற்பெண் போராளியுமாவார்.

கடற்புலிகளின் விசேட படையணியினர் மேற்கொண்ட இல் வெற்றிகரமான தாக்குதலில், சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான கட்டளையிடும் தலைமைத் தாய்க்கப்பலும், அதிவேகப் பீரங்கிப் படகான டோராவும் மூழ்கடிக்கப்பட்டதும், பெருமளவு கடற்படையினர் கொல்லப்பட்டதும் தெரிந்ததே. இத்தாக்குதலானது சிறிலங்கா கடற்படைக்கு ஏற்பட்ட பாரிய இழப்பு என்பதும் குறிப்பிடத்தக்கது.

இம்மகத்தான சாதனை படைத்த தாக்குதலில் வீரச்சாவடைந்த பெண் கடற்கரும்புலியான,

★ கப்டன் அங்கயற்கண்ணி,
புஸ்பகலா துரைசிங்கம்,
மண்கும்பான் மேற்கு,
5 ஆம் வட்டாரம்,
வேலணை.
தற்போதைய முகவரி:
மணியர்பதி வீதி,
கொக்குவில் மேற்கு,

என்பவருக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் தனது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளது.



# எல்லையை எதிரி தொடுகின்றபோதினில் எரிமலையாகி நின்றார் – இவர் அலையெனப் பகை எழுந்திட்டபோதும் அஞ்சுதல் மாட்டோம் என்றார் – வீரர் அன்னை நிலமிது அடிமைப்படவோ? என்றே ஆவி தந்தார்.

உற்றுப் பார்த்தார்கள்.

‘என்னோடு கலந்துவிட்ட என் மகளை எதற்காக நீங்கள் வீணாகத் தேடுகின்றீர்கள்?’

என்று தம்மைப் பார்த்துக் கேட்பது போன்று ஆர்ப்பரித்த கடலைப் பார்த்து, ‘ஏன் நாங்களெல்லாம் உனக்குப் பிள்ளையள் இல்லையோ? ஏன் எங்களை மட்டும் விட்டிருக்கிறாய்?’

என்று மனதுக்குள் கோபப்பட்டுக் கொண்டார்கள். ஆனால் அடுத்த நிமிடமே கோபம் மாறி,

‘எங்கள் தோழிகள், தோழர்களையெல்லாம் சுமக்கின்றவள் இவள்தானே’ என்ற எண்ணமே மேலோங்கியது. அங்கயற் கண்ணியின் நினைவு பாரமாய் அழுத்த, கனத்த இதயங் களோடு திரும்பினார்கள். காங்கேசன்துறைக் கடற்பரப்பில் காற் றோடு கலந்த அங்கயற்கண்ணி, ஒவ்வொரு போராளியினது குருதிச் சுற்றோட்டத்துடனும் கலந்துகொண்டாள். ஆழ் மன திலே அழுத்தமாகப் பதிந்துகொண்டாள். இன்னும் இன்னும் கோடிக்கணக்கான நூற்றாண்டுகளுக்குப் பின்னரும் பேசப்படப் போகும் வரலாறாக ஆனாள்.

தீவுப்பகுதியைக் கைப்பற்றும் நோக்கில் சிறீலங்கா இராணுவம் எடுத்த நடவடிக்கையின் ஒரு கட்டமாக வேலணையை ஆக்கிர மிக்க முயன்ற போது, தாய்க்கோழி தன் குஞ்சுகளைப் பருந்திட மிருந்து பாதுகாக்க வேண்டித் தன்சிறகுகளை விரித்து குஞ் சுகளை மூடிக்கொண்டது. இன்று அந்தக் குஞ்சு பருந்தின் காலொன்றையே முறித்துப் போட்டுவிட்டது.

இந்திய வல்லாதிக்கத்தால் கேணல் கிட்டு அவர்களும் அவரின் தோழர்களும் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட நாளில் தன்னை விடுதலைப் புலியாக்கியவள் தன்னையும் சரித்திரமாக்கினாள்.






# சிங்களச் சிறைகளில் சாவினைத் தழுவியவர்களிற்கு வணக்க நிகழ்வு!

யூலை 31, 2023

சிங்களச் சிறைகளில் சாவினைத்தழுவிய தமிழ் அரசியல் கைதிகளிற்கான நினைவேந்தல் இன்று யாழில் நினைவு கூறப்பட்டது.

அவசரகாலச்சட்டம் மற்றும் பயங்கரவாதத்தடைச்சட்டம் போன்றவற்றின் கீழ் சந்தேகத்தின் பெயரில் பால், வயது வேறுபாடின்றி கைதுசெய்யப்பட்டு சிறைப்படுத்தப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழர்கள், இனத்தின் பெயரில் வஞ் சிக்கப்பட்டு சிறைப்படுத்தப்பட்டவர்களாவர்.

இவ்வாறு சிறைகளில் அடைக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளில் நூற்றுக்கணக்கானவர்கள் திட்டமிடப்பட்ட சிறைக்கலவரங்களாலும் நோய்வாய்ப்பட்ட நிலையில் போதிய மருத்துவ பராமரிப்பின்றியும் சிறையின் நான்கு சுவர்களுக்குள்ளேயே நீதியின்றி பரிதாபகரமாக கொல்லப் பட்டுள்ளார்கள்.

1983 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்ட யூலைக் கலவரத் தின்போது, வெலிக்கடை சிறையின் அதியுயர் பாதுகாப்புப் பிரிவுக்குள் தடுத்துவைக்கப்பட்டிருந்த குட்டிமணி, தங்கத் துரை, ஜெகன் உட்பட்ட 54 தமிழ் அரசியல் கைதிகள் அரசின் கைக்கூலிகளால் சிறைக் கொட்டடிகளுக் குள்ளேயே கதறக் கதற கொன்றொழிக்கப்பட்டார்கள்.






அதேபோன்று, 1987 இல் பூசா தடுப்புமுகாமில் 9 தமிழ் அரசியல் கைதிகளும் , 1997 இல் களுத்துறை சிறையில் 5 தமிழ் அரசியல் கைதிகளும் கொடூரமாக சாகடிக்கப் பட்டார்கள்.

2001 ஆம் ஆண்டில் பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் மீது இனவெறிகொண்ட காடையர்கள் நடாத்திய மிருகத் தனமான தாக்குதலில் 27 தமிழ் அரசியல் கைதிகள் வெட்டியும் குத்தியும் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

2012 இல் வவுனியா சிறைச்சாலையில் தடுத்துவைக்கப் பட்டிருந்த இரண்டு தமிழ் அரசியல் கைதிகள் சிறை யதிகாரிகளாலும் விஷேட அதிரடிப்படையினராலும் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இவைமட்டுமல்ல, யுத்த காலங்களில் சிறைப்பிடிக்கப் பட்டவர்கள், நீண்டநெடுங்காலமாக கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள நிலையில், இவர்களில் பலர் உடல் உள தாக்கங்களாலும் போதிய மருத்துவம் மற்றும் போஷாக்கான உணவின் மையாலும் நோய் நொடிகளுக்கு ஆளாகி சிறைக்குள் சாவடையும் பெருந்துயரம் அன்மைக்காலம்வரை இடம் பெற்றுக்கொண்டுதானிருக்கிறது.

இந்நிலையில் குரல் அற்றவர்களின் குரல் அமைப்பானது, ஆண்டுதோறும் யூலை -25 ஆம் திகதியை “உயிர்க் கொடையளித்த தமிழ் அரசியல் கைதிகள் நினைவேந்தல் நாள்” என பிரகடனம் செய்துள்ளது.

இந்நிலையில் இன்று முன்னெடுக்கபட்ட நினைவேந் தலில் ஆறுதிருமுருகன், குருமுதல்வர் ஜெபரட்ணம் உள் ளிட்ட பலரும் பங்கெடுத்திருந்தனர்.

குரலற்றவர்களின் குரல் பணியிடத்தில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வில்,

பொதுச்சுடரினை தெல்லிப்பளை துர்க்கையம்மன் தேவஸ்தான தலைவர் ஆறுதிருமுருகன் அவர்கள் ஏற்றி வைத்தார்.

அதனையடுத்து மலர் மாலையினை குருமுதல்வர் ஜெபரட்ணம் அடிகளார் அணிவித்தார்.

தொடர்ந்து, மலரஞ்சலி நிகழ்வும் அதன்பின், நினைவு சுடரும் ஏற்றிவைக்கபட்டதுடன் நினைவுரைகளும் இடம் பெற்றன.

இந்நிகழ்வில், சர்வமதப் பிரதிநிதிகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், முன்னாள் போராளிகள், விடுதலையான அரசியல் கைதிகள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# ஊடகவியலாளர் நிலக்சனின் 16ஆம் ஆண்டு நினைவேந்தல்!

ஆகத்து 01, 2023

ஊடகவியலாளர் சகாதேவன் நிலக்சனின் 16ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் இன்றைய தினம் செவ்வாய்க் கிழமை நடைபெற்றது.



யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் நிலக்சனின் உருவ படத்திற்கு மலர் மாலை அணியப்பட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டு, சுடரேற்றப் பட்டது.

யாழ்.பல்கலை கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்தின் ஊடக கற்கை மாணவனும், சாரளம் சஞ்சிகையின் ஆசிரியரும், யாழ்.மாணவர் பேரவையின் முன்னாள் தலைவருமான சகாதேவன் நிலக்சன் 2007ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01ஆம் திகதி அவரது வீட்டில் இருந்த வேளை, அவரது வீட்டிற்கு அதிகாலை 5 மணியளவில் சென்ற ஆயுதாரிகள் நிலக் சனை வெளியே அழைத்து அவரது பெற்றோர்கள் முன்னிலையில் சுட்டுப்படுகொலை செய்தனர்.



# சட்டவிரோத திஸ்ஸ விகாரை கட்டுமானத்திற்கு எதிராக கவனயீர்ப்புப் போராட்டம்...!

ஆகத்து 01, 2023



யாழ்ப்பாணம், தையிட்டியில் சட்டவிரோதமாக கட்டப்பட்டுள்ள திஸ்ஸ விகாரை கட்டுமானத்திற்கு எதிரான கவனயீர்ப்புப் போராட்டம் இன்று செவ்வாய்க்கிழமையும் (01) இடம்பெறுகின்றது.

தையிட்டியில் தனியார் காணிகளை ஆக்கிரமித்து சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக் கட்டுமானத்தை அகற்ற வேண்டுமென வலியுறுத்தியும் தனியார் காணிகளை உரிமையாளர்களிடம் ஒப்படைக்க வேண்டுமென வலியுறுத்தியும் கடந்த மே 03 ஆம் திகதி தொடக்கம் எதிர்ப்புப் போராட்டம் நடாத்தப்பட்டு வருகின்றது.

அதன் தொடர்ச்சியாக திங்கட்கிழமை (31) பி.ப 4.00 மணிக்கு ஆரம்பித்த கவனயீர்ப்புப் போராட்டம் செவ்வாய்க்கிழமை (01) பி.ப 4.00 மணிவரை இடம்பெறவுள்ளது.

# வாழ்வாதாரத்தை சிதைக்கும் நோக்கோடு அரசு செயற்படுகிறது!

## முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன்

ஆகத்து 01, 2023

வாழ்வாதாரத்தை சிதைக்கும் நோக்கோடு அரசு செயற்பட்டு வருகிறது என முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் குற்றச்சாட்டினை முன்வைத்துள்ளார்.



மகாவலி எல் என்னும் பெயரில் ஆக்கிரமிப்புக்கள் இடம்பெறுவதாக மக்களால் தெரிவிக்கப்பட்டதையடுத்து களவிஜயம் செய்ததன் பின்னர் இன்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் அக்கரவெளி எனும் பகுதி அதற்கு அருகில் மணற்கேணி என்ற இடம் அப்பகுதியிலும் காணிகள் அபகரிப்பு நடைபெறுவதாக ஏற்கனவே சுட்டிகாட்டியிருந்தோம்.

தற்போது அக்கரவெளி பகுதியில் தமிழர்கள் வாழ்வாதாரத்திற்காக பயன்படுத்தப்பட்ட பூர்விக காணிகளை மக்கள் சென்று பார்த்த போது வன இலாகாவினுடைய பொறுப்பில் இருந்த காணிகள் மகாவலிக்கு விடுவித்து கொடுத்திருக்கிறார்கள்.

11 சிங்கள மக்களுக்கு தலா 25 ஏக்கர் படி வழங்கப்பட்டுள்ளதாக அறியக்கூடியதாக உள்ளது. இவ்வாறு கொக்குளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுகேணி போன்ற ஆறு கிராம சேவையாளர் பிரிவிலுள்ள ஏற்கனவே மகாவலி எல் திணைக்களமானது, மக்களிடம் எத்தனை ஏக்கர் இருந்தாலும் இரண்டு ஏக்கர் வீதம் தான் தரமுடியும் என கூறிய போது தங்களுடைய காணிகள் தங்களுக்கே வேண்டும் என விட்டுக் கொடுக்காது இருந்தார்கள்.

இவ்வாறு இருக்கும் போது தமிழர்களுடைய பூர்வீக காணிகள், வாழ்வாதாரத்திற்கு பயன்படுத்தப்பட்ட காணிகள் எங்களுக்கோ, மாவட்ட செயலகத்திற்கோ, பிரதேச செயலகத்திற்கோ தெரியாமல் மகாவலி எல் என்ற அதிகார சபையின் ஊடாக கொழும்பில் உள்ள சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டிருப்பதாயின் இதனை யாரிடம் முறையிடுவது.

மக்கள் வாழ்வாதாரத்திற்காக எங்கு சென்று முட்டிக்கொள்வது. இவ்வாறு கொடுமையான வேலையை செய்து கொண்டிருக்கிறார்கள். இதனை இலகுவான முறையில் வனவள திணைக்களமானது மாகவலிக்கு விடுவித்து கொடுத்திருக்கின்றது.

மகாவலிக்கு விடுவித்து எங்கோ இருக்கின்ற சிங்கள மக்களுக்கு கொடுக்கின்றது. எங்களுக்கு அருகாமையிலுள்ள காணிகள் விடுவிக்கப்படவில்லை. கிட்டத்தட்ட 1500 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் வனவளத்திணைக்களத்திடம் இருந்து பெற்று சிங்கள மக்களுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகளை மகாவலி அதிகார சபை மேற்கொள்வதாக மக்களாலும், அதிகாரிகளாலும் அறியக்கூடியதாக உள்ளது.

சொந்த காணிகளில் விவசாயம் செய்ய முடியாத வகையில் இலங்கை அரசாங்கமானது தமிழ் இனத்தை அழிக்கும் நோக்கோடும் வாழ்வாதாரத்தை சிதைக்கும் நோக்கோடும் செயற்பட்டு கொண்டு வருகின்றது என்பதனை சுட்டி காட்டுகின்றோம்.

இதற்கான சரியான தகவல் கிடைத்ததும் ஒரு போராட்டத்தை மேற்கொள்வோம் என்பதை கூறிக்கொள்கின்றேன் என தெரிவித்தார்.

# மட்டக்களப்பின் மாதவனை மயிலத்தமடு பகுதியில் அகற்றப்பட்ட புத்தர் சிலை மீண்டும் நிறுவப்பட்டுள்ளது!

ஆகத்து 02, 2023

மட்டக்களப்பின் மாதவனை மயிலத்தமடு பகுதியில் 2019 இல் அகற்றப்பட்ட புத்தர் சிலை மீண்டும் அதே இடத்தில் நிறுவப்பட்டுள்ளது.



அப்பகுதியில் கடந்த சில நாட்களாக சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில் புதிதாக புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

மாதவனை மயிலத்தமடு பகுதியில் அதிகமான பண்ணையாளர்கள் கால்நடைகளை மேய்ப்பதற்காகவும் தங்களது வாழ்வாதாரத்தை மேற்கொள்வதற்காகவும் அப்பகுதி ஒதுக்கப்பட்டிருந்தது.

ஆனால் கடந்த சில வருடங்களாக மாதவனை மயிலத்தமடு பகுதியில் மகாவலியின் தலையீடு காரணமாக பண்ணையாளர்களும் கால்நடைகளும் பாதிப்புக்கு உள்ளானதுடன் பல கால்நடைகளும் சுடப்பட்டும் கத்திகளால் வெட்டப்பட்டும் உயிரிழந்த சம்பவங்கள் அரங்கேறி இருந்தது.

அதே வேளையில், அங்கு சென்று வருகின்ற பண்ணையாளர்களின் உயிர்களும் உத்தரவாதம் இல்லாதா நிலையும் என்ன நடக்கும் என்று தெரியாத ஒரு நிலைமையும் உருவாகி இருந்தது.

முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா ஜகம்பத் விவசாயம் செய்வதற்காகவும் பயிர் செய்வதற்காவும் கால்நடைகளின் இடமாக கருதப்படும் மாதவனை மயிலத்தமடு பகுதியில் அத்துமீறிய சிங்கள குடியேற்றங்களை உருவாக்கி அவர்களை பயிர்செய்கை மற்றும் விவசாயம் போன்ற தொழில்களில்



ஈடுபடுத்தி பண்ணையாளர்களுக்கும் மகாவலிக்கும் பெரும்பான்மை இன மக்களுடனும் முரண்பாடு ஏற்படுத்தும் விதத்தில் பல முன்னெடுப்புகளை முன்னெடுத்திருந்தார்.

மயிலத்தமடு மாதவணையில் மகாவலியால் 2019 இல் அகற்றப்பட்ட விகாரை இருந்த இடத்தில் 2023.07.30 ஆம் திகதி மீண்டும் துப்பரவு பணியில் ஈடுபட்டுவருவதாகவும் மாறாக பண்ணையாளர்களை மகாவலி அதிகாரிகள் கைது செய்வதற்கு முயற்சிக்கின்றனர் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

# யாழ் வல்வைப் படுகொலைகளின் 34ம் ஆண்டு நினைவேந்தல்!

## 1989 ம் ஆண்டு ஓகஸ்ட் 2ம் திகதி வல்வெட்டித்துறை, அதனை அண்டிய பகுதிகளில் இந்திய இராணுவத்தால் 66 தமிழ் பொதுமக்கள் சுட்டும், வெட்டியும், எரித்தும் கொல்லப்பட்டனர்!

ஆகத்து 02, 2023

யாழ். மாவட்டத்தில் வடமராட்சிப் பகுதியிலுள்ள வல்வெட்டித் துறைக் கிராமம் ஏறக்குறைய மூன்றரை மைல் நீளமும், சராசரி அரை மைல் அகலத்தையும் கொண்டு நான்கு அயற் கிராமங் களையும் உள்ளடக்கிய நகரசபையாக உள்ளது. அன்று ஏறக் குறைய முன்நூறு ஏக்கர் நிலப்பரப்பை உள்ளடக் கிய ஒரு சிறிய பட்டணமாக இருந்தது.





1989ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இரண்டாம், மூன்றாம், நானகாம் திகதிகளில் இந்திய இராணுவம் வல்வெட்டிதுறை யில் ஊரடங்கு உத்தரவினைப் பிறப்பித்தது. 1989ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் இரண்டாம் நாள் ஊரிக்காடு இந்திய அமைதிப் படை முகாமிலிருந்தும், பொலிகண்டி இந்திய அமைதிப்படை முகாமிலிருந்தும் மக்கள் குடியிருப்புகளை நோக்கி வந்த இந்திய அமைதிபபடைகப் பிரிகேடியர் “சங்கர் பிரசாத்” தலைமை தாங்கினார். இவருடன் இராணுவ அதிகாரிகள் கப்டன் மேனன், கப்டன் கபூர் ஆகியோரும் செயற்பட்டார்கள். இவர்களின் வழிகாட்டலின் கீழ் சீக்கியப் படையணி, கறுப்புப் பூனைப் படையணி, கூர்க்காப் படையணிகள் போன்றன பங்குபற்றின.

அன்றையதினம் ஊரடங்கு என்பதால் மக்கள் அனைவரும் வீடுகளில் இருந்தனர். வல்வெட்டித்துறை நகரைச் சுற்றி வளைத்த இந்திய இராணுவம் வீடுகளுக்குச் சென்று மாணவர் கள், பெண்கள், வயோதிபர்களை வெட்டியும், சுட்டும், உயி ருடன் எரித்தும் கொன்றனர். சில வீடுகளில் இளைஞர்களைக் கைதுசெய்து வல்வெட்டித்துறைச் சந்தியில் நிறுத்திப் படுகொலை செய்தார்கள்.

பதினைந்து திருமணமான பெண்கள் உட்பட ஐம்பதிற்கும் அதிகமான இளம் பெண்கள் பாலியல் வல்லுறவிற்குட்படுத் தப்பட்டார்கள். பல இந்துக் கோயில்கள் சேதமாக்கப்பட்டன. வழி பாட்டுத்தலங்களில் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் உறவினர் முன்னிலையில் ஆலயங்களிலேயே சுடப்பட்டார்கள். பல நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகளும், கடைகளும் எரியூட்டப்பட்டு அழிக்கப்பட்டன. இந்திய இராணுவத்தினரால் மேற்கொள்ளப் பட்ட இச்செயலை மக்கள் “இந்தியாவின் மைலாய்ப்படு கொலை” என அழைக்கின்றார்கள்.

இச்சம்பவத்தில் சிறார்கள், மாணவர்கள், பெண்கள், இளை ஞர்கள், வயோதிபர்கள் என அறுபத்தாறிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் வரை உயிரிழந்தார்கள்.

கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (இல பெயர் தொழில் வயது)

01 இராஜலிங்கம் சதீஸ்குமாபர் - மாணவன், 18
02 இராசையா இராஜரட்ணம் - கடற்றொழில், 33
03 இராமச்சந்திரன் நவரத்தினம் - வியாபாரம், 26
04 இராசகுரு யவனராஜ் - மாணவன், 13
05 இராசகுரு புஸ்பராணி - வியாபாரம், 45
06 இராசா ஜெயமயில் - வியாபாரம், 20





07 இராசமாணிக்கம் நடராசா - தபாலதிபர், 62
08 ஈஸ்வரமூர்த்தி இராசலட்சுமி - 24
09 நாகராசா ஞானகுலசிங்கம் - கடற்றொழில், 22
10 நாகலிங்கம் பவப்பிருந்தா - மாணவி, 14
11 நடராசா நல்லமுத்து - வீட்டுப்பணி, 72
12 நடராசா சிவகுமாரன் - மாணவன், 25
13 நடராசா ரவீந்திரன் - கடற்றொழில், 31
14 நல்லரெத்தினம் பானுகோபால், - இரும்பு வேலை, 23
15 கந்தசாமி தங்கராசா - வியாபாரம், 70
16 கந்தசாமி வேலும்மயிலும் - தொழிலாளி, 45
17 கதிர்காமத்தம்பி சிவநேசராசா - வியாபாரம், 36
18 குமாரவேல் செல்வானந்தவேல் - மாணவன், 18
19 கணேசலிங்கம் சசி - குழந்தை, 01
20 குழந்தைவடிவேல் சண்முகவடிவேல் - தொழிலாளி, 37
21 குணரட்ணம் ,ராசசேகரம் - கடற்றொழில், 18
22 பாலகிருஸ்ணன் பிரேமதாஸ் - சாரதி, 20
23 பாலசுப்பிரமணியம் மகேந்திரதாஸ் - மாணவன், 15
24 பாலசுப்பிரமணியம் யோகேந்திரராசா - மீன்பிடித்தல், 28
25 பீற்றர் விஜயராஜன் கிருஸ்ணவதனா - வீட்டுப்பணி, 33
26 தளையசிங்கம் ஜெயமோகன் - கடற்றொழில், 18
27 தளையசிங்கம் சிவகுமார் - கடற்றொழில், 21
28 துரைராசா நாகதாஸ் - மின்னியலாளர், 28
29 தங்கவேலாயுதம் ஜெயக்குமார் - மெக்கானிக், 20
30 தங்கவேலாயுதம் சாம்பசிவம் - கடற்றொழில், 18
31 தணிகாசலம் ரவிச்சந்திரன் - வியாபாரம், 28
32 முருகேசு செல்லத்துரை - சாரதி,
33 அப்பாத்துரை மதிவாணன் - வியாபாரம், 18
34 ஆதிஅருணாசலம் பராசர் - வியாபாரம், 20
35 ஆதிஅருணாசலம் பரம்சோதி - வியாபாரம், 18
36 ஆதிஅருணாசலம் சுந்தரேஸ்வரன் - மாணவன், 12
37 அமிர்தலிங்கம் உமாதேவி - 26
38 அருள்பிரகாசம் சுவர்ணதாஸ் - கடற்றொழில், 19

39 அருளப்பு இலங்கைநாதன் - கடற்றொழில், 22
40 அருணாச்சலம் இளையபெருமாள் - துறைமுக ஊழியர், 76
41 ஆறுமுகநாதன் இராமச்சந்திரன் - மேசன், 41
42 பொன்னுத்துரை இராசேந்திரம் - மீனவர், 23
43 பொன்னுத்துரை சண்முகலிங்கம் - சாரதி, 43
44 பொன்னம்பலம் றஞ்சிதகுமார் - கடற்றொழில், 25
45 பொன்னையா காளிதாஸ் - இரும்பு வேலை, 26
46 செந்திவேல் சக்திவேல் - கடற்றொழில், 24
47 சோதிலிங்கம் றமேஸ்குமார் - கடற்றொழில், 18
48 செல்லையா யோகராசா - கமம், 19
49 செல்வக்கதிரமலை மயில்வாகனம் - பரிசோதகர், 55
50 செல்வசுந்தர் தவசீலன் - மாணவன், 07
51 வெங்கடாச்சலம் சுப்பிரமணியம் - நிலஅளவை அதிகாரி,
52 வேலும்மயிலும் செல்வச்சந்திரன் - மாலுமி, 26
53 சுந்தரமூர்த்தி உமாசங்கர் - வியாபாரம், 22
54 சுந்தரலிங்கம் ஞானவேல் - கடற்றொழில், 21
55 சுப்பிரமணியம் அமுதன் - வர்த்தகர், 28
56 சுப்பிரமணியம் பேரின்பம் - மாணவன், 20
57 சின்னத்துரை தம்பித்துரை - கடற்றொழில், 60
58 சின்னத்தம்பி கணேசலிங்கம் - தொழிலாளி, 25
59 சின்னத்தம்பி சிவலிங்கம் - சீவல், 50
60 சின்னவன் கந்தன் - தொழிலாளி, 30
61 சிவப்பிரகாசம் சபாநாயகம் - வியாபாரம், 77
62 சிவபாக்கியம் கந்தசாமி - சலவைத்தொழில், 42
63 சிவலிங்கம் இராமநாதன் - சாரதி, 35
64 வடிவேலு குமாரசாமி - தொழிலாளி, 89
65 விஜயரட்ணம் முரளிதரன் - கடற்றொழில், 20
66 வினாயகமூர்த்தி அருள்சோதி - ஊழியர், 29








# கிளி – பூநகரி பொன்னாவெளியில் ஜப்பான் சீமெந்து தொழிற்சாலைக்கு எதிர்ப்பு தெரிவித்து பொது மக்கள் ஆர்ப்பாட்டம்!

ஆகத்து 03, 2023

கிளிநொச்சி – பூநகரி, பொன்னாவெளியில் அமைக்கப்படவுள்ள சீமெந்து தொழிற்சாலைக்கு எதிராக பொது மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை இன்று முன்னெடுத்துள்ளனர்.

வலைப்பாடு, கிராஞ்சி, வேரவில் கிராம மக்களும், அப்பிரதேச மக்கள் அமைப்புக்களும் ஒன்று சேர்ந்து இன்று ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

பொன்னாவெளி கிராமத்தில் சீமெந்து தொழிற்சாலைக்காக பல ஏக்கர் காணியை சுவீகரித்து, பல மீற்றர்கள் ஆழத்தில் சீமெந்து தொழிற்சாலைகிகான கல் அகழ்வு பணிகள் மேற்கொள்வதற்கான ஆரம்ப கட்ட பணிகள் இடம்பெற்று வருகின்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

விவசாய நிலங்களை அழிக்காதே, ஏழை மக்களின் வளங்களை சுரண்டி பிழைக்காதே, சுண்ணக்கல் அகழ்வு வேண்டாம், டோக்கியோ சீமெந்து கம்பனியே வெளியேறு போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளையும், கோசங்களையும் எழுப்பியவாறு மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.



இதனிடையே அரச ஆதரவு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பொன்னவெளியிலிருந்து முருகைக்கற்களை அகழ்வதில் முனைப்பு காண்பித்துவருவது குறிப்பிடத்தக்கது.

# யாழ். சுழிபுரம் பறாளை முருகன் ஆலயம் பௌத்த மயமாகும் ஆபத்து!

ஆகத்து 03, 2023

யாழ்ப்பாணத்தின் சுழிபுரம் பறாளை முருகன் ஆலயத்தில் உள்ள நூற்றாண்டு பழமைவாய்ந்த அரச மரம் சங்கமித்தையுடன் தொடர்புடைய அரச மரம் என இலங்கை அரசினால் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.



அரச மரம் தொல்பொருள் சின்னமாக அறிவித்து வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதால், எதிர்காலத்தில் அரச மரத்தை தொல்பொருள் திணைக்களத்தினர் ஆக்கிரமித்து, புத்தர் சிலைகளை நிறுவி , முருகன் ஆலயத்தை ஆக்கிரமித்து விடுவார்களோ எனும் அச்சம் அப்பகுதி மக்களிடம் எழுந்துள்ளது.

அதேவேளை, 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15ஆம் திகதி பிக்குகள் சிலர் ஆலயத்திற்கு வந்து சென்ற நிலையில், ஆலய அரச மரத்தின் கீழ் புத்தர் சிலையை வைத்து பிரித் ஓத முனைப்பு காட்டி இருந்தனர்.

அதற்கு ஆலய பக்தர்கள் மற்றும் ஊரவர்கள் எதிர்ப்பு காட்டியதால், பிக்குகள் அங்கிருந்து வெளியேறி இருந்தனர்.

இந்நிலையிலையே தற்போது குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதனிடையே பறாளை முருகன் ஆலயத்தில் உள்ள அரச மரத்தை சங்கமித்தை வந்து இறங்கிய பின் அவருடன் தொடர்புபட்ட மரமாக சித்திரித்து வர்த்தமானி வெளியிட்டமை கலாசார அழிப்பு என வட மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் குற்றம்சாட்டியுள்ளார்.



அத்துடன் வெள்ளரசு மரம் உள்ள இடமெல்லாம் தொல்லியல் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக்குள் வருகிறதா எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே தொல்லியல் திணைக்களத்தைப் பொறுத்தவரை, அது பௌத்த மதத்திற்கு மாத்திரமான ஒன்றாகவே தனது நடவடிக்கைகளை இப்போது வரை மேற்கொண்டுவருகிறதெனவும் குகதாஸ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

# மலையக எழுச்சிப்பயணத்திற்கு ஆதரவாக யாழில் பேரணி!

ஆகத்து 03, 2023

மலையக எழுச்சிப் பயணத்துக்கு ஆதரவு வழங்கும் நோக்கில் யாழ்ப்பாணத்தில் இன்றைய தினம் வியாழக்கிழமை பேரணி இடம்பெற்றது.

யாழ்ப்பாண மத்திய பேருந்து தரிப்பிடத்துக்கு முன்பாக காலை கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டு , பேரணி இடம்பெற்றது.

இந்த பேரணியை மாண்புமிகு மலையக மக்கள் மற்றும் யாழ். சிவில் சமூகம் ஆகிய அமைப்புகள் இணைந்து ஏற்பாடு




செய்திருந்தன.




“வேர்களை மீட்டு உரிமை வென்றிட” எனும் தொனிப் பொருளில் தலைமன்னாரில் கடந்த வெள்ளிக்கிழமை மலையகம் 200ஐ முன்னிட்ட இந்நடைப்பயண நிகழ்வின் ஏழாம் நாளாக இன்றைய தினம் வியாழக்கிழமை கருதப்படுகிறது.

# சுழிபுரம் பறாளை முருகன் ஆலயத்திலுள்ள அரச மரத்தை பௌத்த சின்னமாக அறிவிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து சங்கானையில் போராட்டம்!

ஆகத்து 05, 2023

சுழிபுரம் பறாளை முருகன் ஆலயத்திலுள்ள அரச மரத்தை பௌத்த சின்னமாக அடையாளப்படுத்தி வெளியிடப்பட்ட வர்த்தகமானி அறிவிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் இன்று போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.




சங்கானை பேருந்து தரிப்பிடத்திற்கு முன்னாள் மாலை 3.30 மணியளவில் இடம்பெற்ற இப் போராட்டத்தில் பாராளுமன்ற



உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் உட்பட கட்சி ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.




முன்னதாக காலை யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் பொது மைப்புக்கள் உடன் இணைந்து ஆர்ப்பாட்டமொன்றை





நடத்தியிருந்தது.

# யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சுழிபுரத்தில் போராட்டம்!

ஆகத்து 05, 2023

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இன்றைய தினம் சனிக்கிழமை சுழிபுரத்தில் போராட்டமொன்று இடம்பெற்றது.



போராட்டத்தை தொடர்ந்து சுழிபுரம் சந்தியில் இருந்து பாறளை முருகன் ஆலயத்தை நோக்கி பேரணி பயணிக்கிறது.

யாழ்ப்பாணம் - சுழிபுரம் பறாளை முருகன் ஆலயத்தில் உள்ள அரச மரத்தை சங்கமித்தை நாட்டிய மரம் என வெளியிடபட்டட அரச வர்த்தமானி மீளப்பெறப்படவேண்டும் என தெரிவித்தே




குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

போராட்டத்தின் போது தொல்லியல் திணைக்களத்திற்கு எதிராக கோஷங்கள் எழுப்பப்பட்டதுடன் பதாகைகளையும் போராட்ட காரர்கள் தாங்கியிருந்தனர்.

போராட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்கள், மத குரு மார்கள், சைவ அமைப்புக்கள், சிவில் அமைப்புகள், மக்கள் பிரதிநிதிகள் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# தலைமன்னார் தொடக்கம் மாத்தளை வரையிலான மாண்புமிகு மலையக மக்கள் 200 எழுச்சி பேரணிக்கு வலுச்சேர்க்கும் வகையில் முல்லைத்தீவில் இருந்து ஆரம்பமான ஆதரவு பேரணி இன்று (03.08.2023) கிளிநொச்சி டிப்போ சந்தியை வந்தடைந்தது!








# 2010ஆம் ஆண்டுக்குப் பின் வடக்கு கிழக்கில் 83 இடங்களில் விகாரையைக் கட்டியுள்ளனர்!

## பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன்



ஆகத்து 05, 2023

2010ஆம் ஆண்டுக்குப் பின் வடக்கு கிழக்கில் 83 இடங்களில் விகாரையைக் கட்டியுள்ளனர்.

உண்மையைச் சொன்ன வரலாற்று ஆசிரியர்களை புறக் கணித்து பொய்களைப் புனைந்து பொய்களுக்கூடாக இந் நாட் டிலுள்ள தமிழ் மக்களை பூர்வீகக் குடிகள் இல்லை என்பதை வெளிப்படுத்த முயற்சிக்கின்றனர் என பாராளுமன்ற உறுப் பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற் பாட்டில் இன்றைய தினம் சுழிபுரத்தில் போராட்டமொன்று இடம் பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழர்கள் வாழும் இடங்களைச் சிங்களமயப்படுத்துவதற்காக ஆரம்பத்தில் யுத்தத்தின் மூலமாக தமிழர்களை அழித்து நிலங் களைப் பறித்து இங்கிருந்து அகற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டது.

யுத்தத்திலே இனப்படுகொலையை செய்தார்கள் என சர்வதேச ரீதியில் எதிர்கொள்கின்றனர். இந்த நேரத்தில் வடக்கு கிழக் கிலுள்ள சைவ சமய அடையாளங்களை பௌத்த அடையாளங் களாக நிலைநிறுத்தி சிங்கள பௌத்த நாடு என நிரூபிக்க நினைக்கின்றனர்.

அந்த முயற்சியின் ஒரு கட்டமாக பறாளாய் முருகன் ஆலயத் திலுள்ள அரச மரத்தை சங்கமித்தை காலத்தில் நடப்பட்டதாகப் புனைந்து செய்தியைப் பரப்புகின்றனர். அதற்கெதிரான போராட் டமாகவே இது இடம்பெறுகின்றது. கடந்த தை மாதம் வர்த்த மானி அறிவித்தல் வெளிவந்ததை தற்போது தான் அவ தானிக்க முடிந்தது. குறித்த வர்த்தமானியின் பிரகாரம் கீரிமலை யில் நேர்த்திக்கடன்ளைச் செய்யும் மடமும் தொல்பொருள் அடையாளங்களென கூறப்படுகின்றது.

குருந்தூர்மலை தொல்பொருள் அடையாளமெனின் எவ்வாறு அங்கு பௌத்த விகாரையை அமைக்க முடியும். தொல்பொருள் அடையாளங்களுக்கு வேலியிட்டு பாதுகாப்பதே உலகத்திலே பேணப்படும் வழக்கம். ஆனால் குருந்தூர் மலையிலே சிவன் ஆலயத்தை மறைத்து பௌத்த விகாரையைக் கட்டி முடித் திருக்கின்றார்கள். அதேபோல் தையிட்டியில் தமிழர்களின் காணியில் விகாரையைக் கட்டியுள்ளனர்.

இவ்வாறு 2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் வடக்கு கிழக்கில் 83 இடங்களில் விகாரையைக் கட்டியுள்ளனர். தற்பொழுதும் இந்த இடத்தில் பௌத்தம் இருந்ததாக கூறி சிங்கள பௌத்தமாக அடையாளப்படுத்த முனைகின்றார்கள். இங்கு தமிழ் பௌத்தம் இருந்ததற்கான அடையாளங்கள் உண்டு.

விஜயன் இலங்கைக்கு வர முன்னரே இலங்கையில் பஞ்ச ஈச்சரங்கள் காணப்பட்டது. வரலாற்று வழியாக சிவனை வழிபடும் நாடாக இருந்ததால் தான் திருமூலர் சிவபூமி என இந்த நாட்டை வர்ணித்துள்ளார்.

உண்மையைச் சொன்ன வரலாற்று ஆசிரியர்களை புறக் கணித்து பொய்களைப் புனைந்து பொய்களுக்கூடாக இந் நாட் டிலுள்ள தமிழ் மக்களை பூர்வீகக் குடிகள் இல்லை என்பதை வெளிப்படுத்த முயற்சிக்கின்றனர்.

இந்த ஆலயத்தில் 1768ஆம் ஆண்டில் எழுதப்பட்ட உறுதியில் எந்தவிதமான அரசமரமும் இருந்ததாக இல்லை. இதை சர்வ தேச சமூகத்திடம் கொண்டு செல்வதற்கும் இது தொடர்பான போராட்டங்களை முன்னெடுப்பதற்கும் தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகள் என்ற வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முழு முயற்சிகளை மேற்கொள்வோம் எனவும் தெரிவித்துள்ளார்.

# வெலிஓயா பகுதியை சேர்ந்த சிங்களவர்களினால் நீதிமன்ற கட்டளையை மீறி தண்ணிமுறிப்பு குளத்தில் மீன்பிடித்த 38 பேர் மக்களால் மடக்கிபிடித்து ஒட்டுசுட்டான் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டது அதில் 4 பேர் தப்பி ஓட்டம்...!

## "தண்ணிமுறிப்புகுளத்தில் நன்னீர் மீன்பிடிப்பதற்கு நீதிமன்ற கட்டளைப்படி ஹிச்சராபுரம் நன்னீர் மீன்பிடி சங்கம், தண்ணிமுறிப்பு நன்னீர் மீன்பிடி சங்கம் ஆகிய இரண்டு சங்கங்களுக்கு மட்டுமே அனுமதியுண்டு" – 05.08.2023








# கடும் வெயிலால் செத்து மடியும் மீன்கள் மக்களுக்கான விசேட அறிவித்தல்!

ஆகத்து 06, 2023

கடும் வெயிலால் முல்லைத்தீவு மல்லாவி ஏரியில் இலட்சக் கணக்கான மீன்கள் செத்து மடிந்துள்ளதால், அந்த மீன்களை பலர் சேகரித்து விற்பனை செய்யத் தொடங்கியுள்ளனர்.

மல்லாவி மக்கள் இறந்த மீன்களை சேகரித்து மிகக் குறைந்த விலைக்கு விற்பனை செய்ய ஆரம்பித்துள்ளதாகவும், எனவே உடனடியாக மீன்களை விற்பனை செய்ய பொலிஸார் அனுமதிக்கக் கூடாது எனவும் சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதன்படி, மல்லாவி குளத்தில் மீன் விற்பனை செய்பவர்களை கைது செய்ய பொலிஸார் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு சுகாதார அதிகாரிகள் மல்லாவி ஏரிக்கு சென்று மீன்கள் உயிரிழந்தமை தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன், முதற்கட்டமாக அதிக சூரிய ஒளியினால் மீன்கள் இவ்வாறு உயிரிழந்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் ஊகிக்கின்றனர்.

இறந்த மீன்களின் மாதிரிகளை எடுத்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயிரியல் பிரிவுக்கு அனுப்பி வைக்கும் வரை மல்லாவி ஏரியின் மீன்களை சாப்பிடுவதைத் தவிர்க்கு மாறு சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் முல்லைத்தீவு விவசாயிகள் அமைப்பின் பிரதிநிதிகள், ஏரிகளின் நீர் மட்டம் தொடர்பில் மீன்பிடி விரிவாக்க உத்தியோகத்தர்கள் அக்கறை காட்டாது இலட்சக்கணக்கான மீன்களை ஏரிகளில் விடுவதால் இலட்சக்கணக்கான மீன்கள் செத்து மடிவதாக தெரிவிக்கின்றனர்.

எனினும் மீன்கள் இறந்து கிடப்பதால் மல்லாவி குளத்தை சுற்றியுள்ள பகுதி முழுவதும் கடும் துர்நாற்றம் வீசத் தொடங்கியுள்ளது.



# உயிர் போனாலும் உரிமையை விட்டு கொடுக்கோம் முல்லைத்தீவில் மக்கள் போராட்டம்!

ஆகத்து 07, 2023

குமுழமுனை தண்ணிமுறிப்பு, ஹிச்சிராபுரம் மீனவர்களை கைது செய்தமையை கண்டித்தும் அவர்களை விடுவிக்க கோரியும் இன்றையதினம் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப் பட்டுள்ளது.

தண்ணிமுறிப்புகுளத்தில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டவர்களை பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்த குமுழமுனை தண்ணிமுறிப்பு, ஹிச்சிராபுரம் மீனவர்களை விடுவிக்க கோரி குறித்த போராட்டமானது முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக இன்று (07.08.2023) காலை 10.30 மணியளவில் முன்னெடுக்கப்பட்டது.

தண்ணிமுறிப்பு குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்ட குமுழமுனை தண்ணிமுறிப்பு மக்களுக்கும், ஹிச்சிராபுரம் மக்களுக்குமே அனுமதி உள்ள நிலையில் கஜபாகுபுர, சம்பத்நுவர, ஜனகபுர, கலியாணபுர பகுதியிலிருந்து வந்த பெரும்பான்மையினர் அத்துமீறி கடந்த (05.08.2023) அன்று மீன்பிடியில் ஈடுபட்டதை தொடர்ந்து மீனவ சங்கத்தினருக்கும், பெரும்பான்மையின மக்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் குளத்தில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 38 சிங்கள மொழிபேசும் மீனவர்களையும், அவர்கள் மீன்பிடிக்கு பயன் படுத்திய உபகரணங்களையும் குறித்த பகுதி மக்களால் ஒட்டுசுட்டான் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். குறித்த சந்தேக நபர்களில் ஒன்பது பேர் பொதுமக்களால் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் தப்பி சென்றுள்ளனர்.

இந்நிலையில், பதிவு செய்யப்பட்ட ஹிச்சிராபும், குமுழமுனை தண்ணிமுறிப்பு சங்கத்தினை சேர்ந்த 17 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக பொதுமக்கள், மீனவர் சங்க உறுப்பினர்கள், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், அரசியல் பிரமுகர்கள் என பலரும் இணைந்து போராட்டத்தினை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த போராட்டத்தில் பொலிஸாரிடம் ஒப்படைத்தவர்கள் தப்பி சென்றது எப்படி?, உயிர் போனாலும் உரிமையை விட்டு கொடுக்கோம், தமிழ் தேசத்தில் தமிழருக்கு உரிமை இல்லையா?, எமது வாழ்வாதாரத்தில் கை வைக்காதே, சட்ட பூர்வ தொழிலாளர்களை கைது செய்தது எவ்வாறு, நிறுத்து நிறுத்து பெரும்பான்மையினரின் அத்து மீறலை நிறுத்து, சட்டத்தை மீறி தொழில் செய்வோரை தண்டிக்க யாரும் இல்லையா? அரச அதிகாரிகளே, தமிழ் பேசும் மீனவர்களின் உடமைகளை நாசமாக்காதே, சட்ட விரோத தொழிலாளருக்கு பொலிஸார் உடந்தையா? போன்ற பல்வேறு வாசகங்களையுடைய பாதாதைகளை தாங்கியவாறு கோசங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

போராட்டத்தின் பின்னர் தமிழ் பேசும் மீனவ சமூகம் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் அடங்கிய மகஜர் வாசித்து காட்டியதன் பின்னர் அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரனிடம் மகஜர் கையளிக்கப்பட்டிருந்தது.











# கந்தரோடையில் கி.பி. 03ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட லக்சுமி நாணயங்கள் மீட்பு!

ஆகத்து 07, 2023

யாழ்ப்பாணம் கந்தரோடை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் போது , கி.பி. 1ஆம் - கி.பி 3ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட லக்சுமி நாணயங்கள் மீட்கப்பட்டுள்ளன.

ஜேர்மன் தொல்பொருள் நிறுவனத்தின் தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவுக்கான ஆராய்ச்சி இணைப்பாளர், இலங்கையின் புதிய கூட்டு திட்ட இணைப்பாளர் கலாநிதி அரெய்ன் டிசாக்சே, கலாநிதி நிமல்பெரேரா, இலங்கை தொல்பொருள் திணைக்கள முன்னாள் உதவிப்பணிப்பாளர் , யாழ்.பல்கலைக்கழக தொல்லியல் துறை விரிவுரையாளர்கள், மாணவர்கள் உள்ளிட்ட தரப்பினர் இணைந்து கடந்த ஒரு மாத கால பகுதியாக கந்தரோடை பகுதியில் அகழ்வாராய்ச்சி பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் போது, கி.பி. 1ஆம் - கி.பி. 3ஆம் நூற்றாண்டு கால பகுதிக்கு இடைப்பட்டதாக கருதப்படும் லக்சுமி நாணயங்கள் 05 மீட்கப்பட்டுள்ளன.

1917ஆம் ஆண்டளவில் கந்தரோடை பகுதிக்கு கள விஜயம் மேற்கொண்ட "போல் பீரிஸ்" நாணயங்கள் சிலவற்றை கண்டு பிடித்த போது, அவற்றில் பெண்ணொருவர் தாமரை மலர் மீது நிற்பது போன்ற உருவம் பொறிக்கப்பட்டதை ஆதாரமாக காட்டி, அவருக்கு லக்சுமி நாணயம் என பெயர் வைத்தார்.



# யாழ் மாவட்டத்தில் கடும் வரட்சி 70 ஆயிரம் பேர் பாதிப்பு!

ஆகத்து 07, 2023

வரட்சியுடன் கூடிய காலநிலை காரணமாக யாழ் மாவட்டத்தில் 69113 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட அனர்த்த முகா மைத்துவ பிரிவின் உதவி பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நிலவும் வரட்சி நிலைமை தொடர்பில் கேட்ட போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

தற்போது யாழ் மாவட்டத்தில் நிலவுகின்ற வரட்சியுடன் கூடிய காலநிலை காரணமாக இதுவரை 21714 குடும்பங்களைச் சேர்ந்த 69113 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் கூடுதலாக சங்கானை, சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவுகளில் பாதிப்புகள் உணரப்பட்டுள்ளது.

அந்த வகையில் சங்கானை பிரதேச செயலாளர் பிரிவில் 15965 குடும்பங்களைச் சேர்ந்த 49160 பேரும், சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் 3135 குடும்பங்களைச் சேர்ந்த 11160 பேரும், நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவில் 1028 குடும் பங்களைச் சேர்ந்த 3146 பேரும், மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் 956 குடும்பங்களைச் சேர்ந்த 3067 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் குடிநீர் விநியோகத்திற்காக தற்போது 6053 குடும் பங்களைச் சேர்ந்த 19704 பேருக்கு குடிநீர் வழங்க ஏற்பாடுகள்



செய்யப்பட்டுள்ளார் என தெரிவித்துள்ளார்.

# 13 தீர்வுக்கான ஆரம்பப்புள்ளியுமல்ல, தீர்வுமல்ல தேசம் அங்கீகரிக்கப்பட்ட சமஸ்டியே இனப்பிரச்சினையை தீர்க்க ஒரேவழியாகும்! – த.தே.ம.முன்னணி கடிதம்

ஆகத்து 09, 2023

கடந்த வாரம் 13ஆம் திருத்தத்தினை நடைமுறைப்படுத்துவது தொடர்பான கட்சிகளின் யோசனைகளை சமர்ப்பிக்குமாறு சனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் கட்சித் தலைவர் களிடம் கோரப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாடு எழுத்து மூலம் 08-08-2023 அன்று கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப் பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களும் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் அவர்களும் ஒப்ப மிட்ட கடிதம் இன்று 09-08-2023 அரசாங்கத்திடம் சமர்ப் பிக்கப்பட்டது.

13ஆம் திருத்தம் இனப்பிரச்சினைத் தீர்வின் தொடக்கப்புள் ளியாகவோ இறுதித் தீர்வாகவோ ஏற்றுக் கொள்ள முடியாது என்பதனைத் தெளிவுபடுத்தி 1987 ஆம் ஆண்டிலேயே தமிழ்த் தரப்புக்களால் 13ஆம் திருத்தம் நிராகரிக்கப்பட்டது என்பதனைச் சுட்டிக்காட்டி வடக்கு கிழக்கு இணைந்த தாயகம் தமிழ்த் தேசம் இறைமை சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை யிலான சமஸ்டி அரசியல் யாப்பின் மூலம் மட்டுமே 75 வருடங் களாக புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணமுடியும் எனபதனைத் தெளிவுபடுத்தி கடிதம் எழுதப் பட்டுள்ளது. 13ஆம் திருத்தம் 1987 ஆம் ஆண்டு கொண்டுவரப் பட்டபோது அதனைத் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தொடக்கப்புள்ளியாகக் கூட ஏற்றுக் கொள்ள முடியாதெனக் குறிப் பிட்டு அதனைச் சட்டமாக நிறைவேற்ற அனு மதிக்க வேண்டா மென்றும் அதனைத் தடுத்து நிறுத்த இந்திய அரசு நடவடிக் கை எடுக்க வேண்டுமெனவும் வலி யுறுத்தி அப்போதய தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் மு.சிவசிதம் பரம், செயலாளர் அமிர்தலிங்கம் சிரேஸ்ட உபதலைவர் இரா சம்பந்தன் ஆகியோர் ஒப்பமிட்டு அப்போதய இந் தியப் பிரதமர் ராஜீவ்காந் திக்கு அனுப் பிய கடிதமும் இணைக்கப்பட்டதுடன், கடந்த 2016 ஆம் ஆண்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தமிழ் மக்கள் பேரவையுடன் இணைந்து தயாரித்த தமிழ்த் தேசம் அங்கீகரிக் கப்பட்ட அடிப்படையிலான சமஸ்டித் தீர்வு யோசனை வரையும் இணைத்து இன்றையதினம் கட்சித்தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பாராளு மன்ற உறுப்பினர் அவர்களால் இன்று 09-08-2023 கையளிக்கப்பட்டது என கட்சியின் பொதுச் செயலாளரால் அனுப்பி வைக்கப்பட்ட ஊடக



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
Tamil National People's Front
No. 43, 3rd Cross Street, Jaffna
Established: 20-02-2010

PROPOSAL FOR A FEDERAL CONSTITUTION FOR SRI LANKA THAT RECOGNISES AND SAFEGUARDS THE TAMIL NATION.

[illegible]



[illegible]

Yours truly,

GAJENDRAKUMAR G. PONNAMBALAM M.P.
Leader, Tamil National People's Front (TNPF)
(General Secretary, All Ceylon Tamil Congress)

SELVERAJAH KAJENDREN
General Secretary
Tamil National People's Front (TNPF)

அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

# முல்லைத்தீவில் பெரும்பான்மையினர் அனுமதியின்றி வாடியமைத்து தொழில் செய்ய முயற்சி! வாடியை அகற்ற பணிப்பு; குடியேற்ற முயற்சியா? ரவிகரன் கேள்வி

ஆகத்து 09, 2023

முல்லைத்தீவில் அனுமதியின்றி தொழில் செய்வதற்காக பெரும் பான்மையின மீனவர்கள் புதிதாக அமைத்த வாடியினை அகற்றுமாறு அப்பகுதிக்கு சென்ற கிராம சேவையாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.



முல்லைத்தீவு நாயாற்று பகுதிக்கு தெற்கே உள்ள புலிபாய்ந் தகல் என்ற இடத்தில் சிங்கள மக்களை குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் நேற்றையதினம் (08) கொக்குத் தொடுவாய் கடற்தொழில் சங்க அங்கத்தவர்கள், நிர்வாகத் தினரும், நாயாறு கடத்தொழில் சங்க நிர்வாகத்தினரும் (செம் மலை கிழக்கு) குறித்த இடத்திற்கு சென்று பார்வையிட்டபோது புதிதாக ஒரு வாடி அமைக்கப்பட்டிருப்பதாக அறிவித்தல் வழங்கப்பட்டமையடுத்து இன்றையதினம் (09.08.2023) குறித்த இடத்திற்கு மீனவர்சங்க உறுப்பினர்களும், கொக்குத் தொடுவாய் கிழக்கு கிராம அலுவலரும், முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரனும் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டிருந்தார்கள்.

குறித்த இடத்திற்கு 18 மேற்பட்ட சிங்கள மீனவர்களும் நான்கு படகுகளுடனும் தொழில் செய்ய வந்திருப்பதும், அரிச்சந்திரன் எனும் பெயரிலேயே கடத்தொழில் திணைக்களத்திற்கு கடிதம் வழங்கப்பட்டிருந்ததும் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து குறித்த சிங்கள மீனவர்கள் தமக்கு கடத் தொழில் திணைக்களத்தினால் அனுமதி வழங்கப்பட்டதாக கூறி கடிதத்தை காண்பித்தனர். அக்கடிதத்தில் நான்கு படகிற்கு மீன்பிடிக்கு அனுமதி வழங்ககோரி சிபாரிசு செய்யப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட கடத்தொழில் உதவி பணிப்பாளரால், பிரதேச செயலாளருக்கு கடிதம் வழங்கப்பட்டிருக்கின்றது. ஆனால் பிரதேச செயலாளரால் இதுவரை அனுமதி வழங்க வில்லை என உறுதிப்படுத்தப்பட்டு அவ்விடயத்தினை குறித்த சிங்கள மீனவர்களுக்கு தெளிவுபடுத்தி பிரதேச செயலகத்தில் நீங்கள் அனுமதி பெறவேண்டும் அனுமதி இல்லாததனால் புதிதாக அமைக்கப்பட்ட வாடி அகற்றப்பட வேண்டும் எனவும் கிராம சேவையாளர் கூறியிருந்தார். அது தவறினால் அதற்





குரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறித்த நபர்களுக்கு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவிக் கையில், இவ் விடயம் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபருக்கு தெரியப்படுத்தியுள்ளதாகவும், நேரில் சென்று பார்வையிட்டதுடன் மீனவ பிரதிநிதிகள் சில ரிடம், தொழில் செய்யும் எமது மீனவர்களுடனும் கலந்துரை யாடிய போது 150 படகுகள் வரையில் குடும்பங்களாக புலிபாய்ந்தகல் பகுதிக்கு வந்து தொழில் செய்ய இருப்பதாகவும் வாடிகள் அமைப்பதற்கான பொருட்கள் குறித்த இடத்திற்கு கொண்டு வந்திருப்பதாகவும், சில நாட்களுக்கு முன்னர் குறித்த இடங்களை பௌத்தபிக்கு ஒருவரும் தனது குழுவினருடனும் வந்து பார்வையிட்டு சென்றதாகவும் இது ஒரு குடியேற்ற முயற்சி என தெரிவித்திருந்தார் .

# 2000 நாட்கள்; அம்பாறையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டம்!









# குருந்தூர் மலையில் பொங்கல் நிகழ்வுக்கு பாதகமாக நடக்க மாட்டோம்! தொல்பொருள் திணைக்களகம் நீதிமன்றத்தில் உறுதி!

ஆகத்து 09, 2023

நீதிமன்ற கட்டளையை மீறி குருந்தூர் மலையில் கட்டடங்களை கட்டியமைக்காக முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனால் முல்லைத்தீவு பொலிஸில் முறைப்பாடு செய்ததற்கு அமைவாகவே நகர்த்தல் பத்திரம் மூலம் நடைபெற்று கொண்டிருந்த குறித்த வழக்கு இன்றையதினம் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது.




குறித்த வழக்கு விசாரணைகளின் பின்னர் சட்டத்தரணி தனஞ்சயன் கருத்து தெரிவிக்கும் போது.

குருந்தூர்மலை வழக்கானது முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றிலே விசாரணைக்காக எடுத்து கொள்ளப் பட்டது.

கடந்த தவணையிலே பொங்கல் உற்சவம் ஒன்றினை ஆதி ஐயனார் ஆலயத்திலே செய்ய முற்பட்ட வேளை தொல்லியல் திணைக்களத்தினாலும், சகோதர மொழி பேசுபவர்களாலும் தடுக்கப்பட்ட சம்பவம் நடைபெற்றது. அது தொடர்பாக நகர்த்தல் பத்திரம் ஊடாக அந்த விடயத்தை நீதிமன்றத்தின் கவனத்திற்கு நாங்கள் கொண்டுவந்தோம்.

அது தொடர்பாக பதிலளிப்பதற்காக தொல்லியல் திணைக்களத்திற்கு தவணை வழங்கப்பட்டிருந்தது. இன்றையதினம் தொல்லியல் திணைக்களம், சட்டமா திணைக்களத்தினுடைய அரச சட்டத்தரணி ஊடாக தோன்றியிருந்தார்கள். இன்றைய தினம் தாம் எந்த விதத்திலும் அங்கே சைவ மக்கள் பொங்கல் பொங்கி வழிபடதடை செய்ய இல்லை என்றும், எதிர்காலத்திலும் அவ்வாறான பொங்கல் நிகழ்வு நடைபெற்றால் அதற்கு பாதகமாக நடக்க மாட்டோம் என்றும் இன்றைய தினம் குறிப்பிட்டிருந்தார்கள்.



இன்றையதினம் ஆலய பரிபாலனசபை மக்கள் சார்பாகவும், ஊர்மக்கள் சார்பாகவும், முல்லைத்தீவு மாவட்ட சட்டதரணிகள் பலரும், ஜனாதிபதி சட்டத்தரணிகள் உள்ளடங்கலாக பல சிரேஸ்ட சட்டத்தரணிகள் ஆதிசிவன் ஐயனர் ஆலயம் சார்பாக இந்த வழக்கில் தோன்றியிருந்தார்கள். இது தொடர்பான மேலதிக கட்டளைக்காக இந்த வழக்கானது எதிர்வரும் 31.08.2023 க்கு நியமிக்கப்பட்டிருக்கின்றது.

# குருந்தூரில் சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட விகாரையை நியாயப்படுத்தும் விதமாக புத்தக வெளியீடு ஒன்று நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது. இதில் பல இனவாதிகள் உட்பட மைத்திரிபால சிறிசேனவும் பங்குபற்றி இருந்தார்!

ஆகத்து 07, 2023

குருந்தூர்மலை, குருந்தி ராஜமஹா விகாரை ஆகியன சிங்கள பௌத்த மக்களின் தொல்லியல் அடையாளம் என்பதை வலியுறுத்தி "කුරුන්දි විහාරවංශය" எனும் நூல் நேற்று வெளியிடப்பட்டு இருக்கின்றது



மாகாவம்சம், தொல்லியல் திணைக்கள ஆய்வுகள், The Manual of Vanni District (கையேடு) உள்ளிட்ட பல்வேறு மூலங்களை ஆதாரமாக கொண்டு குருந்தூர்மலை சிங்கள பௌத்த மக்களின் தொல்லியல் அடையாளமாக இந்த புத்தகத்தில் நிறுவி இருக்கின்றார்கள்

இலங்கை பல்கலைக்கழக மருத்துவ பீடமொன்றில் மிக இளைய வயதில் பேராசிரியர் என்கிற உயரிய தகுதி நிலையை அடைந்த Dr சன்ன ஜெயசுமன தலைமையில் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் Chandima B. Ambanwala மற்றும் Sumeda Weerawardena ஆகியோர் இந்த நூலை எழுதி இருக்கின்றார்கள்

பேராசிரியர் Dr சன்ன ஜெயசுமன அவர்கள் ரணில் அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினராகவும் தற்போது கடமையாற்றி வருகின்றார்

மேற்படி புத்தககத்தின் முதற் பிரதியை தமிழ் மக்களின் வாக்குகளால் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டு இருந்த மைத்திரி பால சிறிசேன பெற்று கொண்டு இருக்கின்றார்



இந்த நிகழ்வில் கடந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் போட்டியிட்ட டலஸ் அழகப்பெருமா, பேராசிரியர் ஜீ எல் பிரீஸ் உட்பட ஆளும் மற்றும் எதிர்க்கட்சி பிரமுகர்கள் கலந்து கொண்டு இருந்தார்கள்

அதே போன்று பேராசிரியர் பிரனீத் அபேசுந்தர அவர்கள் குருந்தி விகாரை குறித்து எழுதி பாடிய කුරුන්දි ගීතය என்கிற ஒலி பேழையும் இங்கு வெளியிடப்பட்டு இருக்கின்றது





இந்த நிகழ்வில் கலந்து கொண்டு இருந்த விசேட வைத்திய நிபுணர் கலாநிதி அனுலா விஜேசுந்தர, கலாநிதி நளின் டீ சில்வா உட்பட மூத்த வைத்தியர்கள், பேராசிரியர்கள், சட்டத்தரணிகள் குருந்தூர் மலையை மீட்க சபதம் ஏற்று இருக்கின்றார்கள்.

# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி 21ஆம் திகதி மீண்டும் அகழ்வு பணி ஆரம்பம்!

ஆகத்து 10, 2023

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழிக்கு, தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் சட்ட வைத்திய அதிகாரி அடங்கிய குழுவினர், முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி.பிரதீபன் தலைமையில், இன்று கள விஜயம் மேற்கொண்டனர்.

கொக்குத்தொடுவாய் மனிதபுதைகுழி தொடர்பான வழக்கு விசாரணை, நேற்று முன்தினம், முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் எடுத்து கொள்ளப்பட்டு, அதில் வழங்கப்பட்ட உத்தரவிற்கமைய, இன்று கள விஜயம் மேற்கொள்ளப்பட்டது.

இதனிடையே முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வுப்பணி எதிர்வரும் 21ஆம் திகதி மேற்கொள்ளப்படும் என உத்தேச தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் மனித புதைகுழி வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதை போன்று சந்தேகத்திற்கிடமான பிரதேசத்தை பார்வையிடுவதற்கு அழைக்கப்பட்ட தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் வருகை தந்திருந்தார்கள்.

தொல்பொருள் திணைக்களத்தால் மதிப்பீடு செய்யப்பட்டு அதற்கான பாதீடும், திட்டமும் ஒரு கிழமைக்குள் நீதிமன்றுக்கு தாக்கல் செய்யப்படும். அதனைத் தொடர்ந்து 21ஆம் திகதி அகழ்வு பணி நடைபெற தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.







# போதைக்கு அடிமையானவர்களை மீட்க வடக்கில் விசேட சிகிச்சை நிலையம் அமைக்க நடவடிக்கை!

## வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் திரு. த. சத்தியமூர்த்தி

ஆகத்து 12, 2023

வடக்கில் போதைக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கான சிகிச்சை நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.



யாழ் பண்ணையில் அமைந்துள்ள மாகாண சுகாதார திணைக்களத்தில் நேற்றைய தினம் சனிக்கிழமை நடாத்திய ஊடக சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவித்ததாவது.

கடந்த ஒரு வருடமாக வடக்கு மாகாணத்தில் போதைப் பொருள் பாவனையாளர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

அவ்வாறு போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் வைத்தியசாலைக்கு வரும் போது அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

இருப்பினும் முற்று முழுதாக போதைக்கு அடிமையானவர்களை நீண்ட காலமாக வைத்து பராமரித்து சிகிச்சை அளிக்கும் சிகிச்சை நிலையம் வடபகுதியில் இல்லை. அவ்வாறான ஒரு விசேட நிலையத்தை அமைப்பதாயின் அதற்கு பல்வேறுபட்ட வசதிகள் தேவையாக இருக்கின்றன.

இந் நிலையில் இவ்வாறானதொரு நிலையத்தை வடக்கில் அமைக்க வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் முயற்சிகளை எடுத்திருக்கின்றார்.




அதே நேரத்தில் புதிதாக ஒருவர் போதைக்கு அடிமையாகாமல் குடும்ப உறுப்பினர்களும் சமூகத்தவர்களும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என மேலும் தெரிவித்தார்.

# அம்பாறை வீரமுனை படுகொலையின் 33ஆம் ஆண்டு நினைவேந்தல்!

ஆகத்து 12, 2023

12.08.1990 இன்றைக்கும் 33 ஆண்டுகளுக்கு முன்னர் இதே நாளில் ஆவணி மாதம் 12 ஆம் திகதி வீரமுனையையும் அதன் சுற்றுவட்டக் கிராமங்களான வீரச்சோலை, மல்லிகைதீவு, மல்வத்தை, வளத்தாப்பிட்டி, சொறிக்கல்முனை, அம்பாறை வாழ் தமிழ் மக்களுக்கு மனங்களை விட்டு திகில் மறக்காத ஒரு கொடிய நாள் 1990 இல் அம்பாறை மாவட்டத்தில் நிகழ்ந்தது.









குறிப்பாக, சம்மாந்துறை பிரதேசத்தில் நிகழ்ந்த இனவன்செயல் காரணமாக மேற்படி பகுதிகளைச்சேர்ந்த பன்னூற்றுக் கணக்கான மக்கள் தங்கள் குழந்தை குட்டிகளுடன் வீரமுனை உயிரை பாதுகாப்பதற்காக சிந்தாயாத்திரை பிள்ளையார் ஆலய வளவினுள்ளும் பாடசாலை வளவினுள்ளும் 1990 ஆனி மாதம் முதல் ஆவணி மாதம் வரை தஞ்சம் புகுந்திருந்தனர்

அக்காலகட்டத்தில், 12.08.1990 தினத்தன்று இவற்றினுள் புகுந்த இனவெறிபிடித்த சிங்கள இராணுவத்தினருடன் சேர்ந்த முஸ்லீம் ஊர்காவல்படையினர் கோவிலிற்குள் வைத்து தமது கோரத்தாண்டவத்தை ஆடினர்.

இதிலும் அதிகமானோர் காயமுற்றனர். அவ்வேளையில் கடத் தப்பட்டோர் பற்றி இன்றுவரை தகவலில்லை. திட்டமிட்டு கண் மூடித்தனமாக, காட்டுமிராண்டித்தனமாக, துடிக்கப்பதைக்க நிகழ்த்தப்பட்ட இன அழிப்பு படுகொலை இது.

குழந்தைகள் சிறுவர்கள் வயதானவர்கள் எனபாராது அனைவரையும் வெட்டியும் சுட்டும் தமது பசியினை தீர்த்தனர்.

முடிவில் 400 இற்கும் அதிகமான தமிழர்களை பலியெடுத்த இந்த சம்பவம் வரலாற்றில் வீரமுனை படுகொலையாக பதி வாகிறது.

காலங்கள் மாறலாம் கோலங்கள் மாறலாம் ஆனால் வரலாறுகள் என்றும் மாறாது.

இனவெறி சிங்கள இராணுவத்தினருடன் சேர்ந்து முஸ்லீம் ஊர்காவல் படையினர் நடாத்திய தாக்குதலில் பலியாகிய 400



அப்பாவி மக்களை நினைவு கூர்ந்து வீரமுனையில் ஆலய பூசையுடன் சனிக்கிழமை அங்கு அமைந்துள்ள நினைவுத் தூபிக்கு முன்னால் நினைவு வணக்கம் இடம்பெற்றன.

# குருந்தூர் மலையின் ஆதிசிவன் ஆலயத்தில் 18ஆம் திகதி பொங்கல் விழா வழிபாடுகளை மேற்கொள்ள அழைப்பு!

ஆகத்து 14, 2023

முல்லைத்தீவு குருந்தூர்மலையில் எதிர்வரும் 18ஆம் திகதி, ஆதிசிவன் ஐயனாருக்கு பொங்கல் விழா ஒன்றினை மேற் கொள்ளவுள்ளதாக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

எனவே அனைவரும் இந்த பொங்கல் விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறும் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தில் எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று, காலை எட்டு மணி யளவில் ஆதிசிவன் ஐயனாருக்குப் பொங்கல் மேற்கொள் வதற்கு ஆலய நிர்வாகம் தீர்மானித்திருக்கின்றது.

எனவே மக்கள் அனைவரும் குருந்தூர்மலைக்கு வருகைதந்து ஆதிசிவன் ஐயனாரின் அருளைப் பெறுவதோடு, பொங்கல் விழாவையும் சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இந்த விடயமானது நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டநிலையில், தொல்லியல் திணைக்களம் சைவவழிபாடுகளை மேற்கொள் தற்கு எந்தத் தடையுமில்லை எனத் தெரிவித்திருந்தது.

அதற்கமைய இந்த பொங்கல் வழிபாடுகள் மேற்கொள்ளத்



திட்டமிடப்பட்டுள்ளன.

எனவே அனைவரும் இந்தப் பொங்கல் விழாவில் கலந்துகொள் ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் – என்றார்.

# செஞ்சொலை படுகொலையின் நினைவேந்தல்!

ஆகத்து 14, 2023

செஞ்சோலை படுகொலையின் 17ஆவது ஆண்டு நினை வேந்தல் நிகழ்வுகள் இன்றைய தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

யாழ்ப்பாணம் - வல்வெட்டித்துறையில் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது எம்.கே. சிவாஜிலிங்கத்தால் உயிரிழந்த மாணவிகளுக்கு சுடர் ஏற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.

கடந்த 2006ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14ம் திகதி முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் வள்ளிபுனம் கிராமத்தில் அமைந்திருந்த செஞ்சோலை சிறுவர் இல்லத்தின் மீது வான்படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் 53 பாடசாலை மாணவிகள் படுகொலை செய்யப்பட்டனர்.








# யாழ். பல்கலைக்கழகத்தில் 17ஆம் ஆண்டு செஞ்சோலைப்படுகொலை நினைவேந்தல்!

ஆகத்து 14, 2023

செஞ்சோலை படுகொலையின் 17ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் இன்றைய நாள் திங்கட்கிழமை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பிரதான வளாகத்தில் நடைபெற்றன.



யாழ் பல்கலைக்கழக பிரதான தூபி வளாகத்தில் ஒன்று கூடிய மாணவர்கள் உயிர்நீத்த பாடசாலை மாணவர்களின் உருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி ஈகைசுடரேற்றி ஒரு நிமிட அகவணக்கமும் செலுத்தினர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் உள்ள வள்ளிபுனம் பகுதியில் அமைந்துள்ள செஞ் சோலை வளாகத்தில் 2006 ஆவணி 10ஆம் நாள் முதல் நடை பெற்ற பாடசாலை மாணவர்களுக்கான அனர்த்த முகாமைத்துவ முதலுதவிப் பயிற்சி நெறியில் வன்னிப்பிரதேச கிளிநொச்சி, முல்லைத்தீவு கல்வி வலயங்களைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான உயர்தர வகுப்பு மாணவிகள் பங்குபற்றியிருந்தனர்.

மாணவர்கள் பயிற்சி நெறியில் பங்குபற்றிக் கொண்டிருந்த வேளை சிறீலங்கா வான் படைக்குச் சொந்தமான நான்கு கிபிர் விமானங்கள் செஞ்சோலை வளாகத்தில் 2006 ஆவணி 14 அன்று காலை 7.30 மணியளவில் காலைக் கடன்களில் ஈடுபட் டுக்கொண்டிருந்த மாணவிகள் மீது கண்மூடித்தனமான குண்டுத்தாக்குதலினை மேற்கொண்டன. இக் குண்டுத் தாக்குதலில் 52 மாணவிகள் மற்றும் இரு பணியாளர்கள் உட்பட 54பேர் உயிரிழந்தனர். 130 மாணவிகள் படுகாயமடைந்ததுடன் பல மாணவிகள் சிறு காயங்களுக்குமுள்ளாகினர். படுகாயமடைந் தவர்களில் மூன்று மாணவியர்களுக்கு கால்கள் துண்டக்கப்பட்டதுடன் மாணவி ஒருவர் கண் ஒன்றை இழந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவர்களில் மேலும் காயப்பட்ட மூன்று மாணவிகள் முல்லைத்தீவு வைத்தியசாலையினால் கண்டி வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுப்பிவைக்கப்பட்டனர். சிறீலங்கா பயங்கரவாத விசாரணைத் திணைக்களம் உடனடியாக காயப்பட்ட மூன்று மாணவிகளையும் கைதுக்குள்ளாக்கினர். இறுதியாக மூன்று மாணவிகளும் விடுவிக்கப்பட்டு வன்னியிலுள்ள தமது வீட்டுக்குச்செல்ல விடுவதற்காக வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டனர். அவர்களுள் காயமடைந்த ஒரு மாணவி வவுனியாவில் இறந்துவிட்டார். மற்றைய இரு மாணவிகளும் உடனடியாக கண்டி வைத்தியசாலைக்கு திரும்ப எடுத்துச் செல்லப்பட்டனர். சில மாதங்களின்பின் இரு மாணவிகளும் எங்கே தங்குகின்றார்கள் என்பதே மர்மமாக மாறியது அவர்களது பெற்றோர்கள் மட்டும் ஏற்கனவே ஒழுங்குபடுத்தப்பட்ட இடத்தில் அவர்களைச் சந்திப்பதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். ஏறத்தாழ இரு வருடங்களாக எதுவித குற்றச்சாட்டுக்களுமின்றி இந்த இரு மாணவிகளது தடுத்து வைத்தலானது அவர்களது பெற்றோருக்கு விளங்கிக்கொள்ள முடியாததாகவே இருக்கிறது.

செஞ்சோலை வளாகப் குண்டுவீச்சில் உயிரிழந்த மாணவிகளின் விபரம்:

01. முத்தையா இந்திரா
02. முருகையா அருட்செல்வி
03. சிவமூர்த்தி கார்த்திகா
04. சந்தனம் சத்தியகலா
05. கனகலிங்கம் நிருபா
06. கனகலிங்கம் நிருஷா
07. நவரட்ணம் சாந்தகுமாரி
08. நாகலிங்கம் கோகிலா
09. சண்முகராசா கவேந்தினி
10. பாலகிருஸ்ணன் மதினி
11. சிவமயஜெயம் கோகிலா
12. விவேகானந்தம் தட்சாயினி
13. சாந்தகுமார் சுகிர்தா
14. உதயகுமாரன் கௌசிகா
15. நல்லபிள்ளை நிந்துஜா
16. வீரசிங்கம் றாஜிதா
17. தம்பிராசா லக்சியா
18. மகாலிங்கம் வென்சிடியூலா
19. துரைசிங்கம் துதர்சினி
20. குபேந்திரச்செல்வம் லிகிதா
21. வரதராஜா மங்களேஸ்வரி
22. இராசேந்திரச்செல்வம் மகிழ்வதனி
23. நீலாயினார் நிவாகினி
24. தமிழ்வாசன் நிவேதிகா
25. சுந்தரம் அனோஜா
26. புவனசேகரம் புவனேஸ்வரி
27. தேவராசா சர்மினி
28. சிவானந்தராசா திவ்வியா
29. தம்பிமுத்து தயாழினி
30. தம்பிராசா சுகந்தினி
31. சிவசுப்பிரமணியம் வட்சலாமேரி
32. தனபாலசிங்கம் பகீறஜி
33. தணிகாசலம் தனுசா
34. பத்மநாதன் கலைப்பிரியா
35. மார்க்குப்பிள்ளை கெலன் சுதாயினி
36. இராசமோகன் கம்சனா
37. மகாலிங்கம் வசந்தராணி
38. கிரிதரன் டயானி
39. துரைசிங்கம் திசானி
40. வைரமுத்து கிருத்திகா
41. சந்திரமோகன் நிவேதிகா
42. நாகலிங்கம் தீபா
43. தம்பிராசா தீபா
44. திருநாவுக்கரசு நிரஞ்சுலா
45. இரவீந்திரராசா றம்ஜா
46. கணபதிப்பிள்ளை நந்தினி
47. விஜயபவன் சிந்துகா
48. நகுலேஸ்வரன் நிஷாந்தினி
49. தர்மகுலசிங்கம் கேமாலா
50. அருளம்பலம் யசோதினி
51. செல்வம் நிறோஜினி

செஞ்சோலை வளாக குண்டு வீச்சில் உயிரிழந்த செஞ் சோலை பணியாளர்களது விபரம்:

01. சந்திரசேகரன் விஜயகுமாரி
02. சொலமொன் சிங்கராசா

செஞ்சோலை வளாகப் குண்டுவீச்சில் காயமடைந்த மாணவிகளின் விபரம்:

01. நாகலிங்கம் உசாந்தினி
02. சதாசிவம் பிரியதர்சினி
03. ரவீந்திரன் பிரியதர்சினி
04. ஆறுமுகம் தயாளினி
05. குலேந்திரன் சுயித்தா
06. நடராசா சிறிவித்தியா
07. சி.மதுசா
08. குணநாதன் ஜசிதேவி
09. சிவனேஸ்வரன் நகுலேஸ்வரி
10. முருகேசு இந்திரவதனா
11. குகனேந்திரன் அஜித்தா
12. வெள்ளிரூபன் துசாந்தினி
13. சுந்தரம்பிள்ளை கஜேந்தினி
14. செல்வானந்தன் ஜான்சி
15. நிர்மலகுமார் நிசாந்தி
16. நடராசா கிந்துஜா
17. மகேந்திரம் சர்மிளா
18. சண்முகராசா தனுசா
19. வெற்றிவேல் சுதர்சினி
20. ரவிதாசன் சிந்துஜா
21. சூரியகுமார் சியாமினி
22. பூபாலசிங்கம் விஜிந்தா
23. முருகன் கௌசி
24. ஞானசேகரம் நிரூஜா
25. மகாலிங்க் ம் கோபிகா
26. புலேந்திரராசா சுதர்சினி
27. நடராசாலிங்கம் கவிதா
28. செல்வநாயகம் அமுதாசினி
29. மகேந்திரராசா நிரூசா
30. கதிரேசன் பிரமிளா
31. புஸ்பவதி
32. ஆறுமுகநாதன் மேகலா
33. கணேசலிங்கம் கோகிலா
34. விஜயசிங்கம் நிதர்சினி
35. றொபேட் யோகராசா துஸ்யந்தி
36. செல்வரத்தினம் சர்மிளா
37. சிவலிங்கம் கமலரூபினி
38. மாணிக்கராசா தயாவிழி
39. சிறிஸ்குமார் வித்தியா
40. இராஜேந்திரம் மீனலோஜினி
41. தங்கவேல் கலைச்செல்வி
42. ஜீவரட்ணம் கிருபாஜினி
43. கலைச்செல்வன் கேமா
44. சின்னராசா சுஜீவா
45. மாணிக்கராசா தயாவிழி
46. மாணிக்கம் கோமதி
47. யோகராசா ரேகாந்தினி
48. பாலசிங்கம் ஜானிகா
49. கந்தசாமி சோபிகா
50. அந்தோனிப்பிள்ளை விஜிதா
51. மாணிக்கம் மேனகா
52. கிட்ணன் சுலோஜினி
53. ஜெயக்கொடி சங்கீதா
54. இரத்தினசிங்கம் மேகலா
55. ஆனந்தராசா மேரிபவிதா
56. கணேசன் ரூபவதனி
57. ஆனந்தராசா டயாணி
58. கணபதிப்பிள்ளை சுஜிவா
59. மகாலிங்கம் யாழினி
60. அரசகுலசிங்கம் லக்சனா
61. நாகராசா தனுசா
62. கணேஸ் ராதிகா
63. திருநாவுக்கரசு நிரஞ்சினி
64. சண்முகலிங்கம் ஜெசினா
65. துரைரத்தினம் சுபத்திரா
66. புஸ்பானந்தி மயில்வாகனம்
67. யாழினி மகாலிங்கம்
68. சிவானந்தம் சிந்துஜா
69. யோகராசா சாளினி
70. உதயகுமார் பிரியா
71. சிவானுப்பிள்ளை சுகந்தினி
72. சபாரட்ணம் சௌமியா
73. நவரத்தினசிங்கம் அனுசியா
74. வேலுப்பிள்ளை தர்சனா
75. பேணாட் பிரபாலினி
76. ஆறுமுகம் உமாமகேஸ்வரி
77. வையாபுரி யுகனாதேவி
78. பொன்னையா துஸ்யந்தி
79. யோகலிங்கம் வேஜினியா
80. யோகராசா பிரபாஜினி
81. இராசேந்திரம் அருள்நாயகதீபா
82. அசோக்சந்திரன் ஜனனி
83. வாமதேவா ஜனனி
84. செல்வராசா சுஜிதா
85. ஆனந்தராசா ரஞ்சிதா
86. சிவராசா சயந்தா
87. கணேசலிங்கம் இந்துஜா
88. தெய்வேந்திரம்பிள்ளை வித்தியா
89. இராசதுரை பிரசன்னா
90. ஆனந்தராசா சுகிர்தா
91. ஜெயக்கொடி கார்த்திகா
92. புவியரசன் நிரூஜா
93. மகேசலிங்கம் செந்துஜா
94. தர்மராசா தயாரூபினி
95. குமாரவேல் மாலினி
96. பாலசிங்கம் சுமித்திரா
97. தமிழ்முத்து தயாளினி
98. நந்தகுமார் சுபா
99. கைலாயப்பிள்ளை கலையரசி
100. சிறி கஸ்த்தூரி
101. தர்மபாலன் தர்சிகா
102. சூரியகுமார் சிந்துஜா
103. சாயினி
104. ராஜேஸ்வரன் சிறிவித்தியா
105. ரவிச்சந்திரன் சாயித்தியா







# செஞ்சோலைப் படுகொலையின் 17ஆம் ஆண்டு நினைவேந்தல் 14.08.2023 இன்று முல்லைதீவு – வள்ளிபுனம் பகுதியல் உயர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டது!























# கனடாவுக்கு கட்டுமானப்பணிக்கு புலம்பெயர்ந்தோர் அவசியம் தேவை: கனடா புலம்பெயர்தல் அமைச்சர்!

ஆகத்து 12, 2023

கனடாவுக்கு புதிதாக புலம்பெயர்ந்தோர் வராவிட்டால், கனடாவில் நிலவும் வீடுகள் தட்டுப்பாடு பிரச்சினையை சமாளிப்பது சாத்தியமேயில்லை என்று கூறியுள்ளார் கனடாவின் புதிய புலம்பெயர்தல் அமைச்சர்.

கனடாவில் வீடுகள் பற்றாக்குறை பிரச்சினை புதிய புலம்பெயர்ந்தோரால் அதிகரிப்பதாக சமீபத்தில் கனடா வங்கி தெரிவித்திருந்தது.

இது குறித்து கனடாவின் புதிய புலம்பெயர்தல் துறை அமைச்சராக பொறுப்பேற்றுள்ள Marc Millerஇடம் கேள்வி எழுப்பிய ஊடகவியலாளர்கள், அதனால் கனடாவுக்கு புலம்பெயர்வோரின் எண்ணிக்கையைக் குறைக்கும் திட்டம் உள்ளதா என்று கேட்டார்கள்.

அந்தக் கேள்விக்கு இல்லை என பதிலளித்த அமைச்சர் Marc Miller, வெளிநாட்டிலிருந்து கனடாவுக்கு வரும் திறன்மிகுப் பணியாளர்கள் இல்லையென்றால், இப்போது கனடாவில் நிலவும் வீடுகள் பற்றாக்குறைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக வீடுகளைக் கட்டுவது சாத்தியமே இல்லை என்றார்.

புலம்பெயர்ந்தோர் எண்ணிக்கையைக் குறைப்பது குறித்து மக்கள் கேட்கிறார்கள் என்றால் என்ன பொருள், நமக்கு வீடுகளைக் கட்டுவதற்காக தேவைப்படும் புலம்பெயர்ந்தோரின் எண்ணிக்கையைக் குறைப்பதா அல்லது குடும்பங்கள் இணைவதைத் தடுப்பதா, அப்படியென்றால் அது அவர்களுடைய மன நலனையும், ஏற்கனவே இங்கு வந்துவிட்ட புலம்பெயர்ந்தோரின் குடும்பங்களின் நலனை பாதிப்பதா என்று பதில்



# கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ நீண்ட திருமண வாழ்கைக்குப் பிறகு மனைவி சோ:.பியும் பிரிவதாக அறிவிப்பு!

ஆகத்து 03, 2023

கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மற்றும் அவரது மனைவி சோஃபி கிரிகோயர் இருவரும் திருமணமான 18 ஆண்டுகளுக்குப் பிறகு பிரிந்து செல்ல முடிவு செய்தனர்.



நேற்றுப் புதன்கிழமை இன்ஸ்டாகிராமில் ஒரு அறிவிப்பில், பல அர்த்தமுள்ள மற்றும் கடினமான உரையாடல்களுக்கு பிறகு பிரிந்து செல்லும் முடிவு எடுக்கப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

அவர்கள் சட்டப்பூர்வ பிரியும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர் என பிரதமர் அலுவலகத்தின் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

இந்த ஜோடி 2005 இல் திருமணம் செய்துகொண்டு 15 வயதான சேவியர், 14 வயதான எல்லா-கிரேஸ் மற்றும் 9 வயது ஹாட்ரியன் ஆகிய மூன்று குழந்தைகளைப் பெற்றனர்.

அவர்கள் ஒரு நெருங்கிய குடும்பமாக இருக்கிறார்கள், மேலும் சோஃபியும் பிரதமரும் தங்கள் குழந்தைகளை பாதுகாப்பான, அன்பான மற்றும் கூட்டுச் சூழலில் வளர்ப்பதில் கவனம் செலுத்துகின்றனர் என்று ட்ரூடோ அலுவலகத்தின் அறிக்கை கூறியது.

ட்ரூடோவின் மறைந்த தந்தை, பியர் ட்ரூடோ, அவரது மனைவி மார்கரெட் ட்ரூடோவைப் பிரிந்த கடைசி கனேடியப் பிரதமர் ஆவார், மேலும் அவர் பதவியில் இருந்த கடைசி மாதங்களில் 1984 இல் விவாகரத்து செய்தார்.

ஜஸ்டின் ட்ரூடோவும் சோஃபி கிரிகோயரும் குழந்தைகளாக இருந்தபோது முதலில் சந்தித்தனர். அவர் ட்ரூடோவின் இளைய சகோதரர் மைக்கேலுடன் வகுப்புத் தோழியாக இருந்தார்.

பின்னர் அவர்கள் 2005 இல் திருமணம் செய்து கொள்வதற்கு முன்பு 2003 இல் ஒரு தொண்டு நிகழ்ச்சியை இணைந்து நடத்தும் போது பாதைகளைக் கடந்தனர்.

அவர் முன்பு தொலைக்காட்சி மற்றும் வானொலி தொகுப்பாளராக பணியாற்றினார்.



இருவரும் பிரதமர் அலுவலகத்திற்கு வந்து அடிக்கடி ஒன்றாக தோன்றினர். ஆனால் சமீபகாலமாக முக்கிய பொது நிகழ்ச்சிகளில் அவர் கலந்து கொள்ளவில்லை.

இருப்பினும், அவர்கள் இருவரும் மே மாதம் சார்லஸ் மன்னரின் முடிசூட்டு விழாவிற்காக லண்டனுக்குச் சென்றனர் மற்றும் மார்ச் மாத இறுதியில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் விஜயம் செய்தபோது ஒன்றாக இருந்தனர் என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

# கனடாவில் களவாடப்பட்ட 138 வாகனங்கள் மீட்பு!

ஆகத்து 04, 2023

கனடாவில் களவாடப்பட்ட 138 வாகனங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்தக் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் 23 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கனடாவின் வின்ட்ஸோர் பகுதியில் இந்த வாகனங்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

சுமார் ஒன்பது மில்லியன் டொலர் பெறுமதியான களவாடப்பட்ட வாகனங்களை மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

திட்டமிட்ட கும்பல் ஒன்று வாகனங்களை கொள்ளையிட்டுள்ளதாகவும், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியம், குவைட், லெபனான், கொலம்பியா, கொங்கோ போன்ற நாடுகளுக்கு களவாடப்பட்ட வாகனங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மிக நீண்ட விசாரணைகளின் பின்னர் வாகனக் கொள்ளைகளுடன் தொடர்புடைய நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.




## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

# கனடாவில் கார்பன் வரி அறிவீடு செய்வது தொடர்பில் மக்கள் அதிருப்தி!

ஆகத்து 07, 2023

கனடாவில் கார்பன் வரி அறவீடு செய்வது தொடர்பில் மக்கள் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

கருத்துக்கணிப்பு ஒன்றின் மூலம் இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

நானோஸ் ரிசர்ச் நிறுவனத்தினால் அண்மையில் முன்னெடுக்கப்பட்ட கருத்துக்கணிப்பின் போது இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

பொருத்தமற்ற நேரத்தில் கார்பன் வரி அறவீடு மேற்கொள்ளப்படுவதாக கருத்துக்கணிப்பில் பங்கேற்ற மூன்றில் இரண்டு பங்கினர் தெரிவித்துள்ளனர்.

காலநிலை மாற்றத்தை கருத்தில் கொண்டு இந்த வரி அறவீடு மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இவ்வாறு வரி அறவீடு செய்வதனால் காலநிலையில் தாக்கம் ஏற்படாது என பொதுமக்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

கருத்துக்கணிப்பில் பங்கேற்ற பெரும்பான்மையான மக்கள் வரி அளவீடு பொருத்தமானது என தெரிவித்துள்ளனர்.



# ரொரான்ரோவில் நாய்களை கட்டி வளர்க்குமாறு அறிவுறுத்தல்!

ஆகத்து 09, 2023

ரொரான்ரோவில் செல்லப் பிராணிகளை குறிப்பாக நாய்களை வளர்ப்போருக்கு ஓர் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

நாய்களை கட்டி வளர்க்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

சிறுவர்கள், பாதசாரிகள் மற்றும் சைக்கிள் ஓட்டிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரை நாய்கள் கடிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

நாய்கடி சம்பவங்கள் அண்மைக் காலமாக ரொரான்ரோவில் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே நாய்களை வளர்க்கும் நபர்கள் அவற்றை கட்டி வளர்க்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாய்களை கட்டுப்படுத்தி வளர்ப்பது அதன் உரிமையாளர்களின் பொறுப்பாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ரொரான்ரோவில் 1316 நாய் கடி சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இது கடந்த 2021 ஆம் ஆண்டை விடவும் 39 வீத அதிகரிப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

நாய்களை கட்டி வளர்க்காத செல்லப்பிராணி உரிமையாளர்களுக்கு 365 டாலர்கள் அபராதம் விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



# ரொரான்ரோ பெரும் பாகத்தில் எரிபொருள் விலை அதிகரிப்பு!

ஆகத்து 10, 2023

ரொரான்ரோவில் எரிபொருள் விலை அதிகரிப்பு பதிவாகும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

ரொரன்ரோ பெரும்பாக பகுதி மற்றும் தென் ஒன்றாரியோ பகுதிகளில் இவ்வாறு பெற்றோலின் விலை அதிகரிக்கப்பட உள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை விலை அதிகரிப்பு பதிவாகும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

கடந்த ஒன்பது மாதங்களில் பதிவாகும் அதிக தொகையாக எதிர்வரும் வெள்ளியன்று விலை அதிகரிப்பு பதிவாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 1.73 டொலர்களாக பதிவாகும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

உலகளாவிய ரீதியில் எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாக இவ்வாறு கனடாவிலும் விலை அதிகரிப்பு பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



# கனடாவில் காட்டுத் தீ தொடர்பில் வெளியான எதிர்வுகூறல்!

ஆகத்து 12, 2023

கனடாவில் காட்டுத் தீ அனர்த்தம் இன்னும் சில வாரங்களுக்கு நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இம்முறை காட்டுத் தீ சம்பவங்கள் வழமைக்கு மாறான வகையில் அதிகமாக காணப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கோடை காலத்தில் வழமையாக ஏற்படும் காட்டுத் தீ சம்பவங்களை விடவும் இந்த ஆண்டு அதிகளவு சம்பவங்களை பதிவாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒன்றாரியோ, பிரிட்டிஸ் கொலம்பியா போன்ற பகுதியில் தொடர்ச்சியாக காட்டுத் தீ அதிகளவில் பதிவாகும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் செப்டம்பர் மாத இறுதி வரையில் காட்டுத் தீ பரவுகை நீடிக்கும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது. காட்டுத் தீ சம்பவங்கள் குறித்து மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஆண்டுகளிலும் கூடுதலான அளவில் காட்டுத் தீ பரவுகைகள் ஏற்படலாம் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவில் காட்டுத் தீ காரணமாக இந்த ஆண்டில் 13.4 மில்லியன் ஹெக்ரெயார் காணி அழிவடைந்துள்ளது.



# கனடாவில் மீண்டும் பணவீக்கத்தில் ஏற்பட்டுள்ள மாற்றம்!

ஆகத்து 14, 2023

கனடாவில் மீண்டும் பணவீக்கம் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் காலங்களில் பணவீக்கம் அதிகரிக்கும் என பொருளியல் ஆய்வாளர்கள் எதிர்ப்பு கூறியுள்ளனர்.

கடந்த ஜூலை மாதம் பணவீக்கம் அதிகரித்திருந்தது.

கனடாவின் வருடாந்த பணவீக்க வீதம் கடந்த ஜூன் மாதத்தில் பாரிய அளவில் வீழ்ச்சியை பதிவு செய்திருந்தது.

குறிப்பாக 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தின் பின்னர் பதிவான குறைந்த பணவீக்க வீதம் கடந்த ஜூன் மாதம் பதிவாகி இருந்தது.

ஜூன் மாதத்தின் பண வீக்க வீதம் 2.8 வீதமாக காணப்பட்டது. எனினும் கடந்த மாதத்தில் இந்த நிலையில் மாற்றம் ஏற்பட்டு பணம் வைக்க வீதம் 3.1 வீதமாக அதிகரித்துள்ளது.

குறிப்பாக நாட்டில் பெட்ரோலின் விலை அதிகரிப்பு காரணமாக இவ்வாறு பணவீக்கம் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பொதுவாக பொருட்களின் விலைகள் அதிகரித்துச் செல்லும் போக்கினை எதிர்வரும் காலங்களில் அவதானிக்க முடியும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாட்டில் பணம் வீக்க வீதத்தை இரண்டு வீதத்தில் பேணுவதற்கு மத்திய வங்கி முயற்சி செய்து வருகின்ற நிலையில் தற்போது மீண்டும் பணவீக்கம் அதிகரித்துச் செல்லும் போக்கு பதிவாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# தமிழக செய்திகள்



# வவுனியாவை சேர்ந்த நால்வர் தமிழகத்தில் தஞ்சம்!

யூலை 31, 2023

வவுனியா தவசிக்குளம் பகுதியை சேர்ந்த ஒரு குடும்பத்தை சேர்ந்த நால்வர் தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

கணவன் , மனைவி மற்றும் அவர்களின் இரு பிள்ளைகள் என நால்வரே மன்னாரில் இருந்து சட்டவிரோதமான முறையில் கடல் வழியாக தமிழகம் அரிச்சல்முனை கடற்கரையை இன்றைய தினம் திங்கட்கிழமை அதிகாலை சென்றடைந்துள்ளனர்.

தகவல் அறிந்த கடற்படையினர் அவர்களை மீட்டு மண்டபம் மரைன் காவல் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்

இலங்கையில் இருந்து அகதிகளாக தமிழகம் சென்றவர்களின் எண்ணிக்கை இவர்கள் நால்வருடன் 269 ஆக உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது



# அரியானா மாநிலத்தில் மதக்கலவரத்தை ஏற்படுத்தும் வன்முறையாளர்களை சட்டத்தின் துணையோடு இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க வேண்டும்! சீமான் வலியுறுத்தல்

ஆகத்து 03, 2023

மணிப்பூர் மாநிலத்தில் நடந்தேறி வரும் வன்முறைகளும், கலவரங்களும் நாட்டையே உலுக்கி வரும் நிலையில், அரியானா மாநிலத்தின் ஒரு பகுதியில் மதக்கலவரம் வெடித்து, அது மற்ற பகுதிகளுக்கும் பரவிய செய்தியானது பெருங்கவலையைத் தருகிறது. விஷ்வ ஹிந்து பரிஷத் சார்பில் 'பிரிஜ் மண்டல் ஜலாபிஷேக் யாத்ரா' என்கிற பெயரில் நடந்த பேரணியில் வன்முறை ஏற்பட்டு, அது மதக்கலவரமாக உருமாறி, ஐந்து உயிர்களைப் பலியெடுத்திருப்பதென்பது தற்செயலானதல்ல் ஓராண்டுக்குள் பாராளுமன்றத்தேர்தல் வரவிருக்கும் நிலையில் வடமாநிலங்களில் நிகழ்ந்தேறும் தொடர் வன்முறைகளும், கலவரங்களும் தேர்தலுக்காக சங் பரிவார் அமைப்புகள் நிகழ்த்தும் பிரித்தாளும் சூழ்ச்சியின் முன்னோட்டமேயாகும். நாட்டு மக்களை மதத்தால் துண்டாடும் இத்தகையப் போக்குகளும், வன்முறைச்செயல்களும், மதமோதல்களும் கடும் கண்டனத்திற்குரியவையாகும்.

அரியானா மாநிலத்தின் குருகிராம் மாவட்டத்தில் தொடங்கிய விஷ்வ ஹிந்து பரிஷத்தின் பேரணி நூ மாவட்டத்தின் கேட்லா மோட் பகுதிக்குள் நுழைந்தபோது அப்பேரணியினருக்கும், மற்றொரு பிரிவினருக்கும் ஏற்பட்ட மோதலே இக்கலவரத்திற்கு வித்திட்டிருக்கிறது. நூ பகுதியில் தொடங்கிய கலவரம் அருகாமையிலுள்ள குர்கான், ஃபரிதாபாத், பல்வால் ஆகிய மாவட்டங்களுக்கும் பரவி, மாநிலம் முழுமைக்கும் அசாதாரணச் சூழலையும், பதற்றத்தையும் ஏற்படுத்தியிருப்பது அம்மாநில அரசின் படுதோல்வியையே காட்டுகிறது. பசுவதை செய்ததாகக் கூறிய இரு இளைஞர்களை எரித்துக்கொன்ற கொலைவழக்கு உள்ளிட்டப் பல்வேறு வழக்குகளில் தொடர்புடைய பஜ்ரங் தள உறுப்பினரான மோனு மனேசர் சமூக வலைத்தளத்தில் வெளியிட்டக் காணொளியே இவ்வளவு பெரிய வன்முறைக்கும், உயிரிழப்புகளுக்கும் மூலக்காரணமாக அமைந்திருக்கிறதெனும்போது, இது சங் பரிவார் அமைப்புகளால் திட்டமிட்டு நிகழ்த்தப்பட்ட கொடும் நிகழ்வென்பது உறுதியாகிறது. பாஜக ஆட்சிக்கு வந்தது முதல், நாடு முழுமைக்கும் ஆங்காங்கே நடந்தேறும் மதமோதல்களும், கலவரங்களும் உலகரங்கில் இந்தியாவின் நன்மதிப்பைக் குலைத்து, இந்நாட்டுக் குடிமக்களை வெட்கித் தலைகுனியச் செய்கின்றன. உள்நாட்டில் நிலவும் இத்தகையக் கலவரச்சூழலை கட்டுப்படுத்தாது, வெளிநாடுகளுக்குச் சென்று பிரதமர் நரேந்திரமோடி சனநாயகம் பற்றிப் பேசுவதெல்லாம் வெட்கக்கேடானது.



ஆகவே, மணிப்பூர், அரியானா என வடமாநிலங்களிலுள்ள கலவரச் சூழலைக் கட்டுக்குள் கொண்டு வந்து, அமைதி திரும்பவும், சமூக நல்லிணக்கம் நிலவவும் ஒன்றியத்தை ஆளும் பாஜக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், அரியானாவில் மதமோதல்களை உருவாக்கும் வன்முறையாளர்களை சட்டத்தின் துணையோடு இரும்புக்கரம் கொண்டு அம்மாநில அரசு ஒடுக்க வேண்டுமெனவும் நாம் தமிழர் கட்சி சார்பாக வலியுறுத்துகிறேன்.

# கடலோர ஒழுங்குமுறை மண்டல மேலாண்மையின் வரைபடத்தில் விடுபட்டுள்ள தமிழ்நாட்டு மீனவ கிராமங்களின் பெயர்களை மீண்டும் சேர்க்க வேண்டும்! சீமான் வலியுறுத்தல்

ஆகத்து 06, 2023

இந்திய ஒன்றிய அரசின் கடலோர ஒழுங்குமுறை மண்டல மேலாண்மை வெளியிட்டுள்ள புதிய வரைபடத்தில் தமிழ்நாட்டு மீனவ கிராமங்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளது பெரும் அதிர்ச்சியளிக்கிறது. தமிழ்நாட்டு கடற்கரை கிராமங்களைத் தனியார் பெரு முதலாளிகளுக்குத் தாரைவார்க்க முயலும்



மோடி அரசின் சூழ்ச்சி வன்மையான கண்டனத்துக்குரியது.

கடலோர ஒழுங்குமுறை மண்டல மேலாண்மை வெளியிட்டுள்ள புதிய இந்திய வரைபடத்தில் தமிழ்நாட்டின் “நாகை மாவட்டத்தில் உள்ள அக்கரைப்பேட்டை, நம்பியார் நகர், ஆரியநாட்டுத்தெரு, புஷ்பவனம், விழுந்தமாவடி உள்ளிட்ட பல கிராமங்களின் பெயர்கள் திட்டமிட்டு நீக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் கடற்கரை கிராமங்களின் பெயர்களை நீக்கியுள்ளதன் மூலம் அப்பகுதிகளில் மக்கள் யாரும் வசிக்கவில்லை, குடியிருப்புகள் ஏதுமில்லை என்பது போன்ற தோற்றத்தை உருவாக்க மோடி அரசு முயல்கிறது. அதுமட்டுமன்றி தற்போது பெயர்கள் நீக்கப்பட்டுள்ள பகுதிகளில் அரசு ஏதேனும் நாசகரத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்குக் கருத்துக்கேட்புக் கூட்டத்தினை நடத்தினால், அதில் அங்கு வாழும் மக்கள் இனி அதிகாரப்பூர்வமாக பங்கேற்க முடியாது என்பதுதான் இந்தப் பெயர் நீக்கத்தின் பின்னால் அடங்கியுள்ள மிகப்பெரிய சூழ்ச்சியாகும்.

ஏற்கனவே மீனவ மக்களின் கடும் எதிர்ப்பினையும் மீறி சென்னை காட்டுப்பள்ளி கடற்கரைப் பகுதியில் அதானி நிறுவனம் துறைமுகம் கட்டுவதற்கு அனுமதியளித்துள்ள மோடி அரசு, தற்போது செய்துள்ள பெயர் நீக்கத்தின் மூலம் மேலும் பல தமிழ்நாட்டு கடற்கரை கிராமங்களை தனியார் துறைமுகங்கள் கட்வதற்குத் தாரைவார்க்க திட்டமிட்டுள்ளது என்பதும் உறுதியாகிறது.

பன்னாட்டு பெருமுதலாளிகளின் கொள்ளை இலாபத்திற்காக சொந்த நாட்டு கடற்கரைப் பகுதிகளை வளவேட்டையாடும் வாயில்களாக மாற்றி கடல் வளங்களையும், மீனவ மக்களின் வாழ்வாதாரத்தையும் அழித்தொழிப்பதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

ஆகவே, இந்திய ஒன்றிய அரசு கடலோர ஒழுங்குமுறை மண்டல மேலாண்மை வெளியிட்டுள்ள புதிய இந்திய வரைபடத்தில் விடுபட்டுள்ள தமிழ்நாட்டு மீனவ கிராமங்களின் பெயர்களையும் உடனடியாகச் சேர்த்து பதிவு செய்திட உத்தரவிட வேண்டுமென்றும், காட்டுப்பள்ளி உள்ளிட்ட தமிழ்நாட்டின் எந்தவொரு கடற்கரைப் பகுதியிலும் தனியார் நிறுவனங்கள் துறைமுகங்கள் அமைக்க அனுமதிக்க கூடாதெனவும் நாம் தமிழர் கட்சி சார்பாக வலியுறுத்துகிறேன்.டுமென தமிழ்நாடு அரசினைக் வலியுறுத்துகிறேன்.


ஒன்றிய அரசின் வரைபடத்தில் நாகை மீனவ கிராமங்கள் நீக்கம்
மீனவர்கள் அதிர்ச்சி

# கேரள மாநிலம் சேத்துக்குளியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஓட்டுனர் மீது இனவெறி தாக்குதல்! சீமான் கண்டனம்

ஆகத்து 07, 2023

கேரள மாநிலம் சேத்துக்குளியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஓட்டுனர் மீது இனவெறி மனப்பான்மையுடன் தாக்குதல் நடத்தப் பட்டுள்ளது பெரும் அதிர்ச்சி அளிக்கிறது. அதனை தடுக்க முயன்ற தமிழ்ப் பெண் தொழிலாளர்களையும் தாக்குதலில் ஈடுபட்ட மலையாளிகள் ஆபாசமாக திட்டி மிரட்டியுள்ளது வன் மையான கண்டனத்துக்குரியது.

அண்மையில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஆந்திர காவல்துறையினர் அத்துமீறி நுழைந்து தொல்தமிழ் குறவர்குடி மக்களைத் தாக்கி, பெண்களை வன்புணர்வு செய்த கொடுமைகளைத் தடுக்கத்தவறி கைகட்டி வேடிக்கைப் பார்த்த திமுக அரசு, தற்போது கேரளாவில் தமிழ் ஓட்டுனர் தாக்கப்படுவதையும் கண்டிக்காமல் வேடிக்கைப்பார்ப்பது தமிழ்நாட்டில் நடைபெறுவது தமிழர்களுக்கான ஆட்சியா என்ற ஐயத்தை ஏற்படுத்துகிறது?

தமிழ் ஓட்டுனர் மீது இனவெறியுடன் கொடுந்தாக்குதல் நடத்தியுள்ள கேரள மாநிலத்தவர்கள் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென தமிழ்நாடு அரசினைக் வலியுறுத்துகிறேன்.

# திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரியில் பள்ளி மாணவர்களுக்கிடையே சாதிய கொடூரம் வீடு புகுந்து பள்ளி மாணவனை வெட்டிய சம்பவம்!

ஆகத்து 01, 2023



திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி பெருந்தெருவைச் சேர்ந்த கூலி தொழிலாளிகளான முனியாண்டி, அம்பிகாபதி தம்பதியரின் 17 வயது மகனும், 14 வயது மகளும் வள்ளியூரில் உள்ள அரசு பள்ளியில் இவர்கள் இருவரும் 12ஆம் வகுப்பு மற்றும் 9ஆம் வகுப்பு படித்து வருகின்றனர்.

இப்பள்ளியில் மாணவர்களுக்கு இடையே கடந்த சில வாரங்களுக்கு முன் தகராறு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து இவர்களது மகன் கடந்த ஒரு வாரமாக பள்ளிக்கு செல்லாமல் வீட்டிலேயே இருந்துள்ளார்.

ஆகஸ்ட் 09ஆம் திகதி பள்ளி நிர்வாகத்தினர், சின்னத்துரையின் பெற்றோரை தொடர்புகொண்டு மகனை பள்ளிக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவித்துள்ளனர். பள்ளிக்குச் சென்ற சின்னத்துரையிடம் பள்ளிக்கு வராதது குறித்து ஆசிரியர்கள் விசாரித்தபோது:

அதற்கு சின்னத்துரை, சக மாணவர்கள் தன்னை அடிக்கிறார்கள், துன்புறுத்துகிறார்கள் என்று தெரிவித்திருக்கிறார். உடனே அம்பிகா தனது மகனை பள்ளிக்கு அழைத்து சென்று ஆசிரியரிடம் முறையிட்டு இருக்கிறார்; ஆசிரியரும் சின்னத்துரையை துன்புறுத்திய குறிப்பிட்ட மாணவர்களை அழைத்து எச்சரிக்கை செய்து அனுப்பி உள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த அந்த மாணவர்கள் சின்னத்துரை வீட்டிற்குள் கத்தி உள்ளிட்ட ஆயுதங்களுடன் புகுந்த அடையாளம் தெரியாத 6 பேர் கொண்ட கும்பல், சின்னத்துரையை சரமாரியாக வெட்டியது. இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த தங்கை சந்திரா செல்வி அவர்களை தடுக்க முயன்றபோது, அவருக்கும் கையில் வெட்டுக் காயம் ஏற்பட்டது.

இருவரின் கூச்சல் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் ஓடி வந்த நிலையில், அந்த கும்பல் தப்பியோடியது. பலத்த இரத்த காயங்களுடன் கீழே விழுந்து கிடந்த சின்னத்துரை, சந்திரா செல்வி ஆகிய இருவரையும் அக்கம் பக்கத்தினர் மீட்டு நாங்குநேரி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர்.

இந்த சம்பவங்கள் தொடர்பாக போலீசார் நடத்திய தீவிர விசாரணையில் 12ஆம் வகுப்பு மாணவர்கள் 4 பேர் உட்பட 6 சிறுவர்களுக்கு இந்த தாக்குதல் சம்பத்தில் தொடர்பிருப்பது தெரிய வந்தது. அதனடிப்படையில் அவர்களை கைது செய்து போலீசார் 6 பேர் மீதும் வன்கொடுமை தடுப்புச் சட்டம், கொலை முயற்சி உள்ளிட்ட 5 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்தனர். பின்னர் 6 பேரையும் போலீசார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, நெல்லையில் உள்ள சிறார் கூர்நோக்கு இல்லத்தில் அடைத்தனர்.

# தம்பி சின்னத்துரை மீது கொலைவெறித்தாக்குதல் தொடுத்த சாதிவெறியர்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் – சீமான்!

ஆகத்து 01, 2023

நாங்குநேரியில் பள்ளி மாணவன் தம்பி சின்னத்துரையும், அவரது தங்கையும் சாதிவெறியர்களால் வீடுபுகுந்து தாக்கப்பட்ட செய்தி பெரும் அதிர்ச்சியளிக்கிறது. பள்ளிக்கூடத்தில் சக மாணவர்கள் சிலரால் சாதியப்பாகுபாடு காட்டப்பட்டு அவமதிக்கப்பட்டது குறித்து, பள்ளி நிர்வாகத்திடம் புகார் கொடுத்ததால் தம்பி சின்னத்துரை மீதும், தடுக்க வந்த அவரது தங்கை மீதும் கொலைவெறித்தாக்குதல் தொடுக்கப்பட்டு, இருவரும் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதும், இத்தாக்குதலின்போது அதிர்ச்சி தாளாது அவரது தாத்தா கிருஷ்ணன் மாரடைப்பால் இறந்துபோனதுமான கோர நிகழ்வுகள் பெரும் மனவேதனையளிக்கின்றன.





ஒரு நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்க வேண்டிய அறிவுக் கருவறையாக விளங்கும் கல்விக்கூடங்களிலேயே சாதியரீதியாகப் பாகுபாட்டுணர்வு காட்டப்படுவதும், அதன்விளைவாக கொடும் வன்முறை ஏவப்பட்டதுமான நிகழ்வுகள் வெட்கித் தலைகுனியச்செய்கின்றன. பள்ளி, கல்லூரி எனும் கல்வி நிறுவனங்களில் சாதி, மதரீதியான வேறுபாட்டுணர்வுகளும், செயல்பாடுகளும் ஒருபோதும் ஏற்புடையதல்ல! அவை கடும் சட்ட நடவடிக்கையின் மூலம் முற்றாகத் துடைத்தெரியப்பட வேண்டும். “ஒழுக்கத்தின் மூலமான உயர்ந்த குணங்களும், செயல்பாடுகளும்தான் பெருமையே ஒழிய, சாதியல்ல” என்கிறார் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர். அப்படி, ஒழுக்கத்தினாலும், உயர்ந்த குணத்தினாலும், கல்வித்திறனாலும் சிறந்த மாணவனாக விளங்கிய தம்பி சின்னத்துரையை சாதியத்தினைக் கொண்டு தாழ்த்த முற்படுவதும், ஒடுக்க நினைப்பதும், அதன் நீட்சியாக வன்முறையை ஏவிவிட்டதுமான கொடுங்கோல் போக்குகள் ஏற்கவே முடியாத பெருங் கொடுமையாகும்.

ஆகவே, இவ்விவகாரத்தில் சாதிவெறியோடு கொலைவெறித் தாக்குதல் நடத்திய வன்முறையாளர்களைக் கடும் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்த வேண்டுமெனவும், தம்பி சின்னத்துரைக்கும், அவரது தங்கைக்கும் உயரிய சிகிச்சை அளித்து, அவர்கள் மீண்டுவரவும், கல்வியினைப் பாதுகாப்பாகத் தொடரவும் வழிவாய்ப்புகளைச் செய்துதர வேண்டுமெனவும் தமிழ்நாடு அரசை நாம் தமிழர் கட்சி சார்பாக வலியுறுத்துகிறேன்.

# உலக செய்திகள்

## ஹவாய் காட்டுத்தீயில் உயிரிழப்பு அதிகரிப்பு!

ஆகத்து 12, 2023

ஹவாய் காட்டுத்தீ காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 67 ஆக அதிகரித்துள்ளதுடன் 100க்கும் அதிக மானவர்கள் காணாமல்போயுள்ளனர்.



ஹவாயில் காட்டுத்தீயினால் முற்றாக அழிவடைந்து போன லகையினாவின் மக்கள் தங்கள் பகுதிகளிற்கு திரும்புவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதை தொடர்ந்து அவர்கள் தங்கள் பகுதிக்கு திரும்பிக் கொண்டிருக்கின்ற நிலையில் இழப்புகள் குறித்த விபரங்கள் வெளியாகின்றன.

அவர்கள் தங்கள் வாழ்க்கையில் ஒருபோதும் காணாத அழிவுகளை காணவேண்டியிருக்கும் என்ற எச்சரிக்கைக்கு மத்தியில் அந்த பகுதி மக்கள் தங்கள் வீடுகளிற்கு திரும்பிக்கொண்டிருக்கின்றனர்.

கடந்தவார தீ காரணமாக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அந்த நகரம் முற்றாக அழிவடைந்துள்ளது.

இந்த சம்பவத்தால் தங்கள் ஆடைகளுடன் அந்த பகுதியிலிருந்து வெளியேறிய மக்கள் தாங்கள் தங்கள் அடை



யாளத்தை நிரூபிக்கவேண்டிய நிலையேற்படலாம் என கவலை வெளியிட்டுள்ளனர்.

## இங்கிலாந்து வங்கி வட்டி விகிதம் 15 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு உயர்வு!

ஆகத்து 03, 2023

இங்கிலாந்து வங்கி 15 ஆண்டுகள் இல்லாத அளவுக்கு அதன் வட்டி விகிதத்தை 5.25% ஆக இன்று வியாழக்கிழமை உயர்த்தியது.

பல பொருளாதார வல்லுநர்கள் எதிர்பார்த்தபடி, வட்டி விகிதம் கால் சதவீத புள்ளிகளால் அதிகரிக்கப்பட்டது. 14 முறையாக இந்த விகித உயர்வு கொண்டு வரப்பட்டது.

தொடர்ச்சியான பண வீக்க அழுத்தங்களின் அறிகுறிகளை கண்காணிப்பாளர்கள் கண்காணித்து வருகின்றனர். ஸ்டெர்லிங் பவுண்ட் மற்றும் பிரிட்டிஷ் அரசாங்கப் பத்திரங்கள் இரண்டும் சிறிதளவு குறைந்த பங்குகள் உயர்ந்தன.

பிரிட்டனின் வாழ்க்கைச் செலவு நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ளது. இரண்டு வருட கொரோனா தொற்றுநோய் இடைப்பட்ட கால பூட்டுதல்களால் தீவிரமடைந்தது. ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து இராச்சியம் வெளியேறியதும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பின்னர் உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பின் பொருளாதார விளைவுகளால் அது மேலும் அதிகரித்தது.

கடந்த மாதம், பணவீக்கம் கணிக்கப்பட்டதை விட 7.9% ஆகக் குறைந்துள்ளது. மேலும் தீவிரமான வட்டி விகித உயர்வை அறிமுகப்படுத்துவதற்கான அழுத்தத்தைத் தளர்த்தியது.

பாங்க் ஆஃப் இங்கிலாந்து, அமெரிக்க பெடரல் ரிசர்வ் மற்றும் ஐரோப்பிய வங்கியுடன் இணைந்து, ஒரு வருடத்திற்கும் மேலாக வட்டி விகிதங்களை தொடர்ந்து உயர்த்தும் கொள்கையை கடைப்பிடித்து வருகிறது.

பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் முயற்சியில், நுகர்வோர் மற்றும் வணிகங்கள் வாங்குவதற்கு கடன் வாங்குவதற்கு அதிக



விலை கொடுக்கிறது.

## தெற்காசியாவில் 76 சதவீதமான சிறார்கள் அதிக வெப்பநிலை தாக்கத்திற்கு உள்ளாகின்றனர்!

### யுனிசெ:.ப் தெற்காசிய பிராந்தியப் பணிப்பாளர் சஞ்சய் விஜேசேகர

ஆகத்து 07, 2023

யுனிசெஃப் மதிப்பாய்வின்படி, ஏனைய அனைத்துப் பிராந்தியங்களுடன் ஒப்பிடும்போது, தெற்காசியாவில் 76 சதவீதமான சிறார்கள் அதிக வெப்பநிலை தாக்கத்திற்கு உள்ளாவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, தெற்காசியாவில் 18 வயதுக்குட்பட்ட சுமார் 460 மில்லியன் சிறார்கள் அதிக வெப்பநிலைக்கு உள்ளாகியுள்ளனர். குறிப்பாக தெற்காசியாவில் 4 சிறார்களில், 3 பேர் ஏற்கனவே அதிக வெப்பநிலை தாக்கத்திற்கு ஆளாகியுள்ளனர். உலகளவில் யூலை மாதம் இதுவரையில் பதிவு செய்யப்பட்ட அதிக வெப்பமான மாதமாகும். தெற்காசியாவில் உள்ள நாடுகள் தற்போது உலகில் அதிக வெப்பமானவை அல்ல, ஆனால் தெற்காசியாவில் நிலவும் வெப்பம், மில்லியன் கணக்கான பாதிக்கப்படக்கூடிய சிறார்களின் உயிருக்கு ஆபத்தான அபாயங்களைக் கொண்டுவருவதாக யுனிசெஃப் இன் தெற்காசிய பிராந்திய பணிப்பாளர் சஞ்சய் விஜேசேகர தெரிவித்துள்ளார்

இதேவேளை, நிலவும் அதிக வெப்பத்துடனான காலநிலை காரணமாக சிறார்களிடையே நோய்கள் பரவக்கூடிய அதிக வாய்ப்புகள் உள்ளதாக சுகாதார துறை அறிவுறுத்தியுள்ளது. இதன் காரணமாக தாய்மார்கள் சிறார்கள் தொடர்பில் அதிக அவதானம் செலுத்த வேண்டும் என ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் தீபால் பெரேரா கோரிக்கை விடுத்துள்ளார். அதேநேரம், நீர் அருந்தாமல் சிறுவர்கள் பாடசாலை உள்ளிட்ட வெளியிடங்களுக்கு செல்லும் போது, அவர்கள் அசௌகரியத்துக்கு உள்ளாக நேரிடும். இதனை தவிர்த்து கொள்ளவதற்காக, அதிக நீரை அருந்துதல், இளநீர், தோடம்பழம், மற்றும் எலும்பிச்சை உள்ளிட்ட பானங்களை எடுத்துக்கொள்வது போன்ற அறிவுறுத்தல்களை பின்பற்றுமாறு சுகாதார துறை தெரிவித்துள்ளது.




## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# இத்தாலி லம்பேடுசாவில் கப்பல் விபத்து 41 பேர் பலி!

ஆகத்து 09, 2023

இத்தாலியின் லம்பெடுசா தீவில் கப்பல் ஒன்று விபத்துக்குள்ளானதில் 41 அகதிகள் உயிரிழந்ததாக இத்தாலிய ஊடகங்கள் இன்று புதன்கிழமை செய்தி வெளியிட்டுள்ளன.

உயிர் பிழைத்தவர்களை மேற்கோள் காட்டியே செய்திகள் வெளியாகின.

துனிசிய நகரமான Sfax இல் இருந்து இத்தாலிக்கு கப்பல் புறப்பட்டது. அக்கப்பலில் ஐவரி கோஸ்ட் மற்றும் கினியாவைச் சேர்ந்த மூன்று ஆண்கள் மற்றும் ஒரு பெண், மூன்று குழந்தைகள் உட்பட 45 அகதிகள் பயணித்துள்ளனர்.

கப்பலானது 6 மணி நேரம் பயணித்துள்ளது. பெரிய அலை ஒன்றினால் கப்பல் கவிழ்க்கப்பட்டது என தப்பிய அகதிகள் கூறுகின்றனர்.

சம்பவத்தில் 41 பேர் உயிரிழந்தனர். அவர்களில் 15 பேர் மட்டுமே பாதுகாப்பு அங்கிகளை அணிந்திருந்தனர். ஆனால் அவர்களும் நீரில் மூழ்கி இறந்ததாக உயிர் பிழைத்த நால்வர் தெரிவித்தனர்.

உயிர் பிழைத்தவர்கள் மால்டாவின் சரக்குக் கப்பலால் மீட்கப்பட்டு, இத்தாலிய கடலோரக் காவல்படையினரால் லம்பேடுசாவுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். மேலும் அவர்கள் அதிர்ச்சியில் இருந்ததாக அதிகாரிகள் தெரிவிக்



கின்றனர்.

# ஐரோப்பாவில் அழிவை ஏற்படுத்துகிறது காலநிலை மாற்றம்!

ஆகத்து 09, 2023

ஸ்லோவேனியாவில் வெள்ளம், போர்ச்சுகலில் காட்டுத் தீ, ஸ்பெயினில் வெப்ப அலை மற்றும் நோர்வேயில் நிலச்சரிவுகள் என வடக்கிலிருந்து தெற்கு நோக்கி, ஐரோப்பா மீண்டும் காலநிலையை மாற்ற நிகழ்வுகளுடன் ஐரோப்பா போராடி வருகிறது.

**நோர்வேயில் நிலச்சரிவு**



தெற்கு நோர்வே மலைப்பகுதி முழுவதும் ஒரே இரவில் கனமழையால் நிலச்சரிவுகள் ஏற்பட்டது. அதிக கனமழைக்கு தயாராகுமாறு குடியிருப்பாளர்களை அதிகாரிகள் எச்சரித்த நிலையில், நாட்டின் பல பகுதிகளில் வெள்ள அபாய எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டது.

ஹன்ஸ் புயல் கிழக்கு நோர்வேயைத் தாக்கியதில் இருந்து குறைந்தது இரண்டு பேர் இறந்தனர். மேலும் வீடுகளின் கூரைகள் அழிக்கப்பட்டன.

நோர்வேயின் வெள்ளம் அல்லது நிலச்சரிவு காரணமாக பல சாலைகள் மூடப்பட்டுள்ளதாகவும், இரவு முழுவதும் வெளியேற்றம் தொடர்ந்ததாகவும் செய்திகள் வெளியாகின.

ஒஸ்லோவின் வடக்கே உள்ள பிராந்தியத்தில் 600க்கும் மேற்பட்டோர் வெளியேற்றப்பட்டதாக காவல்துறை கூறியது. நிலைமை இன்னும் தெளிவற்றதாகவும் குழப்பமானதாகவும் உள்ளது என்று தெற்கு நோர்வேயில் உள்ள காவல்துறையினர் தெரிவித்தனர்.

ஞாயிற்றுக்கிழமை பிற்பகுதியில் ஸ்வீடனைத் தாக்கிய ஹான்ஸ் புயலால் ஸ்காண்டிநேவியா மற்றும் பால்டிக் பகுதிகள் தாக்கப்பட்டு திங்கள்கிழமை நோர்வேயை அடைந்தன.

ஸ்வீடிஷ் வானிலை மற்றும் நீரியல் நிறுவனம் (SMHI) செவ்வாயன்று மத்திய ஸ்வீடனின் சில பகுதிகளுக்கு சிவப்பு எச்சரிக்கையை வெளியிட்டது. மிகப் பெரிய அளவிலான மழை பல இடங்களில் நீரோடைகள் மற்றும் பள்ளங்களில் மிக அதிக ஓட்டங்களை ஏற்படுத்துகிறது என்று எச்சரித்தது.

**ஸ்பெயினில் மற்றொரு வெப்ப அலை**

ஸ்பெயினின் வானிலை நிறுவனமான AEMET, குறைந்தபட்சம் வெள்ளிக்கிழமை வரை வெப்பநிலை தொடர்ந்து உயரும் என்று எதிர்பார்க்கிறது. தெற்கு அண்டலூசியா பிராந்தியத்தின் சில பகுதிகள் 44 C (111 F) தாண்டியுள்ளது. இந்த



கோடையில் ஸ்பெயினின் மூன்றாவது வெப்ப அலை இது வாகும்.

இந்த வார இறுதியில் மூன்று காட்டுத்தீக்கள் ஏற்பட்டதாகவும் அவை நேற்று செவ்வாய்க்கிழமைக்குள் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டன ஸ்பெயின் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

ஸ்பெயினின் வடகிழக்கு பகுதியில் மிகப்பெரிய தீவிபத்து ஏற்பட்டது. சுமார் 600 ஹெக்டேர் (1,500 ஏக்கர்) எரிந்துள்ளதாகவும், 150 பேர் வெளியேற்றப்பட வேண்டும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

நாட்டின் தென்கிழக்கில், போர்ச்சுகலின் எல்லைக்கு அருகில், தீயணைப்பு வீரர்கள் இன்னும் ஒரு தீயுடன் போராடி வருகின்றனர். இது கிராமப்புற விடுதிகளில் உள்ள சுமார் 20 பேரை வெளியேற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

**போர்த்துக்கல்லில் காட்டுத்தீ**



நேற்று செவ்வாயன்று போர்ச்சுகலில் மூன்று பெரிய தீப்பிழம்புகள் எரிந்து கொண்டிருந்தன. தென்மேற்கில் மிகப்பெரிய தீ ஒடெமிரா நகருக்கு அருகில் இருந்தது இச்சம்பவம் நடந்தது.

குறைந்தது 7,000 ஹெக்டேர் (17,300 ஏக்கர்) தீயை எரித்த ஒடெமிரா தீயை எதிர்த்துப் போராட சுமார் 1,000 தீயணைப்பு வீரர்கள், 320 வாகனங்கள் மற்றும் ஒன்பது விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக போர்த்துக்கல்களில் தேசிய குடிமைப் பாதுகாப்பு சேவை தெரிவித்துள்ளது.

சுமார் 1,500 பேர், குடியிருப்பாளர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள், அப்பகுதியில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். வெப்பநிலை உயரும்போது சமீபத்திய தொடர் காட்டுத்தீ ஏற்படுகிறது.

லிஸ்பனுக்கு வடகிழக்கே சுமார் 80 கிலோமீட்டர்கள் (50 மைல்) தொலைவில் உள்ள சாண்டரேம் நகரம், திங்களன்று 46.4 C (115.5 F) இல் ஆண்டின் அதிகபட்ச வெப்பநிலையாக பதிவாகியுள்ளது.

**ஸ்லோவேனியா**



கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் ஸ்லோவேனியா நாட்டில் கடந்த 30 ஆண்டுகள் இல்லாத அளவுக்கு கனமழையால் மோசமான வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. வெள்ளப் பெருக்கில் குறைந்தது 6 பேரைக் கொல்லப்பட்டனர். மக்கள் குடியிருப்புகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன.

வடமேற்கு மற்றும் மத்திய ஸ்லோவேனியாவைச் சுற்றியுள்ள வீடுகளில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.
கட்டிடங்கள் மற்றும் பாலங்களை அழித்து 500 மில்லியன் யூரோக்கள் ($549 மில்லியன்) சேதத்தை ஏற்படுத்தியது.

ஸ்லோவேனியாவில் ஏற்பட்ட கடுமையான வெள்ளம் பல மில்லியன் டொலர்கள் மதிப்பிலான சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.

வெள்ளம் சூழ்ந்த பகுதிகளுக்குச் சென்று சேதங்களைச் சுத்தம் செய்யும் முயற்சியில் மீட்புக் குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

**கிறீஸ்**



கிறீஸ் நாட்டில் காட்டுத் தீ பரவியதால் அப்பகுதியில் மக்கள் வெளியேற்றப்பட்டனர். காட்டுத்தீயால் அதிக வெப்பநிலை உணரப்பட்டது. அத்துடன் அப்பகுதிய மாசு படுத்தப்பட்டது.

# MORTGAGE

- ⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- ⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- ⇒ Private Mortgage (No Income Verification)
- ⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- ⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- ⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- ⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC



www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

**Cell : 416-624-4843**

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4




RE/MAX HALLMARK FIRST GROUP REALTY | RAISING THE BAR

1154 Kingston Rd
Pickering, ON
L1V 1B4 CA

சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

**உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்**
**சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?**

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# “எமது தலைவிதியை நாமே நிர்ணயிக்கும் உரிமை பெற்றவர்களாக, இறைமை பெற்றவர்களாக இருக்க வேண்டும்”

**–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**



மிகவும் நவீனமாக தொழில்நுட்ப யுகத்தை நோக்கி இன்றைய உலகம் நகர்ந்து கொண்டிருக்கின்றது. அறிவியலும் தொழில்நுட்பமும் அபார வளர்ச்சி கண்டு உலகத்தின் வளர்ச்சிப் போக்கில் புரட்சிகரமான மாற்றத்தை நிகழ்த்தி வருகின்றன. இந்த வளர்ச்சிப் போக்கின் தாக்கத்தால் முன்னேறிய நாடுகளின் சமூக, பொருண்மிய வாழ்வும் பிரமிக்கத்தக்க வகையில் மாற்றங்கண்டு வருகின்றது. இந்தப் புதிய யுகத்தின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் அடித்தளமாக விளங்குவது அறிவியல் தொழில்நுட்பக் கல்வியாகும்.

அறிவுசார் கல்வியின் வளர்ச்சியால் மாறிவரும் உலக சமூகத்துடன் ஒப்பு நோக்குகையில் எமது தேசத்தின் கல்வி நிலை மகிவும் பின்தங்கிய நிலையில் இருக்கின்றது. இதற்குப் பிரதான காரணி சிங்கள இனவாத அரச ஒடுக்குமுறையாகும். இந்த ஒடுக்குமுறை எமது தேசத்தின் ஆற்றலையும் சக்தியையும் முடக்கி வைத்திருக்கின்றது.

எமது தேசிய வாழ்விற்கு ஆதாரமாக விளங்கும் கல்வித்துறையைச் சிதைத்துவிடச் சிங்களப் பேரினவாதம் நீண்ட காலமாகவே முனைந்து வருகின்றது. சிங்கள மொழித்திணிப்பில் தொடங்கி, தரப்படுத்தல் என்றும், வெட்டுப்புள்ளி என்றும், காலத்திற்கு காலம் தமிழரின் கல்வியைச் சீர்குலைப்பதற்குத் திட்டமிட்ட முயற்சிகள் எடுக்கப்பட்டன. இப்பொழுது, இராணுவ நடவடிக்கை என்ற போர்வையில் இந்தக் கல்வியழிப்புக் கொள்கை மிகவும் நுட்பமான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இப்படியான அரச ஒடுக்குமுறையின் நெருக்குதல்தான் காரணமாக எமது கல்வித்துறை என்றுமில்லாதவாறு பெரும் பாதிப்பிற்குள்ளாகியிருக்கிறன்றது.

எதிரியின் பாரிய அழிப்பு வேலைகளுக்கு மத்தியில் எமது விடுதலை இயக்கமானது, தனது சக்திக்குட்பட்டதாக, சில ஆக்க வேலைகளைச் செய்து வருகிறது. பெரிய தொரு போருக்கு முகங்கொடுத்தவாறு, சமூக மேம்பாட்டிற்காக உழைப்பதில் பல இடர்பாடுகள் இருக்கவே செய்யும். விடுதலை வேண்டியப் போராடும் இனங்கள் இந்தப் பிரச்சனையை எதிர்கொள்வது இயல்பு.

எமது தேசம் விடுதலை பெற்று, நிலையான அமைதியும், உறுதியான அரசும் தோன்றும் பொழுதுதான் நாம் எமது சமூகப் பொருண்மிய வாழ்வை உயர்ந்த படிநிலைக்கு கட்டி எழுப்புவது சாத்தியமாகும். அப்பொழுதுதான் கல்வித்துறையையும் சீரானமுறையில் சீரமைத்து, எமது நாட்டின் நலன் பேணும் வகையில் மேம்பாடு செய்ய முடியும். தேசியக் கல்வித் திட்டம் ஒன்றைச் செயற்படுத்த முடியும். அறிவியல், தொழில்நுட்பக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்து எமது நாட்டை முன்னேற்றப்பாதையில் இட்டுச்செல்ல முடியும்.

எமது சமூகத்தின் ஒட்டுமொத்தமான விடிவிற்கும் விமோசனத்திற்கும் தேசிய விடுதலை அத்தியாவசியமானது என்பதை நான் வலியுறுத்தத் தேவையில்லை. கல்வி உட்பட சகல சமூக அமைப்புக்களையும் ஒரு உன்னதமான வளர்ச்சிப் போக்கில் உயர்நிலைக்கு நகர்த்திச் செல்வதாயின் நாம் சுதந்திர மனிதர்களாக, எமது தலைவிதியை நாமே நிர்ணயிக்கும் உரிமை பெற்றவர்களாக, இறைமை பெற்றவர்களாக இருக்க வேண்டும். இதனால்தான் தேசிய விடுதலையை எமது பிரதான இலட்சிமாக வரித்துக்கொண்டு நாம் போராடுகிறோம்.

இன்று நாம் ஒரு போர்ச்சூழலில் வாழ்கிறோம். இந்தப் போர்ச் சூழலில், எமது தேசிய வாழ்விற்கும் வளத்திற்கும் அடித்தளமாக சமூக நிறுவனங்கள் சிதைந்து போகாமல் பாதுகாப்பது எமது முதன்மையான பணியாக இருக்கிறது. இதனைக் கருத்தில் கொண்டு எமது விடுதலை இயக்கம் ஆக்கபூர்வமான செயற்திட்டங்களை நடைமுறப்படுத்தி வருகிறது. குறிப்பாக கல்வித்துறையின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்குமாக நாம் உருப்படியான முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றோம்.

குறிப்பு: 08.04.1994 அன்று தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டி விடுத்த அறிக்கையில் இருந்து.










# INVESTMENT PROPERTY CONDO (KENNEDY & HWY 401)

3 Bed Rooms + Den,
Central A/C + Heater,
Swimming Pool & Sauna
Jym & 2 Car Parking
Garage Indoor, Party Room
Dishwasher, Kitchen,
Washer Dryer,
One & Half Bath Room

**Surrounding Area:**
Kenndy Common, School,
Resort Park, Metro,
Foody World Super Market
LA . Fitness, Park & More!

Please Contact

**647-294-2996**

# அறியப்படாதவர் மீது ஒரு அஞ்சலிப் பாடல்!



என்றும் போலத்தான் அன்றும் விடிந்தது
எந்த மாற்றமுமில்லாது.
வழியில் அகப்பட்டதனைத்தையும் தழுவியபடி
நேற்றைய இரவைக்கீறி காற்று உயிர்ப்புற்றுலவியது.
நம்பிக்கையே நாளாந்தமாகிய வாசல்களில்
மெல்ல மெல்ல வெய்யில் பரவியது.
அவிச்சலில்லாத அந்த ஆனந்தப்பொழுதில்
வன்னியின் துயரத்துள்ளும் ஒரு சும்தெரிந்தது.
பாதங்களில் வேகம்பூட்டாத பரவசத்துடன்
விடுதலை மனிதர்கள் வெளியே வந்தனர்.
எந்தவானொலி என்ன சொல்லிற்றோ தெரியாது
முகிலுரசிய தலைகளில் முகங்கள் பூவனமாயின.
மகிழ்ச்சியல் மாரடைப்பே வந்து விடும் போல
ஆனந்தத்தவிப்பில் பலர் அழுதேவிட்டனர்.
வாய்வந்த வார்த்தைகளும் கூட
தொண்டையில் சிக்குண்டு திணறின
எடுத்தது எடுத்தபடியும் போட்டது போட்டபடியும்
புழுகமேறிய தமிழர் கைக்கிலேறி உலாப்போயினர்.
நெஞ்சுக்குள் சந்தோசம் நிறையும்போது
பூரிப்பின் வேர்களில் யாருக்கும் பூப்பூக்கும்.
பூத்துச் சிலிர்த்துப்போனது எம்பூமி.
காற்றின் திசைகளெல்லாம் கட்டுநாயக்காவே விரிந்தது.
பன்னிரண்டு குண்டுக்குருவிகளின் குடலுருவிப்போனதாம்
எவரோ எய்த அம்பு
வீணான பொல்லாப்பேதும் வியாசனுக்கு வேண்டாமே
எய்தவரை X எனக்கொள்வோம்.
அது யாராகவும் இருந்துவிட்டுப்போகட்டும்.
அம்பெய்த அபிமன்யூக்களைப் பற்றியே
எல்லாவாய்களும் பேசின.
அருச்சுனனின் புதல்வர்களே!
உங்களுக்கெம் நன்றியென உரைத்தது காற்று.
தன் சாபக்கவிதைகள் பலித்ததெனச்
சந்தே ஷித்தான் வியாசன்.
வானத்தாயும் வஞ்சிக்கவில்லை
அன்று பாளம்பிளந்த எம்மண்மீது
சில தூறல்கள் விழுந்தன.
ஓம்; ஓமெனத் தேவருரைத்த வாழ்த்தொலி
எல்லாச்செவிகளிலும் கேட்டது
வெற்றிப்பெருமிதத்தின் வீறாய்ப்பிலிருந்தாள்
கொற்றம்பெருமாட்டி.
உயிரற்ற யந்திரங்கள் மீது இத்தனை கோபமா? என்று
“அரசியற் சாதுரியர்” யாரும் ஆச்சரியப்படலாம்.
எள்ளி நகையாடியும் சிலர் எழுதலாம்.
கட்டுநாயக்காவில் கருகிப்போனவை
வெட்டுக்கத்தியும் சின்னப் புட்டுப்பானையுமல்ல.
எரிந்தது பகைவரின் பலம்.
அழிந்தது அவர்களின் ஆணவம்.
எங்கள் உயிருறிஞ்சிக் குடித்தவை
இந்த ஊத்தைப் பேய்கள் தான்.
நாவலியிலும்; நாகர்கோவிலிலும்
நரபலியெடுத்த ரத்தப்பிசாசுகளிவை.
கிளாலீயிலும்; சுதந்திரபுரத்திலும்
எம் உறவுகளைத் தீயிட்டு எரிமாடன்கள் இவைதான்.
மந்துவிலிலும்; மாத்தளனிலும்.
சின்னப்பிஞ்சுகளின் உயிர்தின்ற வன்மவல்லூறுகளிவை.
இந்தமகிழ்ச்சி இருக்காதா எங்களுக்கு?
குண்டுகொட்டிய போது கீழே நின்றவருக்கு
கொடுத்த தண்டனையறிந்து கொள்ளை மகிழ்ச்சி
குருதியும் சதையுமாகக் கூட்டியள்ளியவருக்குத்தான்
இந்த அழிப்பின் பெறுமதி புரியும்.
பிஞ்சைப் பறிகொடுத்த பெருதுயரில்
நெஞ்சிலும் தலையிலுமடித்த ஓலமிட்டாளே ஒரு தாய்
அவளைக்கேளுங்கள்.
கட்டுநாயக்காவுக்கு அவளின் கருவறை பதில்சொல்லும்.
குண்டுபிறந்த தாயின் மார்பருகே கிடந்து
பச்சைப்புல்லொன்று பாலுக்கழுததே
அந்தச் சந்திரவதனத்துத் தளிரைக் கேளுங்கள்
முற்றாக எரியவில்லையா கட்டுநாயக்கா?
என்று மூச்செறியும்.
ஊரிழந்த துயரில் உருகியபடி
கிளாலிக்கரையில் வந்த கிடந்தோமே
விட்டானா பாவி
விரட்டி விரட்டி உயிர்ப்பூக்களைக் கிள்ளியெறிந்துவிட்டு
கட்டுநாயக்காவிற்தானே களைப்பாறினான்!
நெருப்பிட்டது யாரெனத் தெரியாதெனினும்
தகும் செயலாற்றியவர்களுக்கு எம் தலைசாய்த்தோம்.
“செட்டிக்குத்தானே தெரியும் வட்டியும் முதலும்”
இந்திரபுரியை விற்றுத்தான் இவை இறக்குமதியாயின.
இந்த வல்லூறுகள் வெறும் யந்திரங்களல்ல
எதிரி தவம்செய்து பெற்ற வரங்களிவை.
எங்களைக் கொல்லவென வாங்கி நாகாஸ்த்திரங்கள்.
உட்புக முடியாதெனும் நம்பிக்கையில்
வித்தகர் வகுத்த பத்மவியூகம் பிளந்து
உள்ளே புகுந்தவர் யாரெனத் தெரியாதெனினும்
அவர்கள் சென்ற திசைநோக்கிச் சிரம் சாய்த்தோம்.
விமானத்தளத்தின் அருகுள்ள விளையாட்டுத்திடலில்
பழிதீர்க்கப் போனவரின் பாதணிகள் கிடந்தனவாம்
செருப்புகளை எடுத்துவாருங்கள் சிம்மாசனத்தில்
வைப்போம்.
சென்றவர்கள் உண்டெறிந்த மீதவுணவிருந்ததாம்
எடுத்து வாருங்கள் ஒரு பருக்கையுண்டாலே போதும்
எமக்கும் பலம் பெருகும்.
வண்டிலில் வந்தார்கள், வாய்க்காலால் வந்தார்கள்
கடலில் வந்தார்கள்
காற்றாகிக் குதித்தார்களென்று கூறுகின்றீர்களே
வெற்றுப்பீரங்கிகளே உங்களுக்கு வெட்கமே கிடையாதா
கண்ணி வயல் கடந்து;
காவல் அரண் கடந்து; மின்சாரவேலி மீதேறி
வந்தர்களென்று கூறும்போதீல்
பெருமையில் நாங்கள் புல்லரித்துப் போகிறோம்.
சிரசேறும் செருக்கில் திணறுகிறோம்.
புத்தபெருமானே!
சத்தியமாய் எங்களுக்குத் தெரியாது.
வந்தவர்கள் தமிழரென்பதால் வாழ்த்துகிறோம்.
அவர்கள் கொன்றவையெல்லாம்
முன்னரெம்மைக் கொன்றவையென்பதால்
நாலுவரியெழுதீ அவர்களுக்கு நன்றி சொல்கிறோம்.
கழிவு நீர் வாய்க்காலுக்குள்ளாலே நடந்தார்களாம்
வாய்க்காலே! உமக்கெமது நன்றி!
தென்னை மரத் தோப்புக்குள்ளே திரிந்தார்களாம்
தென்னை மரங்களே! உங்களுக்கெம் நன்றி
மின்சாரவெட்டுக்கு உத்தரவிட்ட ரத்வத்தையாரே!
நன்றிக்குரியவர் நீருமானீர்.
கட்டுநாயக்காவின் தலையில் குட்டியவரே
நீங்கள் யார்பெற்ற பிள்ளைகளோ நாமறியோம்.
உங்கள் பெயரும் அறியோம்
உங்கள் ஊரம் தெரியோம்
ஆயினுமுமக்கு ஆயிரம் தீபங்களேற்றினோம்.
நாயினும் கீழாய் நலிவுற்ற தமிழினத்தை
உலகத்தின் உதடுகளால் உச்சரிக்க வைத்தவரே!
எழுதும் எந்தவரியும் உங்களிடம் தோற்கும்.
நீங்களெழுதிய வரிகள் மட்டுமே நிலைக்கும்
பிரிந்தோம்
மீண்டும் சந்திப்போம்.

உலலைக்களம் - வியாசன் 2021






# 24.07.2001
# கட்டுநாயக்கா விமானப் படைத்தளக் கரும்புலித் தாக்குதல்!

கட்டுநாயக்கா விமானப் படைத்தளத் தாக்குதல் யூலை 24, 2001 அன்று விடுதலைப்புலிகளின் 14 கரும்புலி மறவர்களால் நடத்தப்பட்ட இலங்கையின் வரலாற்றில் மிக முக்கியமான தாக்குதல் ஆகும்.

கட்டுநாயக்கா விமானப் படைத்தளத்திற்கு அருகிலேயே பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் அமைந்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

தாக்குதல் நடத்தப்படுவதற்கு ஒரு நாள் முன்னர் சிங்கள இசையைக் கேட்டுக் கொண்டிருந்த விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் விமான நிலையத்தின் அருகிலிருந்த பூங்காவில் இருந்தனர் என்றும் அவர்கள் மீது ஏற்பட்ட சந்தேகத்தினால் விமான நிலையத்திற்கு அருகில் வசித்தவர்கள் விமான நிலைய அதிகாரிகளுக்குத் தகவல்கள் அளித்தும் துரிதமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. பின்னர் அங்கு அதிகாரிகள் வந்து பார்க்கும் பொழுது பூங்காவில் எவரும் இருக்கவில்லை என்பதும் குறிப்பிடதக்கது.

## தாக்குதலின் பின்னணி

இத்தாக்குதலினை வடிவமைத்தவர்கள் தமிழீழ தேசியத் தலைவர வேலுப்பிள்ளை பிரபாகரன் மற்றும் பொட்டு அம்மான் ஆகியோர்.

கட்டுநாயக்க விமானப் படைத்தளம் மீதான கரும்புலித் தாக்குதலை தலைமையேற்று நடத்தியவர் விடுதலைப் புலிகளின் திட்டமிடல் தளபதி கேணல் சாள்ஸ் அவர்கள்.







2001 யூலை 23 திங்கட்கிழமை மாலை 8.30, 14 கரும்புலிகள் உறுப்பினர்கள் ராஜா பெர்னாண்டோ விளையாட்டு மைதானத்தில் கூடினர்.

2001 யூலை 23 திங்கட்கிழமை மாலை 9:45 மணியிலிருந்து 11:15 அப்பகுதியில் மின்சார சேவை தடைப்பட்டது.

2001 யூலை 24 செவ்வாய்க்கிழமை அதிகாலை 3:30 மணியளவில் தாக்குதல் தொடங்கப்பட்டது.

2001 யூலை 24 செவ்வாய்க்கிழமை படைத்தளத்தில் இருந்த 21 படை விமானங்கள் மற்றும் பயணிகள் விமானங்கள் அழிக்கப்பட்டன.

2001 யூலை 24 செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிவரை தாக்குதல் நீடிக்கப்பட்டது.

தாக்குதலினால் ஏற்படுத்தப்பட்ட இழப்புகள் இலங்கை அரசின் கூற்றுப்படி அழிக்கப்பட்ட விமானங்கள் 14 என்று கூறப்பட்டது.

விடுதலைப்புலிகளின் அதிகாரப் பூர்வப் பத்திரிக்கையான ஈழநாதத்தின் கூற்றுப்படி அழிக்கப்பட்ட விமானங்கள் எண்ணிக்கை 28 ஆக வெளியிடப்பட்டது.

## ஈழநாதத்தின் வெளியீடு [2001 நாளிதழ்]

முற்றிலுமாக அழிக்கப்பட்டவை

இரண்டு எ (A) – 340 – 300 பயணிகள் விமானங்கள்

ஒரு எ (A) – 330 -200 பயணிகள் விமானம்
நான்கு கிபிர் போர் விமானங்கள்
மூன்று கெ (K)-8 பயிற்சி விமானங்கள்

இரண்டு எம்.ஜ.ஜி (MIG) – 27 ஜெட் போர் விமானங்கள்
இரண்டு பெல் (Bell) 412 உலங்கு வானூர்தி
இரண்டு வி.வி.ஜ.பி (VVIP) 412 உலங்கு வானூர்தி
இரண்டு எம்.ஜ (MI) -17 உலங்கு வானூர்தி
மூன்று K-8

சேதப்படுத்தப்பட்டவை

இரண்டு – A-320 பயணிகள் விமானங்கள்

ஒரு – A-340 பயணிகள் விமானம்
ஒரு அண்டொனோவ் (Antonov) போக்குவரத்து விமானம்
ஒரு எம்.ஜ (MI) -24 உலங்கு வானூர்தி
ஒரு பெல் (Bell) 412 உலங்கு வானூர்தி
நான்கு கிபிர் போர் விமானங்கள்

விடுதலைப்புலிகளால் நடத்தப்பட்ட இத்தாக்குதலானது இலங்கையின் பொருளாதாரத்தில் வரலாறு காணாத மாற்றத்தை ஏற்படுத்தியது.

இத்தாக்குதலின் மூலம் சுமார் 375 மில்லியன் அமெரிக்க டாலர்களிற்கும் அதிகமான சொத்துக்கள் அழிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இத்தாக்குதலில் சில மறைமுகக் கரும்புலிகள் வெற்றிக்கு வித்திட்டு காற்றில் கலந்தனர்.

எம் மக்கள் மீது குண்டு வீசிய குண்டுப் பறவைகள் அவற்றின் இருப்பிடம் தேடிச்சென்று தீயில் கருக்கி தாய்மண்ணின் விடியலுக்காய் உறங்கும் தேசப்புயல்கள்.





தேசப்புயல்களுக்கு எம் சீரம் தாழ்ந்த வீரவணக்கம்.

இவ் காணொளியில் கட்டுநாயக்க சண்டைக்களமும் தமிழ் மக்கள் மீதான குண்டுவீச்சு அவலங்களும் பதிவு செய்யப் பட்டுள்ளன.

தமிழீழ விடுதலை புலிகளின் பயணத்தில், வெற்றி மகுடம் சூட்டிய நாள். ஆம். கட்டுநாயகா வான்படை தளத்தை தகர்த்த நாள்!

1983 ஆம் ஆண்டு யூலை மாதம், தமிழர்களின் வாழ்வில் மறக்க முடியாத,இன்னல்கள், கொடிய துயரங்கள் நிறைந்த மாதம்.



கொடுங்கோலன் சிங்களவனால்,ஒரு மிகப்பெரிய யுத்தத்தை, தமிழர்களின் வாழ்வில் திணித்த நாள்.

ஆயிரக்கணக்கான தமிழர்களை, சிங்களன் கொன்றொழித்த நாள். இலட்சத்துக்கும் அதிகமான தமிழர்கள், வீடுகளற்ற அகதிகளாக நடுத்தெருவில் நின்ற நாள். பல்லாயிரகணக்கான தமிழர்களின் வீடுகளையும், உடமைகளையும், அவர்களின் வியாபார நிலையங்களையும் அடித்து நொறுக்கிய நாள்.

தமிழர்களுக்கு பெருமளவில் பொருட்சேதமும், உயிர் சேதமும் நிகழ்ந்த இந்த மாதத்தை தான், கறுப்பு யூலை என்று நினைவு படுத்தி, புலம் பெயர் மக்கள் வாழும், அனைத்து தேசங்களிலும் ஆண்டு தோறும் அஞ்சலி செலுத்துவது வழக்கம்.



புலம் பெயர் தமிழன் ஒவ்வொருவனும், யூலை மாதத்தின் கடைசி நாட்களை தன் வாழ்நாளில் மறக்க இயலாத அளவுக்கு கொடுமையான சம்பவங்கள் நிகழ்ந்த காலம் இது.

இனி சிங்களனோடு பேசுவதில் எந்த பிரயோஜனமும் கிடையாது. சிங்களனுக்கு புரிந்த மொழி, திருப்பி அடிப்பது தான். பொருளாதாரத்தில் அவனை சிதைப்பது தான் என்று முடிவு கட்டிய,தமிழீழ விடுதலைப் புலிகள், கறுப்பு யூலைக்கு பதிலடியாக, ஒரு மாபெரும் யுத்தத்தை, இழப்பை சிங்களனுக்கு தரவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு இருந்தார்கள்.

ஆம் அந்த தாக்குதலுக்காக 2001 ஆண்டு யூலை 24 ஆம் நாள் என்று, தேதி குறிக்கப்பட்டது. கட்டுநாயகா வான்படை தளத்தை தகர்ப்பது என்று முடிவெடுத்தார்கள் விடுதலைப்புலிகள்.

வடக்கிலும் கிழக்கிலும் வாழ்ந்த விடுதலைப்புலிகள், எதிரியை அவன் கோட்டைக்குள்ளேயே புகுந்து தாக்கி, தங்கள் வீரத்தை நிலைநாட்ட வேண்டும் என்று முடிவெடுத்து, இலங்கையின் இதயமான கொழும்புக்கு உள்ளேயே ஊடுருவினார்கள்.

பதினான்கு கரும்புலிகள் யூலை மாதம் 24 ஆம் தேதி அதிகாலை மூன்றரை மணிக்கு, கட்டுநாயகா வான்படை தளத்துக்குள் நுழைந்தார்கள்.

இருபத்தாறு விமானங்களை தகர்த்தார்கள். அதில் பண்டார நாயகா விமான நிலையத்தில் நின்ற, நான்கு பயணிகள் இல்லாத விமானம் உட்பட. அதிகாலை மூன்றரை மணிக்கு ஆரம்பித்த யுத்தம்,காலை எட்டரை மணிக்கு முடிவுக்கு வந்தது.



வெறும் ஐந்து மணி நேரத்தில், எதிரியின் இருபத்தாறு போர் விமானங்களை தகர்த்த எம் கரும்புலிகள், வீரச்சாவை தழுவினார்கள். இந்த யுத்தத்தை திட்டமிட்டு, முன்னின்று நடத்தியவன் மாவீரன் தளபதி சார்லஸ்.

இந்த தாக்குதலால் சிங்களனுக்கு ஏற்பட்ட இழப்போ முன்னூற்று ஐம்பது மில்லியன் அமெரிக்க டாலர்கள். அது மட்டுமா, பாதுகாப்பில்லை என்று கருதி, சிங்களனின் சுற்றுலா வணிகம் அடியோடு சிதைந்து போனது. விமான நிலையம் மூடப்பட்டது. கடும் பொருளாதார வீழ்ச்சியை சிங்களவன் சந்தித்தான்.

துன்பத்தை தந்தவனுக்கே, அந்த துன்பத்தை திருப்பி கொடுத்தார்கள் எம் மாவீர கண்மணிகள்.

கொழும்பு விமான படை தளத்தில் புகுந்து இருபத்தாறு விமானங்களை தாக்க தெரிந்த விடுதலை புலிகளுக்கு, சிங்களனில் ஒரு ஆயிரம் பேரை கொல்வது என்பது கடினமான விடயமா?

சாவை துச்சமென மதித்து தான், கரும் புலிகளாக களத்தில் நிற்கிறார்கள். அப்படி துணிந்த பிறகு சிங்களனில் ஒரு ஆயிரம் பேரை கொன்றிருக்க முடியாதா?

ஏன் செய்யவில்லை? காரணம் தலைமை அப்படி. நம் எதிரி சிங்கள அரசும், இராணுவமும் தானே ஒழிய, சாதாரண சிங்கள மக்கள் அல்ல. அவர்கள் நம் இலக்கு அல்ல என்று பல முறை அழுத்தம் திருத்தமாக பதிவு செய்தவன் எங்கள் தலைவன் பிரபகாரன்.

அந்த அளவுக்கு கட்டுப்பாடுகளோடு, படை நடத்தியன் எங்கள் தலைவன் பிரபாகரன். முப்பதாண்டு கால ஆயுத போரில், விடுதலைப்புலிகள்

ஒரு சிங்களத்தியை, கையைப் பிடித்து இழுத்தார்கள், பாலியல் ரீதியாக துன்புறுத்தினார்கள் என்று எவனாவது குற்றம் சொல்ல முடியுமா?

ஏன் என் எதிரி சிங்களன் அப்படி ஒரு குற்றசாட்டை சொல்ல முடியுமா? முடியாது. காரணம் அந்த அளவுக்கு ஒழுக்கமான தலைமை, தலைவனின் வழியில் கட்டுகோப்பான போராளிகள்.

எங்கள் போராட்டங்களில் வேண்டுமானால், பின்னடைவு ஏற்பட்டு இருக்கலாம். ஆனால் எங்கள் போராட்ட வழியில் நேர்மையும், நியாயமும் இருந்தது. எதிரியை தாக்குவதில் கூட ஒரு கட்டுப்பாடு இருந்தது.

உலக விடுதலை போராட்ட வீரர்களில், விடுதலைப் புலிகளை போல வீரம் செறிந்த போராளிகளும் இல்லை. பிரபாகரனை போன்ற மாவீரன் எவனும் இல்லை என்று மார் தட்டி சொல்வோம்.

கட்டுநாயக்கா வான்படை தாக்குதலில், வீரச்சாவை தழுவிய எம் கரும்புலி வீர மறவர்களுக்கும், கறுப்பு யூலையில், சிங்களவனால் கொடூரமாக கொன்றொழிக்கப்பட்ட,எம் உடன் பிறப்புகள் அத்தனை பேருக்கும் எங்கள் வீர வணக்கம்!








# சிங்களத்தின் குகைக்குள் வீரப்புலிகள்







*எங்கள் ஊர் எரித்து*
*உயிர்பறித்த சிங்களத்து*
*வான் அரக்கர் உயிர்*
*பிளந்து கிடப்பது பாரீர்!*









# கட்டுநாயக்கா விமானத்தளம் தாக்குதலுக்கு உள்ளான அன்று (24.07.2001) விடுதலைப் புலிகளின் குரல் வானொலி வழங்கிய செய்தி!

சிறீலங்கா அரசினதும் முப்படைகளினதும் இதயம் போன்ற சிறீலங்கா வான்படையின் பிரதான மையத்தளத்தினுள் இன்று அதிகாலை முதல் முற்பகல் வரை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட துணிகர ஊடுருவல் தாக்குதலில் சிறீலங்கா வான்படையின் 8 வான் ஊர்திகளும் 3 போக்கு வரத்து வான் ஊர்திகளும் முற்றாகதகர்க்கப்பட்டுள்ளன 3 போக்குவரத்து வான்ஊர்திகள் கடுமையான சேதம் அடைந்துள்ளன. செய்தி ஊடகங்கள் தரும் தரவுகளின்படி விடுதலை புலிகளின் அணி ஒன்று ஊடுருவல் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டு உச்ச பாதுகாப்புகளை கொண்ட கட்டுநாயக்க விமானப்படைதளத்தில் நுழைத்து அங்கு இன்று அதி காலை 3:25 மணி அளவில் தாக்குதலை தீவிரமாக ஆரம்பித்தனர். விமானப்படையின் அதியுயர் தாக்குதல் வலு கொண்ட வான்ஊர்திகளின் தரிப்பிடத் தின் மீது முதலில் தாக்குதலை விடுதலைப் புலிகள் நடத்தினர். இன்று காலை 7:30க்குள் தரிப்பிடத்தில் நின்ற 8 வான்ஊர் திகள் தாக்கப் பட்டு எரியூட்டப்பட்டன. இதில் 8 வான் ஊர்திகளும் தகர்ந்து போயின. அதனுடன் எரிபொருள் தாங்கியும் எரியூட்டப் பட்டன. மிக் - 27 ரக மிகையொலி வேகத் தாக்குதல் விமானம் ஒன்று, கிபீர் மிகையொலி வேகத்தாக்குதல் விமானங்கள் இரண்டு, எம்.ஐ - 24 ரக தாக்குதல் வான்ஊர்தி ஒன்று, எம்.ஐ - 17 ரக படைக்காவி வான்ஊர்தி ஒன்று, எ 8 பயிற்சி விமானங்கள் மூன்று என்பன அழிக்கப்பட்டவையாகும்.



நாற்பது ஏக்கர் பரப்பளவில் சுற்றிவர கம்பி வேலிகள் அமைக் கப்பட்டு பல பாதுகாப்புவலையங்களைக் கொண்ட கட்டுநாயக்க விமானப்படைதளத்தினுள் காலை 5:30 மணி தாண்டிய பின்னரும் விடுதலைப் புலிகளின் அணியினர் தாக்குதலை தொடர்ந்தனர் என செய்தி ஊடகங்கள் தெரிவிக்கின்றன. காலை 8:30 மணி அளவில் எரிபொருள் தாங்கி ஒன்றின் அருகே தாக்குதல் நடத்தியவர்களில் ஒருவர் நின்று கொண்டிருந்த தாகவும் அவரை நோக்கி சிறீலங்கா படையினர் முன்னேறிய போது எரிபொருள் தாங்கியை அவர் தகர்த்ததாகவும் அக் காட்சியை நேரில்கண்ட ஒருவர் தெரிவித்துள்ளார்.

விமானபடைத்தளத்தினுள் வான் மிகையொலி தாக்குதல் விமானங்களையும் எரிபொருள் தாங்கியையும் தகர்த்த அணி யினர் ஓடுபாதையில் நின்றிருந்த சிறீலங்கன் ஏயர் லைன் விமான நிறுவனத்துக்குச் சொந்தமான ஆறு ஏயர் பஸ் வகை இத்தாலிய போக்குவரத்து விமானங்களையும் தாக்கியுள்ளனர். இத்தாக்குதல்களில் மூன்று விமானங்கள் எரிந்து முற்றாக அழித்துள்ளன. மூன்று விமானங்கள் எரிந்து கடுமையாக சேதம் அடைந்துள்ளன. இந்த ஏயர்பஸ் ஒவ்வொன்றும் 100 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதி யானவையாகும். விமான படைத்தளத்தினுள் விடுதலைப் புலிகளின் அணியினர் முற்பகல் வரை தாக்குதலை தொடர்ந்ததாகவும் கடைசியாக அவர்களில் ஒன்பதுபேரின் உடல்களை படையினர் கைப்பற்றிய தாகவும் ஏனையோர் தப்பிவிட்டதாகவும் அவர்களை கண்டால் தமக்குக் காட்டித்தரும்மாறும் சிறீலங்கா அரசு ஊடகங்களுக் கூடாக அடிக்கடி கோரிக்கையை விடுத்தபடியுள்ளது.

இத்தாக்குதலில் துணிகரமாக பல மணி நேரம் சிறீலங்கா




அரசின் பிரதான உச்ச பாதுகாப்புக் கோட்டையினுள் நடத்தப் பட்டுள்ளது.

கறுப்பு யூலை நாட்களையொட்டி அதியுட்ச பாதுகாப்பு நட வடிக்கைகள் கொழும்பில் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலைமை யில் இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது. சிறீலங்காவின் பாதுகாப்பு ஏற்பாடுகளை இது கேள்விக் குறியாக்கியுள்ளது. பெரும் நெருக்கடிகளை சந்திரிக்கா அரசு சந்தித்துக்கொண் டிருக்கும் நிலையில் இத்தாக்குதல் நடத்தப் பட்டிருக்கின்றது.

இந்த தாக்குதல் சிறீலங்காவின் தலைநகர் கொழும்பின் பாதுகாப்பு கேள்விக்குறியாக்கியுள்ளதுடன் அதற்குபொருளாதார அடியையும் கொடுத்துள்ளது என செய்தி ஊடகங்கள் தெரிவிக் கின்றன. அழிக்கப்பட்ட 3 ஏயர் பஸ் விமானங்களும் பல 100 மில்லியன் டொலர் பெறுமதியாகும். இந்த மூன்று ஏயர்பஸ் விமானங்களின் இழப்பால் சிறீலங்கா அரசிற்கு 3000 கோடி ரூபாவிற்குமேல் இழப்பு ஏற்பட்டுள்ளது. சேதமான ஏயர்பஸ் விமானத்தின் இழப்பு தொகை இதில் இணைக்கப்படவில்லை. சிறீலங்கா வான் படை வான்ஊர்திகளின் இழப்பு பெறுமதியின் தொகை 18 மில்லியன் அமெரிக்க டொலர் என படை வட் டாரங்கள் தெரிவிக்கின்றன. மிக குறுகிய நேரத்தில் சிறீலங்கா வான் படை சந்தித்த மிகப் பெரும்இழப்பு இதுவாகும். அத்துடன் குறுகிய நேரத்தில் சிறீலங்கா அரசு பல ஆயிரம்கோடி ரூபாக்களை இழந்துள்ளதும் இந்த தாக்குதலில் ஆகும். இது சிறீலங்கா அரசின் பொருளாதாரத்தை மிகமோசமாக பாதிக்கும் ஒன்றாகும். இதேவேளையில் சிறீலங்கா அரசின் பாதுகாப்பு நம்பிக்கைகள், உத்தரவாதங்களை இத் தாக் குதல் தகர்த் துள்ளது.

சீரழிவுக்குட்பட்ட கட்டுநாயக்க விமானப்படைதளத்தின் ஒரு பகுதிமட்டும் செய்தியாளர்கள் பார்வையிட சிறீலங்கா அரசு அனுமதித்துள்ளது. செய்மதி ஊடாக தொடர்பு ஊடகங்கள்



காண்பித்த விமானத்தள காட்சிப்படங்களும், கட்டுநாயக்கா விமானத்தளமும் சீரழிவுக்காட்சிகளாக உள்ளன. எரிந்தும் புகைமண்டலங்களாகவும் விமானப்படைத் தளம் காணப் படுகின்றது. விமானங்கள் எரிவதும், உடைந்து கிடப்பதுமாக விமான ஓடுதளம் காட்சியளிக்கின்றது. தீயணைப்புப் படை யினர் தீயை அணைக்கும் நடவடிக்கையை தொடர்ந்தபோதும் அங்குபெரும் கரும்புகையே பெரும்மளவில் காணப்படு கின்றது. சிறீலங்கா விமான படைத்தளம் மீதான தாக்குதல் தொடர்பாக கருத்து தெரிவித்த சிறீலங்காவின் இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ், விடுதலைப்புலிகள் அணி எவ் வாறு எந்த வழியால் விமானப்படைத்தளத்திலும் நுழைந்தது என்பது படையினரால் இதுவரை கண்டுபிடிக்கமுடியவில்லை எனவும் அவர்களில் எத்தனை பேர் இருந்தார்கள் என்பது தெரியாது எனவும் தெரிவத்துள்ளார். இத்தாக்குதல் சிறீலங்கா வின் உயர் பாதுகாப்பை கேள்விக்குறியாக்கி உள்ளதாகவும் அத்தாஸ் தெரிவித்துள்ளார். சிறீலங்காவின் வான்படை விமானங்கள் நடத்திவந்த அட்டுழீயங்களால் பாதிப்புற்ற தமிழ் மக்கள் விடு விக்கப்பட்ட தாயகப்பகுதிகளில் எங்கும் வான்படை விமானங்கள் அழிக்கப்பட்டதை இனிப்பு பொருட்களை பரிமாறி தமது மகிழ்ச்சியை பகிர்ந்துகொண்டனர். குறிப்பாக வன்னிப் பகுதி எங்கும் மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்த வண்ணம் உள்ளனர். இனிப்பு பொருட்கள் பரிமாறுவதை எங்கும் பார்க் கும் வண்ணமாக உள்ளது. சிறீலங்காவின் வான்ஊர்திகள் தமிழ் மக்கள் மீது புரிந்துள்ள அட்டுழீயங்கள் நினைவூட்டத்தக்க தாகும். நவாலித் தேவலயத்தில் சில நிமிடநேரத்தில் 122 அப் பாவிமக்களை பலி கொண்டமை, நாகர்கோவில் பாடசாலையில் 30க்கும் அதிகமான மாணவர்களை பலி கொண்டமை, யாகப்பர் ஆலயத்தில் 10க்கும் அதிகமான அப்பாவிமக்களை பலி கொண்டமை, வவுனிக்குள தேவாலய படுகொலை, அரியாலை நாவலடி கிராமப்படுகொலை, சாவகச்சேரி நகரம் மற்றும் சங்கத்தானை படுகொலை, மந்துவில் படுகொலை, நாச்சிகுடாப் படுகொலை, சுதந்திரபுரம் படுகொலை உட்பட பல ஆயிரம் தமிழ் மக்களை சிறீலங்கா வான்படை வான்ஊர்திகள் குண்டுகளை வீசி கொன்று ஒழித்தது குறிப்பிடத்தக்கது.

கட்டுநாயக்காவிமானப்படைத்தளத்தின் மீதான இன்றைய தாக்குதலில் அழிக்கப்பட்ட மிக்ரக மிகையொலி விமானம் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் சிறீலங்கா வான்படையால் உக்கிரனில் இருந்து கொள்வளவு செய்யப்பட்டதாகும்.



சிறீலங்கா வான் படையிடம் உள்ள உயர் வழு முதன்மை தாக்குதல் வான்ஊர்தியாக மிக் - 27 விழங்குகின்றது. பரசூட் மூலம் இந்த விமானம் வீசும் குண்டுகள் அதிகளவு இலக்குத் தவறாதவை என உத்தரவாதம் பெற்றவை ஆகும். தற்போது சிறீலங்கா படைபலத்தின் பின்பலமாக மிக் - 27 விமானங்கள் விழங்குகின்றன. முல்லைத்தீவு கரையோரத்தில் இவ் விமானம் தனது ஒத்திகை தாக்குதலை கடந்த ஆண்டு ஆகஸ் டில் நடத்தியது. தனி ஒருநபரின் இருக்கை கொண்டதாகவும், இது ஒலியின் 2.1 மடங்கு வேகம் உடையதாகவும், 23மி.மீ பீரங்கி ஏவுகனை செலுத்துகை வசதிகள் கொண்டதாகவும் வேவுபார்க்கும் படம்பிடிக்கும் வசதி கொண்டதாகவும் மிக் - 27 விமானம் உள்ளது.



வான்படையின் கிபீர் விமானங்கள் 1992ஆம் ஆண்டில், சிறீலங்கா வான்படையால் இஸ்ரேலிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டன. இதில் ஒன்று 2004ஆம் ஆண்டு நீர்கொழும்புக் கடலில் விழுந்து அழிந்தது. 2000ம், 2001ம் ஆண்டுகளில் கிபீர் ஏழுவகை விமானங்களை சிறீலங்கா விமானப்படை கொள்வனவு செய்தது. சிறீலங்கா வான் படையில் மிக் - 27க்கு அடுத்தபடியான நிலையில் கிபீர் விமானங்கள் உள்ளன. கிபீர் விமானங்கள் ஒலியின் 1.3 மடங்கு வேகமானவை. வான் படையில் எம்.ஐ 17 வானூர்திகள் அதன் உயர்வலுப் போரியல் போக்குவரத்து வானூர்தியாகும்.

1993ம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட ரஸ்சியத் தயாரிப் பான எம்.ஐ - 17 வானூர்திகள் சிறீலங்காப் படைகளுக்கு இரா ணுவத்தினரைக் காவவும் போர் முனைச் செயல்பாடுகளுக்கும் பிரதான ஆதாரபலமாக உள்ளன.

அழிக்கப்பட்ட மூன்று எ- 8 பயிற்சி விமானங்கள் அண்மையில் சிறீலங்கா வான்படையால் சீனாவிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டவையாகும்.

-களத்தில் 26.07.2001

# 36 ஆண்டுகளாக



பார்த்திபன்

இப்போதும்

பசியோடுதான் இருக்கிறான்


## MORTGAGE FINANCIAL

Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties

புதிய, முதல் தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge, Private மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற் உள்ளவர்களுக்கான
மோட்கேஜ், குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்

SUBRA MORTGAGE SOLUTIONS

**Residential Mortgages**

1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits

**Commercial Mortgages**

1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits



NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com



Powered by MORTGAGE ALLIANCE

WE DEAL WITH ALL BANKS Brokerage # 10330

TD Canada Trust | Scotiabank | First National Financial LP | radius financial
RFA | Equitable Bank | Home Trust | RMG | MCAP

Off: 416-660-5656 / Fax: 647-351-3099 / 1585 Markham Rd, Unit 406, Toronto ON M1B 2W1




# தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

# 1977ஆம் ஆண்டு இனப்படுகொலை ஆகஸ்ட் 12-22

1977ஆம் ஆண்டு யூலை மாதம் இருபத்தோராம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலின் விளைவாக ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் பதவிக்கு வந்தது. அந்தப் பொதுத் தேர்தலில் இலங்கையில் மொத்தம் 168 தொகுதிகளில் நூற்றுநாற்பது தொகுதிகளை ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் கைப்பற்றியது. இது 5/6 பங்கு. இந்த பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி இருபத்துநான்கு தொகுதிகளில் போட்டியிட்டு பதினெட்டு ஆசனங்களைக் கைப்பற்றியது. சிறீலங்கா சுதந்திரக் கட்சி எட்டு ஆசனங்களைக் கைப்பற்றிப் படுதோல்வி அடைந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணி தாம் பதவிக்கு வந்தால், தமிழீழ தேசிய மன்றத்தைக் கூட்டுவதாகவும், தமிழீழத்தைப் பெறுவதற்கான சகல நடவடிக்கையில் ஈடுபடுவதாகவும் கூறியிருந்தார்கள். தமிழ் மக்களும் அதனை ஏற்றுக்கொண்டு தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஆணை பிறப்பித்தார்கள். இது சிங்கள ஆட்சியாளர்களிற்குப் பேரிடியாக அமைந்தது. அவர்கள் இனக்கொலையொன்றைத் தூண்டுவதற்கான வாய்ப்பொன்றை எதிர்பார்த்திருந்தனர். அவ்வாறான சந்தர்ப்பம் ஒன்று 1977ஆம் ஆண்டு காலகட்டத்தில் அவர்களுக்குக் கிடைத்தது.

இக் காலகட்டத்தில் யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரியில் கண்காட்சி ஒன்று நடைபெற்றது. இக் கண்காட்சிக்கு சிவில் உடையில் வந்த யாழ்ப்பாணம் காவற்றுறை நிலையத்தைச் சேர்ந்த சிறீலங்காக் காவற்றுறையினர் அங்கு வந்திருந்த பெண்களோடு பாலியற் சேட்டைகளில் ஈடுபட்டார்கள். இதனால் ஆத்திரமடைந்த யாழ்ப்பாணப் பொதுமக்களுக்கும் காவற்றுறையினருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டு அது கைகலப்பில் முடிந்தது. பொதுமக்களது எதிர்ப்புக்கு அஞ்சி சிவில் உடையில் நின்ற காவற்றுறையினர் ஓடித் தப்பினார்கள்.

யாழ்ப்பாணம் காவற்றுறை நிலையத்திற்குச் சென்ற அவர்கள் ஆயுதபாணிகளாகப் பல நூற்றுக்கணக்கான காவற்றுறையினரை இறக்குகளிலும், ஜீப் வண்டியிலும் ஏற்றிக் கொண்டு மீண்டும் பொருட்காட்சி நடைபெற்ற இடத்திற்கு வந்து குழப்பத்தில் ஈடுபடலானார்கள். பதிலுக்கு யாழ்ப்பாணப் பொதுமக்களும் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடலானார்கள். யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியிலுள்ள மதுபானக் கடையை காவற்றுறையினர் உடைத்துவிட்டு மது போதையில் ஆடிப் பாடினார்கள். யாழ்ப்பாண நகருக்குத் தீமூட்டி எரித்தார்கள். இதனால் இச்சம்பவம் ஏற்பட்டது.

இக்காலகட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் சிங்கள மாணவர்களும் கல்வி கற்றுக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்பதற்காக யாழ் பல்கலைக்கழக நிஉவாகம் அவர்களை தென்னிலங்கைக்கு அனுப்பிவைத்தது. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி வந்த இரவுத் தொடருந்து அனுராதபுரம் தொடருந்து நிலையத்தில் தரித்து நின்றபோது, அதில் பயணம் செய்த சிங்கள மாணவர்கள், பௌத்த பிக்கு மாணவன் ஒருவனை இருக்கையில் படுக்கவைத்து வெள்ளைத் துணியால் மூடிவிட்டு அதன் மீது சிவப்பு மையை ஊற்றி தமிழர்கள் புத்த பிக்குவைக் கொன்று விட்டார்கள் என்றும் யாழ்ப்பாணத்தில் நயினாதீவுப் புத்த விகாரையை உடைத்து விட்டார்கள் என்றும் சத்தமிட்டு முழக்கமெழுப்பினர். இதனால் அந்த் தொடருந்தில் பயணம் செய்த தமிழ் மக்கள் தாக்கப்பட்டார்கள்.

இதேவேளையில் கொழும்பிலிருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் வந்த இரவுத் தபால் தொடருந்து அனுராதபுரம் தொடருந்து நிலையத்தில் தரித்து நின்றபோது, அந்தத் தொடருந்தும் சிங்களவரால் தாக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து தமிழர்களுக்கு எதிரான வன்செயல்கள் நாடு பூராகவும் கட்டவிழ்த்து விடப்பட்டன. திருகோணமலை, வவுனியா, பதுளை, இரத்தினபுரி, கொழும்பு போன்ற பகுதிகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டன.



இந்த இனக்கொலை பற்றிய விபரங்களை நாடாளுமன்றில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் எடுத்துக் கூறினார்கள். ஆனால், ஜே.ஆர். ஜெயவர்த்தன எதையும் கேட்க வில்லை. அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப் படுத்தவும் இல்லை. ஊரடங்குச் சட்டத்தை அமுலாக்கவும் இல்லை. மாறாகத் தமக்கு முன்னைய அரசாங்கம் போல் அவசரகாலச் சட்டத்திற்கு நாட்டை ஆள விருப்பமில்லை என்றும் மாறாக சாதாரண சட்டத்தின் கீழேயே நாட்டை ஆளப்போவதாக கூறியதோடு "போரா? சமாதானமா?" என்ற போர்ப்பிரகடனம் ஒன்றையும் வெளியிட்டார். அதாவது தமிழ் மக்களைப் பார்த்து "நீங்கள் போருக்குத் தயார் என்றால் நானும் போருக்குத்தயார். உங்களுக்குச் சமாதானம் தேவை என்றால் நானும் சமாதானத்திற்குத் தயார். இதைத் தான் எமது மக்கள் சொல்கிறார்கள்" என்று நாடாளுமன்றத்திற்குள்ளேயே சன்னதம் போட்டார்.

இதன் விளைவு சிங்களக் காடையர்களுக்குத் தமிழ்மக்களைக் கொல்லவும், தமிழர் சொத்துக்களைச் சூறையாடவும் தமிழர் வீடுகளுக்குத் தீ வைக்கவும் ஜே.ஆர் அரசினால் வழங்கப்பட்ட வெளிப்படையான உரிமமாகவே கருதப்படலாயிற்று. 1977ஆம் ஆண்டு இனக்கொலையைத் தொடர்ந்து, இக்காலம் பற்றி விசாரணை செய்வதற்காக இளைப்பாறிய உயர் நீதிமன்ற நீதியரசர் சன்சோனி தலைமையில் ஒரு விசாரணைக் குழுவை ஜே.ஆர். நியமித்தார். விசாரணை முடிவில் சன்சோனி அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அதில் அவர் குறிப்பிடுகையில், இந்த இனக்கொலைக்கு காவற்றுறையின் பொறுப்புணர்ச்சியற்ற போக்கும், அரசியல்வாதிகளின் பேச்சுக்கள், வதந்தி என்பனவே காரணமென அடையாளப்படுத்தினார்.

இந்த இனக்கொலையில் எல்லாமாக முன்நூறு வரையிலான தமிழர்கள் கொல்லப்பட்டதாக எடுத்துச் சொன்னார். ஆனால் வேறு அரசசார்பற்ற நிறுவனங்களினால் சேகரிக் கப்பட்ட தரவுகளின்படி ஆயிரத்து ஐந்நூறுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக தெரியவருகின்றது. பல நூற்றுக்கணக்கான தமிழ்ப் பொதுமக்கள் காயப்படுத்தப்பட்டனர் என்றும் கத்திக்குத்து, கத்திவெட்டு, இரும்புக் கம்பிகள், பொல்லுகள் என்பனவற்றால் இவை ஏற்படுத்தப்பட்டவை என்றும் அரசசார்பற்ற அமைப்புக்கள் அறிக்கை வெளியிட்டன. இனக்கொலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈடு வழங்கும்படி விசாரணைக்குழு பரிந்துரை செய்தபோதும், எத்தகைய நட்டஈடும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் அரசால் வழங்கப்படவில்லை.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# சாம்பல்தோட்டப் படுகொலை 1984

வவுனியா நகரின் மன்னார் ரோட்டிலிருந்து மூன்று கி.மி.ல் உள்ளது, சாம்பல் தோட்டம் கிராமம். இன்று இவ்விடம், நாவலர் பாணி என்று அழைக்கப்படுகிறது.

1984 திம்பு பேச்சு வார்த்தைக்கு முன்னர் இங்கு நடைபெற்ற படுகொலையைப்பற்றி அவ்வூரைச்சேர்ந்த பெயர் சொல்ல விரும்பாத ஒரு மங்கை கூறியாது,
"ஒரு திருமண நிகழ்ச்சி முடிவுற்று தனியாருக்க சொந்தமான ஒரு பேருந்திருந்தில் 70 தமிழர்கள் திரும்பிக் கொண்டிருந்தனர். அப்பேருந்தை பம்மைமேடு என்ற இடத்தில் சிங்கள இராணுவம் தடுத்து நிறுத்தி, அதிலிருந்த அனைவரையும் தேக்கவத்தை என்ற இடத்திலுள்ள தேக்கு மரத்தோப்புக்கு அழைத்துச் சென்றனர். பின்னர் 15 பெண்களையும், குழந்தைகளையும் தனியே பிரித்து அழைத்துச் சென்றனர். மீதமிருந்த ஆண்களை தேக்கு மரத்தைப் பார்க்கச் சொல்லி விட்டு, தாங்கள் வைத்திருந்த துப்பாக்கியை எடுத்து கண்முடித்தனமாய் சுட்டு தள்ளினார்கள்.

சிங்கள இராணுவம், அங்கு குண்டடிபட்டு கிடந்த உடல்களை பூட்ஸ் காலால் உதைத்து புரட்டிப் பார்த்து, எவரேனும் உயிருடன் இருக்கின்றனரா, என சோதனையிட்டனர். அங்கு ஏவராவது வலியால் புலம்பும் சப்தம் கேட்டால், திரும்பவும் அவர்கள் சாகும்வரை சுட்டனர். ஆரம்பத்தில் துப்பாக்கியால் சுட்டபோது, ஒருவர் மயக்கமுற்று கீழே விழுந்து விட்டதால், அவருக்கு குண்டு எதுவும் பாயவில்லை. ஆனால் குண்டடிபட்ட வேறு நபர்கள் இருவர் இவர் மீது இரத்த வெள்ளத்தில் விழுந்தனர். இதனால், மயக்கமுற்றிருந்தவர் உடல் மீது இரத்தம் படிந்தது. இராணுவத்தினர் மயக்கமுற்றிருந்தவரை உதைத்த போது, அவர் ஏதும் சப்தம் எழுப்பாதினால், மயக்கமுற்றவரும் இறந்திருப்பார் என எண்ணி சென்று விட்டனர். இராணுவம் அங்கிருந்து சென்றது தெரிந்தவுடன், எழுந்து அருகில் உள்ள தாலம்பொக்காணை என்ற கிராமத்திற்கு ஓடினார். அக்கிராமத்தில் தமிழர்களின் நண்பராகவும் விடுதலைப்புலி ஆதரவாளராகவும் ஒரு இஸ்லாமிய தலைவர் ஒருவர் இருந்தார். அந்த தலைவர் ஒரு கடை வைத்திருந்தார். தப்பி வந்த தமிழர், நடைபெற்ற சம்பவம் குறித்து அந்த இஸ்லாமிய தலைவரிடம் சொல்லிவிட்டு, அக்கிராமத்திலிருந்த காவல் துறைக்கு சொல்ல பயந்து, யாழ்ப்பாணதிற்கு சென்றுவிட்டார். இஸ்லாமியரும் கிராம மக்களும் படுகொலை நடந்த இடத்திற்கு சென்று பார்த்தனர், செய்தி காட்டுத் தீயாய் பரவியது.



தப்பி வந்த அந்த தமிழருக்கு தகுந்த பாதுகாப்பு கொடுக்கப்பட்டு பாதுகாப்பாய் அனுப்பிவைக்கப்பட்டார். நாங்கள் படுகொலை நிகழ்ந்த இடத்திற்கு சென்று பார்த்தோம். எங்கள் இருப்பிடம் அருகிலேயே இது நடந்துள்ளது. படுகொலை நடந்த இடத்தில் பெண்களின் உடல்கள் காண முடியவில்லை. அப்பெண்கள் எங்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்பதும், அவர்களின் கதி என்ன என்பதும் தெரியவில்லை என தப்பி வந்தவர் கூறினார்."

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலை கள் (1956-2008)

# 1977 ஆகஸ்ட் மாதம் தமிழின அழிப்பின் புகைப்பட காட்சிகள் யாழ்ப்பாணம்



ஆரம்பம் : எரிந்த பனையோலைக் கடகம்



தீயில் கருகிய ஜீப் வண்டி



கொள்ளையடிக்கப்பட்ட 'லக்சலா'



(மேல்) அடையாளம் காணப்படாத உயிர்ப்பலி.
(கீழ்) உதாரணத்துக்கு ஒரு சைக்கில்.



எரிந்து... உடைந்து ... சிதறி....



பாவிகள் இட்ட தீயில் பாழடைந்த தையல் கடைகள்



எரிந்து முடிந்த பழைய மாக்கற்



அடித்து நொருக்கப்பட்ட மோட்டார் வண்டி.



வலது காலை இழந்த வரதராசன்



வந்து சேர்ந்த அகதிகளில் ஒரு பகுதியினர்



தொடைகளைத் துளைத்த சன்னங்கள் - எதிர்வீரசிங்கம்



துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியான இளைஞர்கள்
பாக்கியராசா (ரவி) - ஆனந்தவேல்.



வான் நோக்கும் வள்ளுவர் - நிலம் நோக்கும் ஔவை



சிதைந்து கவிழ்ந்த சிவகுமாரன் - சோமசுந்தரப் புலவர்

# 1977 ஆகஸ்ட் மாதம் தமிழினப் படுகொலை புகைப்பட காட்சிகள் யாழ்ப்பாணம்



# பூந்தோட்டச்சந்திப்படுகொலை 10 ஆகஸ்ட் 1985

வவுனியா நகரிலிருந்து கிழக்கே மூன்று கி.மீ. தூரத்தில் பூந்தோட்டம் அமைந்துள்ளது.

வயல்களாற் சூழப்பட்ட இக்கிராமத்தில் அதிக மானவர்கள் விவசாயிகளாவர்.

10.08.1985 அன்று காலை 7மணியளவில் வழமைபோல் மக்கள் தமது அன்றாட செயற் பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். சந் தைக்குப் பொருட்கள் வாங்க மற்றும் விற்கச்செல்வோர், வைத்தியசாலைக்குச் செல்வோர், பாடசாலை செல்வோர் எனப் பூந் தோட்டம் வீதியால் அதிகளவான மக்கள் பயணம் செய்தனர். அந்த நேரம் அவ்வீதியால் வாகனத்தில் வந்த காவற்றுறையினர் வீதியில் பயணித்துக் கொண்டிருந்தபொதுமக்கள் மீது துப்பாக்கியால் சுட்டதில் பத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்தார்கள். பலர்காய மடைந்தார்கள்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01 வெள்ளையன் தேவதாஸ் - லொறிகிளினர் - 20
02 பொன்னம்பலம் வில்வராஜ் - வியாபாரம் - 22
03 கதிரேசு சுந்திரசேகரம் மருந்துத் - தொழிலாளர் - 25
04 சிங்காரம் நாகலிங்கம் - தொழிலாளி - 33
05 முனியாண்டி மூக்கன் - தொழிலாளி - 34
06 வீரமாரெட்டியார் கோவிந்தராஜ் - வியா பாரம் - 38
07 சின்னக்கருப்பன் கிட்ணசாமி - தொழி லாளி - 40
08 துரைராஜா நடேசபிள்ளை - உதவி முகாமையாளர் - 43
09 கறுப்பையா ராமராஜ் - வியாபாரம் - 48
10 கோவிந்தசாமி சிங்காரவேலு - கமம் - 63

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956- 2008)



# கள்ளம்பற்றைச்சந்திப் படுகொலை 10 ஆகஸ்ட் 1985

திருகோணமலை மாவட்டத்தின் புகழ் பெற்ற இடங்களில் ஒன்றான திரியாய்க் கிராமம் திருகோணமலையிலிருந்து ஒரு கி.மீ தூரத் தில் அமைந்துள்ளது.1985ஆம் ஆண்டு இனக்கலவரத்தினால் பாதிப்படைந்த மக்கள் அகதி முகாம்களிற் தஞ்சமடைந்திருந்தனர். முகாமிற்கு வந்த இராணுவத்தினர் வன் முறைகளால் இடம் பெயர்ந்து வந்திருந்த மக்கள் ஒன்பது பேரைக் கைது செய்து அழைத் துச் சென்றார்கள். இவ்வாறு கைதுசெய்து கொண்டு செல்லப்பட்ட மக்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலங்களாக கள்ளம் பற்றைச் சந்தியிலிருந்து மீட்கப்பட்டார்கள். இவர்கள் அனைவரும் இடம் பெயர்ந்து வந்த தமிழர்கள் ஆவர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01 நாராயணன் ஜெகநாதன் - கல்லுடைத்தல் - 48
02 சுப்பிரமணியம் நாராயணபிள்ளை - கிராமசேவகர் - 45
03 மாணிக்கம் கிருஸ்ணமூஉத்தி - -
04 நாகேஸ் -

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956- 2008)



# துவரங்காடு வரோதயநகர் படுகொலை 17 ஆகஸ்ட் 1985

திருகோணமலை நகரிலிருந்து நான்கு மைல் தொலைவில் வரோதயநகர்க் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்திற் பெரும் பாலானவர்கள் விவசாயிகளும் கூலித் தொழி லாளர்களும் ஆவர். 17.08.1985 அன்று நண்பகல் 12.30 மணியளவில் ஆயுதம் தரித சிங்களக் குழுவினர் வெள்ளை வாகனத்தில் கிராமத்திற்குள் நுழைந்து அப்பகுதி மக்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டனர். இதில் பத்துப் பேர் உயிரிழந்தனர். எட்டுப் பேர்படுகாய மடைந்தனர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01 இரத்தினம் குபேந்திரராசா - குழந்தை - 01
02 கந்தன் மாணிக்கம் - முதியவர் - 70
03 கதிர்காமு நாகேஸ்வரி - தொழிலாளி - 42
04 குணராசா மதியழகன் - மாணவன் - 08
05 குணராசா கெங்காதேவி - தொழிலாளி - 33
06 குணராசா வசிகரன் - குழந்தை - 01
07 தேசிங்கம் இன்பமலர் - சிறுமி - 06
08 தேசிங்கம் ஜெயந்தி - தொழிலாளி - 12
09 வெள்ளையன் திருச்செல்வம் - தொழிலாளி - 32
10 சீனியர் மாணிக்கம் - தொழிலாளி - 67

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956- 2008)

# வயலூர் படுகொலை 24 ஆகஸ்ட் 1985

1972ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவிற் பிரதேச செயலர் பிரிவில் காணி இல்லாதிருந்த ஏழை மக்களுக்கு வயலூர்ப் பிரதேசத்தில் காணியினை வழங்கி அம்மக்களைக் குடியேற்றியதன் மூலம் இக்கிராமம் உருவாகியது. வயலூர்க் கிராமத்தில் வாழ்ந்தவர்கள் விவசாயத்தையே தமது பிரதான தொழிலாக மேற்கொண்டார்கள். இக்கிராமம் எத்தகைய அபிவிருத்திகளும் இன்றி வறிய மக்கள் வாழும் பிரதேசமாகும்.

1985.08.24 ஆம் திகதி அதிகாலையில் வயலூர்க் கிராமத்தினைச் சுற்றிவளைத்த இராணுவத்தினர் வீடுகளில் இருந்த பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஆண்களைக் கைதுசெய்து தங்களுடன் அழைத்துச் சென்றார்கள். தமது கணவன்மாரை இராணுவத்தினர் கைதுசெய்து கொண்டு செல்ல அவர்களின் பின்னால் மனைவிமாரும் பிள்ளைகளும் சென்றார்கள். குமரன்குளம் நோக்கி காட்டுப் பாதையூடாக கைதுசெய்து கொண்டு செல்லப்பட்ட ஆண்களின் பின்னால் சென்ற பெண்களை சிறிது தூரம் சென்றதும் திரும்பிப் போகுமாறு இராணுவத்தினர் பயமுறுத்தியதுடன், ஆண்கள் தங்களுக்கு பாதை காட்டிவிட்டுத் திரும்பி வருவார்கள் எனவும் கூறினார்கள்.

ஐம்பது பேர் வரையான ஆண்கள் இராணுவத்தினரால் குமரன்குளம் நோக்கி அழைத்து செல்லப்பட்டார்கள். இவர்களில் ஒரு சிலரே தப்பி மீண்டும் வயலூர்க் கிராமத்திற்கு வந்து சேர்ந்தார்கள். இராணுவத்தினரால் கூட்டிச் செல்லப்பட்டவர்கள் சுட்டும் வெட்டியும் கொலை செய்யப்பட்ட உடல்கள் குமரன்குளம் பகுதி முழுவதும் காணப்பட்டன. காயத்துடன் தப்பிய இருவரில் ஒருவருக்கு வாயினுள் துப்பாக்கியை வைத்துச் சுட்டுள்ளனர். இதனைத் தொடர்ந்து வயலூர்க் கிராமத்து மக்கள் உடுத்த உடுப்புடன் இடம் பெயர்ந்து வேறு ஊர்களுக்குச் செல்ல வயலூர்க் கிராமம் மக்களற்ற சூனியப் பிரதேசமாக மாறியது.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# நெல்லியடிச் சந்தைப்படுகொலை 29 ஆகஸ்ட் 1990

யாழ். குடாநாட்டின் வடமராட்சிப் பகுதியில் நெல்லியடி, கரவெட்டிப் பிரதேசங்கள் அமைந்துள்ளன. இது யாழ் - பருத்தித்துறை வீதியில் பருத்தித்துறையிலிருந்து மூன்று மைல் தூரத்தில் அமைந்துள்ளது. வடமராட்சியின் தெற்கு மற்றும் மேற்குப் பிரதேசங்களுக்கு மையமாக நெல்லியடி நகரமும் வடமராட்சியின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளுக்கு மையமாக பருத்தித்துறை நகரும் அமைந்துள்ளது. நெல்லியடிப் பிரதேசத்தில் வாழ்கின்ற இருபத்தையாயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களின் தேவைகளை நிறைவு செய்வதாக நெல்லியடிச் சந்தை உள்ளது.

29.08.1990 காலை 9:30 மணியளவில் வழமைபோல தமது அன்றாட தேவைகளை நிவர்த்தி செய்யும் முகமாக நெல்லியடி மத்திய சந்தைக்குப் பல தரப்பட்ட கிராமத்திலிருந்தும் மக்கள் ஒன்று கூடியிருந்தார்கள். வடமராட்சி வான் பரப்பிற்குள் பிரவேசித்த இரண்டு பொம்பர் விமானங்களும் ஒரு அவ்ரோ விமானமும் இணைந்து நெல்லியடி மத்திய சந்தைப் பகுதியை நோக்கி குண்டுத் தாக்குதலை நடத்தின. காலைவேளையில் சந்தையில் பொருட்களை வாங்குவதற்கும் விற்பதற்குமென வந்த மக்களில் சிறுவர்கள், பெண்கள் உட்பட பதினாறு பேர் சம்பவ இடத்தில் உயிரிழக்க இருபத்துநான்கு பேர் காயமடைந்தார்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இராசையா புஸ்பவதி - வியாபாரம் - 50
02. ஜப்பான் - 50
03. நாகராசா ஆனந்தரவி - வியாபாரம் - 20
04. கிட்டினன் ஞானரூபன் - மாணவன் - 12
05. மகேசன் சண்முகேஸ்வரமூர்த்தி - கமம் - 36
06. முருகையா நிர்மலேஸ்வரன் - கமம் - 18
07. அப்புத்துரை குணரட்ணம் - வியாபாரம் - 54
08. பொன்னம்பலம் சோமஸ்காந்தசிவம் - அத்தியட்சகர் - 58
09. பொன்னையா மகேந்திரன் - அதிகாரி - 48
10. சோமாஸ்கந்தசிவம் மங்களநாயகி அம்மை - அதிபர் - 58
11. செல்வன் - மாணவன் - 14
12. சந்திரசேகரம் வல்லிபுரம் - கமம் - 70

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# மண்டைதீவில் காணாமற்போனோர் 25.08, 23.09 1990

யாழ். நகரத்திற்குத் தெற்காக வேலணைப் பிரதேசசேயலகப்ப பிரிவினுள் ஆயிரத்து இருநூறிற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்ற மண்டைதீவுப் பிரதேசம் அமைந்துள்ளது.

25.08.1990 அன்று சிங்கள இராணுவத்தினர் ஊர்காவற் துரையிலிருந்து மண்டைதீவு நோக்கி இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர். இந்நடவடிக்கையின் போது மக்களைப் பாதுகாப் புக்கருதி ஆலயங்களிற் தங்குமாறு முதல் நாள் உலங்குவானூர் தியிலிருந்து துண்டுப் பிரசுரங்களை வழங்கி மக்களுக்கு அறிவித்தனர். இதன்படி மண்கும்பான், அல்லைப் பிட்டி போன்ற கிராமத்து மக்கள் மண்கும்பான் அந்தோனியர் தேவாலயத்திலும், அல்லைப்பிட்டி பிலிப் நேரியார் ஆலயத்திலும் அகதிகளாகத் தஞ்சம் புகுந்தனர்.

24.08.1990 அன்று மண்கும்பான் அந்தோனியார் ஆலயத்திலும், இருபத்தைந்தாம் திகதி அதிகாலை அல்லைப்பிட்டி பிலிப்நேரியார் கோயிலிலும் தஞ்சமடைந்த மக்களில் பதினைந்து வயதிற்கும் நாற்பது வயதிற்கும் இடைப்பட்டவர்களை சிங்கள இராணுவத்தினர் கைதுசெய்தனர். இதில் ஒரே குடம்பத்தைச் சேர்ந்த மூவர், இருவர் என மண்டைதீவில் இருபத்தெட்டுப் பேரும், அல்லைப்பிட்டியில் முப்பதிரண்டு பேரும், மண்கும்பானில் பத்துப்பேருமாக மொத்தம் எழுபது பேர் கைது செய்யப்பட்டனர்.

28.08.1990 இல் கைதுசெய்தவர்களில் ஒரு சிலர் விடுவிக்கப்பட்டனர். பின்பு 23.09.1990 சிங்கள இராணுவத்தினரும், துணைக் குழுக்களும் சேர்ந்து மண்கும்பான் அ.த.க பாடசாலையிலிருந்து பதினெட்டு மாணவர்களைக் கைது செய்தனர். எல்லாமாக மூன்று கிராமத்திலும் எண்பத்தெட்டுப் பேர் கைது செய்யப்பட்டனர். ஆனால் இவர்கள் எவரும் இன்று வரை விடுதலையாகவில்லை.

இச்சம்பவத்தில் கைது செய்யப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த விஜயரட்ணம், சுகிர்தரட்ணம், பிரேமரட்ணம் ஆகிய மூன்று பிள்ளைகளின் தந்தையான யேசுரட்ணத்திடம் இது தொடர்பாகக் கேட்ட போது:



“கைது செய்யப்பட்ட என் பிள்ளைகளின் நிலை தொடர்பாக 1991 ஆம் ஆண்டு முதல் வாரத்தில் நாங்கள் சீறிதர்வீதியில் இருக்கும் ஈ.பி.டி.பி செயலகத்திற்குச் சென்று டக்ளஸ் தேவானந்தாவிடம் கேட்டோம். அப்போது அவர் அநேகமாக மூன்று பிள்ளைகள் என்றால் ஒன்றும் நடந்திருக்காது நான் அனுராதபுரம் போய்வந்து சொல்கிறேன் என்றார். அப்போது நாங்கள் பிள்ளைகளின் ஆவணங்களைக் கொடுத்தபோது அதைப் பிரதி பண்ணித் தரும்படிகேட்டார். அதன்படியே நாங்கள் அடுத்த நாள் அவரிடம் கையளித்தோம். அதன் பின்பு கூட்டுப்படைத் தளபதியாக இருந்த டென்சில் கொப்பேகடுவ அவர்களிடம் மனு செய்தோம். நேரிலும் அவரிடம் பல தடவைகள் கேட்டோம். ஒவ்வொரு முறையும் டக்ளஸ் தேவானந்தாவோடுதொடர்பு கொண்டீர்களா என்றுதான்

# மண்டைதீவில் காணாமற்போனோர் 25.08, 23.09 1990

கேட்பார். கடைசி முறையாக 13.05.1992 நானும், அப்போதைய கல்விப்பகுதி பிரதி அமைச்சர் இராஜமனோகரி புலேந்திரன் அவர்களும் டென்சில் கொப்பேகடுவ அவர்களைக் கேட்டபோது, அவர் நான் இம்முறை தீவுப் பகுதிக்குப் போய்வந்து உங்கள் பிள்ளைகளைக் காட்டுகிறேன் என்றார். அதன்பின்னர் 1992 ஆனி மாதம் இறுதி வாரத்தில் கொழும்பு பார்க் வீதியில் இருக்கும் ஈ.பி.டி.பி செயலகத்தில் டக்ளஸ் தேவானந்தாவைக் கேட்டோம். அவரும் தான் இம்முறை தீவுப்பகுதிக்குப் போய் வந்து சொல்லுவதாகக் கூறினார். 14.08.1992 திருமலை சீ.சீ.எம்.பி சிறையில் எமது பிள்ளைகள் உட்பட எண்பது பேர் மதிய உணவின் பின்னர் பாதுகாப்பாக வெளியே கொண்டு செல்லப்பட்டனர் என தகவல் கிடைத்தது. அதன் பின்னர் 23.12.1994 இல் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவிடம் மனு பண்ணினோம். அப்போது அவர் ஆணைக்குழு விசாரணை செய்யப் போவதாகவும், அதற்கு எங்களை விண்ணப்பம் பண்ணும்படியும் சொன்னார். அதன்படியே ஆணைக்குழு விசாரணைக்கு விண்ணப்பித்தோம். 12.06.1996 இல் ஆணைக்குழு விசாரணைக்கு வரும்படி அழைக்கப்பட்டு விசாரணை நடைபெற்றது. அப்போது ஆணைக்குழுவினர் உங்கள் பிள்ளைகளைப்பற்றி டக்ளஸ் தேவானந்தாவிடம் கேளுங்கள் என்று கூறினார்கள். ஆனால் நாங்கள் கேட்கமுடியாது நீங்கள் கேட்டுச்சொல்லுங்கள் என்று கூறினோம். அதன்படி தாங்கள் கேட்டுச்சொல்லுவதாகக் கூறினார்கள். ஆனால் இதுவரை எவ்வித பதிலும் எனக்குக் கிடைக்கவில்லை."

சிறீலங்கா இராணுவத்தினராலும் துணைக் குழுக்களாலும் கைது செய்யப்பட்டு காணாமற் போனவர்களில் பலர் சித்திரவதைகளின் பின் உயிரிழந்ததாகவும், அவர்களது உடல்களை மண்டைதீவில் வீட்டு வளவினுள் உள்ள கிணற்றிற் போட்டதாக ஊர் மக்கள் தெரிவித்தனர். இவர்களிற் சிலரின் எலும்பு கூடுகளும் மீட்கப்பட்டன. இவ்வாறு காணாமற் போய் உயிரிழந்தவர்களின் நினைவாக மண்டைதீவில் நினைவுக்கல் கட்டப் பட்டுள்ளது.




25.08.1990 - 23.09.1990 வரை மண்டைதீவில் கைது செய்து காணமற் போனவர்கள் விபரம்:

1. சூசைப்பிள்ளை செல்வ நாயகம் (35)
2. இ. சுதாகரன் (20)
3. இ. விபுலானந்தர் (30)
4. இரட்ணம் ஜெயசீலன் (23)
5. உதயகுமார் (-)
6. ந. குகானந்தராசா (24)
7. பாலசிங்கம் (30)
8. பத்திநாதர் டயஸ் (22)
9. பத்திநாதர் சென்யூட் (27)
10. பழனித்துரை சத்திய பாலன் (34)
11. பி.தவம் (18)
12. பி. ஜெயச்சந்திரன் (18)
13. பி. சதீஸ்வரன் (-)
14. பி. பத்மராசா (20)
15. ரி. இருதயராசா (26)
16. ரி. ஆரோக்கியநாதன் (23)
17. ரி. அருள்நேசன் (22)
18. ரி. யோகராசா (18)
19. ரி. ஞானேந்திரன் (25)
20. ரி. செல்வரட்ணம் (20)
21. ரி. சுந்தரலிங்கம் (24)
22. ரி. சாந்தலிங்கம் (20 )
23. ரி. சிமோன் (20 )
24. ரி. ராஜ்குமார் (32)
25. ரி. ராதாகிருஸ்ணன் (-)
26. ரி. ரவீந்திரன் (21)
27. வை. எட்வேட் (21)
28. த. பாலரட்ணம் (20)
29. திரநாயகம் சட்டநாத பிள்ளை (32)
30. மா. தவசீலன் (24)
31. மடுதீன் ஸ்ரானிக் (21)
32. மிசேல் ஸ்ரானிக் (19)
33. மிசேல் சில்வஸ்ரார் (32)
34. அ. அழகராசா (19)
35. அ. ஜெயசீலன் (23)
36. அன்ரன் அசில்லாஸ் (28)
37. அன்ரன் அருள்தாஸ் (26)
38. அந்தோனி ஆரோக்கிய ராசா (23)
39. அந்தோனி றொபேட் (20)
40. ஆர். முருகானந்தன் (21)
41. ஆர். ரவீந்திரன் (20)
42. அலம்பின் றொபேட் (18)
43. ஜெயக்குமார் (22)
44. ஜோர்ச் சில்வஸ்ரார் (20)
45. ஜேசுதாஸ் (-)
46. யோ. விஜயபாலன் (21)
47. நோபேட் ரமேஸ் (19)
48. கே. இந்திரகுமார் (21)
49. கே. இராசசேகரன் (21)
50. கே. பிரமாதீஸ்வரன் (22)
51. கே. பீற்றர்போல் (17)
52. கே. விஜயகுமார் (19)
53. பொ. காந்தலிங்கம் (24)
54. செ. சுவக்கிப்பிள்ளை (30)
55. சொர்ணலிங்கம் லிங்கேஸ்வரன் (21)
56. ச. சதானந்தராசா (28)
57. சாள்ஸ் அன்ரனி அன்ன தாஸ் (27)
58. சி. அரவிந்தன் (20)
59. சி. சந்தியசீலன் (29)
60. சி. விமலதாஸ் (20)
61. சிவபாலசிங்கம் (28)
62. வி. டொன்போஸ்கோ (19)
63. விஜயரட்ணம் ரவி (23)
64. வில்பிரேட் தேவராசா (25)
65. எஸ். விறேமரட்ணம் (16)
66. எஸ். திருச்செல்வம் (-)
67. எஸ். மகேந்திரன் (20)
68. எஸ். அன்பழகன் (19)
69. எஸ். அருள்நேசன் (28)
70. எஸ். செல்வநாதன் (21)
71. எஸ். சுகிர்தரட்ணம் (19)
72. எஸ். சிவரூபன் (16)
73. எஸ். சிவகுமார் (19)
74. எஸ். சிவபாலன் (19)
75. எஸ். ரஞ்சித்குமார் (19)
76. எஸ். ரவீந்திரன் (15)
77. எஸ். லிங்கேஸ்வரன் (22)
78. என். இரட்ணசிங்கம் (21)
79. என். ஜேசுதாஸ் (45)
80. எம். சிந்தாத்துரை (28)
81. என். விஜயரட்ணம் (35)

வேறு நாட்களில் காணாமற் போனவர்களின் விபரம்

1. நிசோலஸ் டயஸ் எட்வின் (17) – 17.07.1996
2. பி. வரோதயநாதன் (18) – 25.05.1993
3. தாவீது பென்ஜமீன் (25) – 1992 ஓகஸ்ட்
4. என. சச்சிதானந்தராசா (24) – 1986
5. வி. பாலரஞ்சன் (39) – 1991 பெப்ரவரி

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலை கள் (1956-2008)



# வவுனிக்குளப் படுகொலை 26.09.1996, 15.08.1997

வடக்குக் கிழக்கில் காடுகளால் அதிகம் சூழப்பட்டுள்ள மாவட்டமான முல்லைத்தீவின் தென்மேற்குப் பகுதியை அண்டிய மாந்தை கிழக்குப் பிரதேசசெயலர் பிரிவினுள் வவுனிக்குளம் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பாரிய குளங்களில் ஒன்றான வவுனிக்குளம் அமைந்துள்ளது.

வவுனிக்குளத்திலுள்ள மக்களின் பிரதான தொழிலாக விவசாயம் அமைந்துள்ளது. 1996ஆம் ஆண்டு காலப்பகுதியில் வவுனிக்குளக் கிராமதத்தில் யாழ்ப்பாணம், கிளிநொசச்சி போன்ற பலவேறு பகுதிகளிலுமிருந்து உள்நாட்டு யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து தற்காலிக இருப்பிடங்களை அமைத்து நெருக்கடிக்குள் வாழ்ந்து கொண்டிருந்த மக்களின் மீது 26.09.1996 அன்று பிற்பகல் 02:10 மணியளவில் சிறீலங்கா விமானப்படையின் குண்டுவீச்சு விமானங்கள் மேற்கொண்ட தாக்குதலில் ஆறிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் சம்பவ இடத்தில் உடல்சிதறி உயிரிழந்ததுடன், பன்னிரண்டு பேர் வரையில் காயமடைந்தனர்.

1997ஆம் ஆண்டு காலப்பகுதியில் இராணுவத்தினர் வவுனியாவின் ஓமந்தைப் பகுதியூடாக "ஜெயசிக்குறு" இராணுவ நடவடிக்கை ஒன்றினை கண்டி வீதியினை பிரதான நகர்வு மையமாகக்கொண்டு மேற்கொண்டு வந்தனர். இந்த நடவடிக்கையின் போது இராணுவத்தினர் ஏவிய எறிகணைகளும், துப்பாக்கிச் சன்னங்களும், விமானக்குண்டுகளும் பொதுமக்களைத் தாக்கின. இராணுவ நடவடிக்கையினாற் பயந்த மக்கள் கோயில்களிலும், தேவாலயங்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சம் புகுந்தனர். இவ்வாறு தஞ்சம் புகுந்த மக்களில் வவுனிக்குள மக்களும் உள்ளடங்குவர்.

15.08.1997 அன்று ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கைக்குப் பயந்து வவுனிக்குள மக்கள் தமது பகுதியில் அமைந்துள்ள கிறித்தவ தேவாலயம் ஒன்றினுள் தஞ்சம் புகுந்தனர். இவர்களில் குழந்தைகள், சிறுவர்கள், முதியவர்களென பலதரப்பட்டவர்களும் காணப்பட்டனர். இதைவிட ஏனைய இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து வந்த பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்களும் இவ்வாலயத்தினுள்ளேயே தஞ்சம் புகுந்தனர். இவர்கள் அனைவருமே கர்த்தரே எம்மைக் காப்பாற்றுங்களென மனதாலும், வார்த்தைகளாலும் மன்றாடிய வண்ணமே இருந்தனர்.

15.08.1997 அன்று காலை 9 மணியளவில் விமானப்படையின் இரண்டு "கிபீர்" குண்டு வீச்சு விமானங்கள் பொதுமக்கள் இருந்த தேவாலயத்தின் மீது குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டன. இந்தக் குண்டுத் தாக்குதல்களினால் பதினொரு பொதுமக்கள் அவ்விடத்திலேயே உடல் சிதறிப் பலியாகினர். பதினாறிற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். தேவாலயமும் பலத்த சேதத்திற்குள்ளானது. படுகாயமடைந்த மக்களை உயிர் பிழைத்த மக்கள் மூன்று மைல்களுக்கு அப்பாலுள்ள மல்லாவி வைத்தியசாலைக்கு வாகனத்திலும், மோட்டார் சைக்கிள்களிலும் கொண்டு சென்றனர். கொண்டு செல்லப்பட்டவர்களில் ஒருவர் 18.08.1997 அன்று வைத்தியசாலையில் இறந்தார்.

அன்றைய தினம் மீண்டும் மு.ப 11.00 மணியளவில் அப்பகுதியில் அதே விமானங்கள் நடத்திய குண்டுத்தாக்குதலில் எட்டுப் பொது மக்கள் படுகாயமடைந்தனர். இவர்களும் மல்லாவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் ஒருவர் 20.08.1997 அன்று வைத்தியசாலையில் இறந்தார். இவ்வாறாக வவுனிக்குள கிறித்தவ தேவாலயம் மீதான விமானக்குணடு தாக்குதலில் எல்லாமாகப் பதினொரு பொதுமக்கள் உயிரிழந்ததுடன், இருபதிற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தார்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. சின்னத்தம்பி வடிவேலு - விவசாயம் - 51
02. பெரியதம்பி சின்னராசா - விவசாயம் - 67
03. சின்னராசா புஸ்பமாலா - மாணவி - 20
04. வல்லியர் சின்னத்தம்பி - தொழிலாளி - 55
05. சந்திரசேகரம் இராஜேஸ்வரி - 32
06. இரத்தினசாமி சிவஞானசுந்தரம் - ஓய்வூதியம் -69
07. பழனியாண்டி மாரிமுத்து - மாணவர் - 18
08. இரத்தினம் இராசகுமாரி - வீட்டுப்பணி - 24
09. குணரத்தினம் சண்முகராசா - தொழிலாளி - 23
10. அருளானந்தம் விமலானந்தம் - சுயதொழில் - 30
11. தேசிங்கராஜா தங்கமணி - 48
12. தேசிங்கராஜா வசந்தகுமாரி - மாணவன் - 17
13. நடராசா புஸ்பமலஉ - 41
14. நடராசா கஜன் - 04
15. அன்னமலர் - 40
16. துரைரெட்ணம் பரமேஸ்வரி - 46
17. நவரத்தினம் சாந்தி - வீட்டுப்பணி - 21

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. சுனில் - 60
02. சின்னராசா கேதீஸ்வரன் - 16
03. சின்னராசா ரவிமாலா - மாணவி -12
04. சிவஞானசுந்தரம் ஜசேசன் - 22
05. தமலிங்கம் - மாணவி - 6
06. சுனில் ஜெய்சன் - 22
07. சுனில் கிளி - 24
08. நடராசா பூரணம் - 52
09. நடராசா பிரபு - 24
10. அம்பிகாவதி இந்துமதி - மாணவி - 14
11. அம்பிகாவதி கங்கையமரன் - மாணவன் - 11
12. சின்னராசா வசந்தமாலா - 24
13. எஸ்.நாகபூரணி - 32
14. பொன்னுத்துரை சுரேஸ் - 27
15. எஸ்.யோகமோகன் - 18
16. ஜெயச்சந்திரன் - மாணவன் - 15
17. ஆர்.பாஞ்சாலி - 32
18. ஜெ.மதுசன் - குழந்தை - 02
19. எம். இராசமலர் - 55
20. கௌரி - 22
21. நாகசாந்தி - மாணவி - 13
22. வி.தயானி - 18
23. வி.தர்மினா - மாணவி - 09
24. எஸ்.விஜயராஜா - 16
25. எஸ்.சந்தனம் - 59
26. எஸ்.செல்வராணி - 22
27. எஸ்.ஞரீதரி - குழந்தை - 3
28. எஸ்.காணிக்கைராஜா - 38

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# புதுமுறிப்பு இடம் பெயர்ந்தோர் மீது செல்வீச்சு 30 ஆகஸ்ட் 2008



2006ம் ஆண்டு நடுப்பகுதியில் மன்னாரில் ஆரம்பித்துத் தொடர்ந்த மக்கள் இடப்பெயர்வு ஆகத்து 2008 இல் நெருக்கடி நிலையை அடைந்தது. அச்சமயம் வன்னியிலிருந்து அண்மையில் இடம் பெயர்ந்தோரின் எண்ணிக்கை 150,000 வரை எட்டிவிட்டிருந்தது.

ஆகத்து 2008 இல் கிளிநொச்சி மாவட்டத்தின் புதுமுறிப்பில், இடம் பெயர்ந்த மக்கள் தொகை மிக நெரிசலாகக் காணப்பட்டது. மன்னார் மாவட்டத்தின் பரப்புக்கடந்தான் கிராமத்திலிருந்த மூன்று இளங்குடும்பத்தினர் ஆகத்து 2007 அளவில் இடம்பெயர ஆரம்பித்திருந்தனர். முதலில் மன்னாரிலுள்ள கள்ளியடிக்கும், பின்னர் அங்கிருந்து முல்லைத்தீவிலுள்ள பாலியாற்றுக்கும் அதன் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தின் முழங்காவிலுக்கும் அதன் பின்னர் அதே மாவட்டத்தின் வன்னேரிக்குளத்துக்கும் இக் குடும்பத்தினர் இடம் பெயர்ந்திருந்தனர். அவர்கள் மீதான ஷெல் தாக்குதல் இடம் பெறுவதற்கு பத்து நாட்களின் முன்பதாகவே அவர்கள் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள புதுமுறிப்புக்கு இடம் பெயர்ந்திருந்தனர்.

30 ஆகத்து அன்று சிறீலங்கா இராணுவம், இந்த மூன்று குடும்பங்களும் ஒரு காணியில் அமைத்திருந்த மூன்று இருப்பிடங்களின் மத்தியில் ஷெல்களை வீசியது. இதன் விளைவாக, இன்னமும் பெயரிடப்படாத ஒரு மாதக் குழந்தை, மேலும் ஒரு குழந்தை உட்பட, இந்த மூன்று குடும்பங்களையும் சேர்ந்த ஐவர் கொல்லப்பட்டனர். இப் படுகொலைகளின் தாக்கம் இந்த இளம் பெற்றோரையும் குழந்தைகளையும் மிக மோசமாகப் பாதித்துள்ளது.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. விசுவநாதன் திலகேஸ், 35
02. கருப்பையா ஆனந்தராசா, 28
03. ஆனந்தராசா கௌதம், 02



04. குழந்தை,0

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)







# சமஸ்ரிக்காகப் போராடுவது யார்?

12.08.2023

தேசத்தை அங்கீகரிக்கும் சமஸ்ரிக் கட்டமைப்பே இனப்பிரச்சினைக்கான தீர்வாக அமையமுடியும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனது நிலைப்பாட்டை மீண்டும் ஒரு தடவை தெளிவுபடுத்தியிருக்கிறது.13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு கட்சிகள் தமது தரப்பு யோசனைகளைத் தருமாறு ஜனாதிபதி அண்மையில் கேட்டிருந்தார். அதற்கமைய முன்னணியானது 13ஆவது திருத்தத்தை நிராகரித்து சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்திருக்கிறது.

அதேசமயம் கடந்த நான்காம் தேதி யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்த விக்னேஸ்வரன் ஒரு கருத்தைத் தெரிவித்திருந்தார். தமிழ்க் கட்சிகள் எல்லாவற்றினதும் இறுதி இலக்கு கூட்டாட்சிதான் என்ற போதிலும் அதை அடைவதற்கான வழிவகை எது என்பதை தமது கட்சியும் உட்பட எந்த ஒரு கட்சியும் வெளிப்படுத்தவில்லை என்று அவர் கூறியுள்ளார். சமஷ்டியை அடையும் வழி தெரியாதபடியால் அரசியலமைப்பில் இருக்கும் 13ஆவது திருத்தத்தைப் பலப்படுத்தி அதிகாரங்களைப் பெற்றுக் கொள்வோம். பின்னர் அதிலிருந்து மேலும் முன்னேறி செல்லலாம் என்றும் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சமஸ்டியைப் பெறுவதற்கான வழிவகை குறித்த அவருடைய கருத்து யதார்த்தமானது. கடந்த 14ஆண்டுகளாக மட்டுமல்ல



அதற்கு முன்னரும் அதாவது ஆயுதப் போராட்டத்திற்கு முன்னரும் தமிழ் மிதவாதிகளிடம் சமஸ்டியை அடைவதற்கு உரிய வழிவரைபடம் எதுவும் இருக்கவில்லை. கடந்த 14 ஆண்டுகளாக தமிழ் கட்சிகள் போராடுகிறோம் போராடுகிறோம் என்று கூறிக்கொள்கின்றன. ஆனால் அந்த அரசியல் இலக்கை நோக்கி எவ்வாறு அறவழியில் போராடுவது என்பது குறித்து எந்த ஒரு கட்சியிடமும் தெளிவான பார்வையோ அல்லது அதற்கு வேண்டிய அரசியல் ஒழுக்கமோ அல்லது அதற்கு தேவையான அர்ப்பணிப்போ இருப்பதாகத் தெரியவில்லை.

விக்னேஸ்வரன் அது தன்னிடமும் இல்லை என்பதை ஒப்புக்கொள்கிறார். ஆனால் அதற்காக அதாவது போராட்டத் தயாரில்லை என்பதற்காக அல்லது போராடத் தெரியவில்லை என்பதற்காக கிடைப்பதைப் பெற்றுக் கொள்வது என்ற தத்துவம் ஏற்புடையதல்ல. கிடைக்கும் அரைகுறைத் தீர்வை ஏற்றுக் கொண்டால் அதை நோக்கியே தமிழ் மக்களின் கவனமும் சக்தியும் குவிக்கப்படும். மாகாண சபைக்குள் எப்படி தங்களுடைய இருப்பைத் தக்கவைப்பது என்பதிலேயே கட்சிகளின் கவனம் முழுதும் குவிக்கப்பட்டு விடும். அதாவது தனது இறுதி அரசியல் இலக்கை நோக்கி முன்னேறுவதற்குப் பதிலாக தமிழ் அரசியலானது மாகாண சபைகளுக்குள் தேங்கி நின்றுவிடும். கிடைக்கும் இடைக்கால ஏற்பாடுகளை நிராகரித்துவிட்டு விட்டுக் கொடுப்பின்றிப் போராடிய மக்களே இறுதி வெற்றியைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் இங்கே பிரச்சனை என்னவென்றால், அப்படிப்பட்ட போராட்டம் எதுவுமே நடக்கவில்லை என்பதுதான். இப்பொழுது நடக்கும் எல்லாப் போராட்டங்களும் பதில் வினையாற்றும்-ரியாக்டிவ்-போராட்டங்களே. எதிர்த் தரப்பின் ஆக்கிரமிப்புகளுக்கு எதிர்ப்புக் காட்டுபவை.

13ஐ நிராகரிக்கும் முன்னணியானது சக கட்சிகளுக்கும் இந்தியாவுக்கும் எதிராகக் கோஷம் எழுப்பினால் மட்டும் போதாது. அதைவிட ஆழமான பொருளில் சமஸ்டிக்காகப் போராடவும் தியாகங்களைச் செய்யவும் தயாராக இருக்க வேண்டும். சமஸ்ரியை அடைவதற்கான வெளியுறவுக் கொள்கை எது என்பதை வெளிப்படையாக விவாதிக்க வேண்டும். அதற்கு வேண்டிய கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும். தாயகத்தில் நிலப்பறிப்பு மற்றும் சிங்கள பௌத்தமயமாக்கலுக்கு எதிராக அக்கட்சிதான் அதிகமாகப் போராடுகிறது. அதன்மூலம் தமிழ் அரசியலை அவர்கள் நொதிக்கச் செய்கின்றார்கள். ஆனால் அந்தப் போராட்டங்களில் அநேகமானவை ஒரு கட்சிப் போராட்டங்கள், அல்லது சிறு திரள் போராட்டங்கள், அல்லது கவன ஈர்ப்பு போராட்டங்கள். அதாவது தொகுத்துக்கூறின் அரசாங்கத்துக்கு தாக்கமான விதங்களில் சேதத்தை ஏற்படுத்தாத போராட்டங்கள்.

கடந்த 14ஆண்டுகளில், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான பேரணிஎழுக தமிழ் போன்றவற்றை நீக்கிப் பார்த்தால் பெரும்பாலான போராட்டங்கள் கவனஈர்ப்பு போராட்டங்கள் அல்லது சிறுதிரள் போராட்டங்கள்தான். இப்போராட்டங்களால் அரசாங்கத்துக்கு பொருளாதார ரீதியாக நட்டம் எதுவும் ஏற்படவில்லை. குறைந்தபட்சம் அரசு நிர்வாகத்தை முடக்குவதற்குக்கூட இந்த போராட்டங்களால் முடியவில்லை. அதாவது இப்போராட்டங்களால் அரசாங்கத்துக்கு நோகக் கூடிய விளைவுகள் ஏற்படவில்லை. அல்லது வெளியுலகத்தைக் கவர்ந்திழுக்கும் சக்தியும் இப்போராட்டங்களுக்கு இருக்கவில்லை.

இந்த விடயத்தில் விக்னேஸ்வரன் மட்டுமல்ல தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழரசு கட்சி, குத்துவிளக்கு கூட்டணி உட்பட எல்லாருமே பொறுப்பாளிகள் தான். ஈழத் தமிழர்கள் சமஸ்டிக்காகத் தாக்கமான விதத்தில் போராடவில்லை என்பதைத்தான் கடந்த 14 ஆண்டுகளும் நிரூபித்திருக்கின்றன.

இந்த பலவீனத்தை கண்டுபிடித்த காரணத்தால்தான் அரசாங்கம் துணிச்சலாக சிங்கள பௌத்த மயமாக்கலைத் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகிறது. நாடு பன்னாட்டு நாணய நிதியத்திடம் கடன் வாங்கிக் கொண்டிருக்கும் ஒரு காலகட்டம் இது. ஐநாவில் மனித உரிமைகள் பேரவைக்குள் ஒரு பொறிமுறை இலங்கைக்கு எதிராகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அது போர்க் குற்றங்கள் தொடர்பாக சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரித்துக் கொண்டிருக்கிறது. அது ஒரு பலவீனமான பொறிமுறைதான். மனித உரிமைகள் ஆணையருடைய அலுவலகத்துக்கு உட்பட்ட ஒரு பொறிமுறைதான். என்றாலும் அது இலங்கை அரசாங்கத்துக்கு நெருக்கடியை கொடுக்கக் கூடியது. இப்படிப்பட்டதோர் பின்னணியில், அரசாங்கம் பன்னாட்டு நாணய நிதியம், மேற்கு நாடுகள், இந்தியா, ஜப்பான். ஐநா போன்றவற்றுக்குப் பதில்கூற வேண்டிய ஒரு காலகட்டத்தில் சிங்களபௌத்த மயமாக்கலை அடக்கி வாசிக்க வேண்டும். ஆனால் நிலைமை தலைகீழாகக் காணப்படுகிறது. அண்மைக் காலங்களில் சிங்களபௌத்த மயமாக்கல் பல்வேறு தளங்களில் பல்வேறு பகுதிகளில் செறிவாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதற்குக் காரணம் என்ன?

காரணங்கள் இரண்டு. ஒன்று, தமிழ் தரப்பின் போராட்டங்கள் அரசாங்கத்துக்கு நோகக் கூடியவைகளாக இல்லை என்பது. இரண்டாவது காரணம், அடுத்த ஆண்டு நடக்கவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் எப்படித் தனிச் சிங்கள பௌத்த வாக்குகளை கவர்வது என்று ஜனாதிபதி சிந்திக்கின்றார். ஏனெனில்



ஜனாதிபதி தேர்தலில் அவர் பெரும்பாலும் ராஜபக்சகளின் ஆதரவோடு களமிறங்கும் வாய்ப்புக்களே அதிகம் தெரிகின்றன. அவ்வாறு ராஜபக்சர்களோடு இணைந்து வாக்குக் கேட்டால் தமிழ் வாக்குகள் தனக்கு அதிகளவு கிடைக்காது என்றும் அவர் பயப்பட முடியும். ஏனென்றால் கடந்த 14 ஆண்டுகளாக தமிழ் மக்கள் ஒரே ஒரு அரசியல் தீர்மானத்தில் ஒற்றுமையாக முடிவெடுத்து வந்திருக்கிறார்கள். அது ராஜபக்ஷைகளுக்கு எதிராக வாக்களிப்பது என்ற தீர்மானம்தான். கடந்த 14 ஆண்டுகளாக நடந்த எல்லா ஜனாதிபதித் தேர்தல்களின்போதும் தமிழ் மக்கள் பெரும் போக்காக ராஜபக்சங்களுக்கு எதிராகத்தான் வாக்களித்தார்கள். அதிலும் குறிப்பாக ராஜபக்ஷைகளின் ஆணையை ஏற்று யுத்தத்தை வழிநடத்திய தளபதியான சரத் பொன்சேகா ராஜபக்சக்களுக்கு எதிராகத் திரும்பிபோது அவருக்கும் வாக்களிக்கக்கூடிய ஒரு நிலைமை காணப்பட்டது.

எனவே ராஜபக்சேக்களின் பதில் ஆளாகத் தேர்தலில் களமிறங்கினால் தமிழ் வாக்குகளைத் திரட்டுவதில் தனக்கிருக்கக்கூடிய நிச்சயமின்மைகளைக் கவனத்தில் எடுத்து, ரணில் தனிச் சிங்கள வாக்குகளைத் திரட்டுவது என்ற முடிவுக்கு வந்துவிட்டார் போலத் தெரிகிறது. அதனால்தான் சிங்களபௌத்தமயமாக்கலையும் நிலப்பறிப்பையும் முடுக்கி விட்டுள்ளார். அதிலும் அரசாங்கத்துக்கு நோகாத தமிழ் கட்சிகளின் போராட்டங்கள் அவருக்கு சாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும். எவ்வாறெனில், சிங்கள பௌத்த மயமாக்களுக்கு எதிராக தமிழ்க் கட்சிகள் போராடப்போராட அது சிங்கள மக்கள் மத்தியில் ரணிலுக்கிருக்கக்கூடிய செல்வாக்கை உயர்த்தும். சிங்கள பௌத்தத்தைப் பாதுகாப்பதற்காக அவர் விகாரைகளைக் கட்டுகிறார் என்று அவர்கள் நம்புவார்கள். எனவே அரசாங்கத்திற்கு எதிரான தமிழ் கட்சிகளின் சிதறலான, தொடர்ச்சியற்ற சிறுதிரள் போராட்டங்கள் மறைமுகமாக ரணிலின் வாக்கு வங்கியைப் பலப்படுத்துகின்றவைகளாகவே காணப்படுகின்றன.

மாறாக அரசாங்கத்தின் பொருளாதாரத்தை முடக்கும் விதத்தில் அல்லது அரச நிர்வாகத்தை முடக்கும் விதத்தில் அல்லது வெளிஉலகத்தின் கவனத்தை ஈர்த்து வைத்திருக்கும் விதத்தில் போராடுவதென்றால் தமிழ் மக்கள் பெருந்திரளாகப் போராட வேண்டும். பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான போராட்டத்தை மேற்கத்திய நாடுகளின் தூதரகங்கள் ஆர்வத்தோடும் எதிர்பார்ப்போடும் கவனித்தன.

கடந்த 14ஆண்டு காலமாக தமிழ் மக்கள் மத்தியில் நடக்கும் ஆர்ப்பாட்டங்களில் பெரியவை அல்லது கவனிக்குப்புக்கு உரியவை என்று கருதத்தக்க போராட்டங்கள் அனைத்தும் பெருந்திரள் போராட்டங்கள்தான். அவை ஒரு கட்சிப் போராட்டங்கள் அல்ல. பல கட்சிப் போராட்டங்கள்தான். கட்சிகளும் சிவில் சமூகங்களும் பாதிக்கப்பட்ட மக்களின் அமைப்புகளும் புலம்பெயர்ந்த தமிழ்த் தரப்புகளும் சமயப் பெரியார்களும் இணைந்து முன்னெடுத்த போராட்டங்கள்தான். அண்மையில் கூட முல்லைத்தீவில் ஒப்பீட்டுளவில் கவனிப்புக்குரிய ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது. அண்மைக் காலங்களில் முனனெடுக்கப்பட்ட ஊர்வலங்களில் அது ஒப்பீட்டளவில் பெரியது. அது கொக்குத் தொடுவாய் மனிதப் புதைகுழிக்கு நீதி கேட்டு நடத்தப்பட்ட ஒரு போராட்டம். அது ஒரு கட்சிப் போராட்டம் அல்ல. எனவே கடந்த 14 ஆண்டு கால அனுபவத்தைத் தொகுத்துப் பார்த்தால் தெளிவாகத் தெரிவது என்னவென்றால், கட்சிகளும் சிவில் அமைப்புகளும் புலம்பெயர்ந்த தமிழ்த் தரப்புக்களும் இணைந்து போராடினால்தான் அது வெளியுலகத்தின் கவனத்தை ஈர்க்கும். இல்லையென்றால் அவை ரணில் விக்கிரமசிங்கவின் சிங்கள பௌத்த வாக்கு வங்கியைத்தான் வளர்க்கும்.

நன்றி: நிலாந்தன்


JATHU RENOVATION
Free! ESTIMATES
உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்
★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com


அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner Advertisement Designing & Much More)...
இலட்சினை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203


The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The ESTATE BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com


Call today to Save energy
Free Estimate!
Call today
$50 OFF
Broken Glass...?
We will fix it within 24 hour.
Let us help with...
Replacement (Door & Windows)
Custom Door & Windows
Front Door & Patio Door
Garden Door
Door & Windows Re-Caulking (Important)
Painting Doors & Windows
Basement Separate Entrance Door
Home Painting
Spotlights installation
California Shutters
PTR DOORS & WINDOWS
PTR
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com




# அனுராதபுரக் காட்டில் நம் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து கிடக்கும் ஆறுசோழர்காலக் கோயில்கள்!



சிவபூமியின் சுவடுகளைத் தேடி இலங்கையின் பண்டைய தலைநகரான அனுராதபுரத்திற்குச் சென்றேன். அனுராத புரத்தில் 40 இந்துக் கோயில்களின் சுவடுகள் உள்ளன என அறிந்தேன். அவற்றைக் கண்டறிய அனுராதபுரத்திற்கு இரண்டு தடவைகள் சென்று ஆய்வுகளை மேற்கொண்டேன். அப்போது ஜேதவனாராம விகாரை வளாகம், அபயகிரி விகாரை வளாகம் ஆகிய பகுதிகளில் யக்ஷ, யக்ஷி தெய்வங்களின் அழகிய சிற்பங்கள் பலவற்றைக் கண்டேன். அவை மட்டு மல்லாது பலவித வடிவங்களில் நாகராஜரின் சிற்பங்களையும் காணக் கிடைத்தது. பேராசிரியர் சிற்றம்பலம் இவற்றில் சிலவற்றைப் பற்றித் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். இவற் றைக் கண்டவுடன் ஆய்வு செய்யும் ஆர்வம் அதிகரிக்க அடுத் தடுத்து பல தடவைகள் அனுராதபுரத்திற்கு சென்று பண்டைய நகரில் இருந்த எல்லா இடங்களிலும் ஆய்வுகளை மேற் கொண்டேன்.

இக்கால கட்டத்தில் 130 வருடங்களுக்கு முன்பு எச்.சி.பி.பெல் எனும் ஆங்கிலேய ஆராய்ச்சியாளர் எழுதியிருந்த ஆய்வுக் குறிப்புகளைத் தேடி இலங்கைத் தொல்பொருள் திணைக்களத் திற்கு சென்று அவை பற்றிய விபரங்களையும் குறிப் பெடுத்தேன். அதில் அனுராதபுரத்தின் வடக்கில் இருந்த ஆறு கோயில்களைப் பற்றியும் அவர் குறிப்பிட்டிருந்தார். அவரது குறிப்பின் படி இந்த ஆறு கோயில்களும் ஒரே இடத்தில் உள்ளன. இவற்றை பெல் அவர்கள் தமிழர் இடிபாடுகள் எனக் குறிப்பிட்டுள்ளார்.



மீண்டும் மூன்றாவது தடவையாக அனுராதபுரத்திற்கு சென் றேன். அனுராதபுரம் பௌத்த யாத்திரீகர்களாலும், சுற்றுலாப் பயணிகளாலும் எப்பொழுதும் நிரம்பி வழியும் ஓர் சுற்றுலாத் தலம். அன்றும் அப்படித்தான். கூட்டம் களை கட்டியது. இந்தத்தடவை பெல் அவர்கள் குறிப்பிட்டிருந்த கோயில்களைத் தேடி அபயகிரி விகாரையின் வடக்குப் பக்கம் உள்ள பங்குளிய, பெருமியன் குளம், அசோகாராம, விஜேராம ஆகிய இடங் களுக்குச் சென்றேன். அங்கெல்லாம் பெல் குறிப்பிட்ட கோயில்களின் சுவடுகளைக் காண முடியவில்லை.

அப்போதுதான் இவ்விடங்களுக்கு நடுவில் இருந்த ஓர் காட்டுப் பகுதி என் கவனத்தை ஈர்த்தது. அக்காட்டுக்குள் சென்று பார்க்க வேண்டும் எனும் ஆவல் ஏற்பட்டது.

அப்பகுதியில் தற்செயலாக சந்தித்த இரு சிங்கள தம்பிமாரின் உதவியுடன் காட்டுப் பகுதிக்குள் நுழைந்தேன். சுற்றுலாப் பயணிகள் யாரும் செல்லாத இடம். பட்டப் பகலில் கூட ஆள் நடமாட்டம் இல்லாத இடம். பறவைகளும், காட்டு வண்டுகளும் கத்தும் ஓசை மட்டுமே காதுகளில் கேட்டுக் கொண்டிருந்தது. சூரிய வெளிச்சமே படாமல் சற்று இருட்டாக அக்காட்டுப்பகுதி காணப்பட்டது.

காட்டுக்குள் சிறிது தூரம் நடந்து சென்று கொண்டிருந்த போது காலில் ஏதோ தடுக்கி விழப் பார்த்தேன். என் காலில் தடுக்கியது என்னவென்று பார்த்தபோது தான் தெரிந்தது, அது சிற்பங்கள் செதுக்கப்பட்ட ஓர் நாகக்கல். முக்கால்வாசி மண்ணுள் புதை யுண்டு அக்கல் காணப்பட்டது. ஆர்வம் மேலிட அப்பகுதியில் இருந்த பற்றைகளையும், காய்ந்த சருகுகளையும் விலக்கிப் பார்த்த போது ஆச்சரியமும், ஆனந்தமும் அடைந்தேன்.



அவ்விடத்திலே காட்டுப் பற்றைகளுள் மறைந்தும், மண்ணுள் புதையுண்டும் ஏராளமான கோயில்களின் இடிபாடுகளும், பரந்த அளவில் நூற்றுக்காணக்கான கற்தூண்களின் துண்டங் களும், செங்கல் அத்திவாரங்களும், கட்டிடங்களின் சிதைவு களும், ஓர் தீர்த்தக் கேணியின் இடிபாடுகளும், தீர்த்தக் கேணி யின் படிக்கட்டுகளும் காணப்பட்டன. அதுதான் எச்.சி.பி.பெல் அவர்கள் குறிப்பிட்டிருக்கும் கோயில்களின் வளாகம் என்பதைப் புரிந்து கொண்டேன்.

என்னோடு வந்த தம்பிமார் இருவரும் இதுதான் “தமிழர்கள் அழித்த பௌத்த விகாரைகளின் சிதைவுகள்” எனக் கூறி னார்கள் அந்த சிறுவர்களுக்கு இப்படித்தான் உண்மைக்குப்



புறம்பாக ஓர் பொய்யைக் கூறி வைத்துள்ளார்கள் என்பது புரிந்தது. சுமார் 400 மீற்றர் நீள, அகலம் கொண்ட இக்காட்டுக்குள் எல்லா இடத்தையும் சுற்றி வந்தேன். ஒரு மணி நேரத்தின் பின் வெளியே வந்தோம்.

இது போன்று பாதையின் அடுத்த பக்கத்தில் உள்ள காட்டிலும், விஜேராம விகாரைக்கு செல்லும் வீதியில் உள்ள காட்டிலும் அழிக்கப்பட்ட விகாரைகளின் சிதைவுகள் இருப்பதாகக் அவர்கள் கூறினர். சிங்களத் தம்பிமார்களின் உதவியோடு பாதையின் கிழக்குப் பக்கத்தில் உள்ள காட்டிற்கும் சென்று பார்த்தேன். அங்கும் கோயில்களின் சிதைவுகளைக் கண்டேன். பின்பு தம்பிமார் இருவரையும் அனுப்பிவிட்டு விஜேராம காட்டுப் பகுதிக்குச் சென்றேன். அங்கும் சிதைவுகள் பெருமளவில் காணப்பட்டன. 1000 வருடங்களுக்கு முன் ஒரே கோயில் வளாகமாக இருந்த இப்பிரதேசம் இப்போது பாதைகள் அமைக்கப்பட்டு மூன்று துண்டுகளாகப் பிரிக்கப் பட்டு விட்டது.



சுமார் 700 மீற்றர் அகலமும், 1500 மீற்றர் நீளமும் கொண்ட அந்தக் காட்டுப்பகுதி முழுவதும் கோயில்களின் சிதைவுகள் பரந்து காணப்பட்டன. மொத்தமாக இக்காட்டுப் பகுதியில் சுமார் 20 கட்டிடங்களின் இடிபாடுகள் காணப்பட்டன. குறைந்தது ஆறு கோயில்கள் இவ்விடத்தில் இருந்தன.

வரலாற்று ஆய்வாளர் எச்.சி.பி.பெல் அவர்களின் ஆய்வுக் குறிப்புகளில் இவற்றை "Tamil Ruins" (தமிழர் இடிபாடுகள்) எனக் குறிப்பிட்டுள்ளார். 1893 ஆம் ஆண்டு பெல் அவர்கள் இவ்விடத்தில் இருந்து இரண்டு சிவலிங்கங்கள், மூன்று அம்மன் சிலைகள், மூன்று சூரிய பகவான் சிலைகள் உட்பட பல தொல் பொருள் சின்னங்களைக் கண்டெடுத்தார். அக்குறிப்புகளில் பெல் குறிப்பிட்டுள்ள அத்தனை இடங்களும் இங்கே துல்லியமாகக் காணப்பட்டமை ஆச்சரியத்தையும், பெருமகிழ்ச்சியையும் உண்டாக்கியது.



1000 வருடங்களுக்கு முன்பு அனுராதபுரத்தில் ஓர் சைவ சாம்ராஜ்யம் செழிப்புடன் விளங்கிய இடம் இன்று மனிதர்கள் உற்புகக்கூட முடியாத அளவிற்கு அடர்ந்த காடு மண்டிப்போய் கிடக்கிறது. மந்திர முழக்கமும், மணி ஓசையும் இடை விடாமல் ஒலித்துக் கொண்டிருந்த ஓர் இடம் இன்று மயான அமைதியுடன் உறங்கிக் கொண்டிருந்தது. இந்துக் கோயில்கள் காணப்படும் இக்காட்டுப் பகுதியைச் சுற்றி இலங்கைத் தொல்பொருள் திணைக்களத்தினால் "பெருமியன் குளம் ஒதுக்கப்பட்ட பிரதேசம்" என பெயர் பலகை போடப்பட்டுள்ளது.

பண்டைய அனுராதபுர நகரில் உள்ள பௌத்த வழிபாட்டிடங்கள் அனைத்தும் கலாசார முக்கோணத் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு பௌத்த மக்கள் வழிபடும் வகையில் அமைத்துக் கொடுக்கப் பட்டுள்ளன. ஆனால் சைவ மக்களின் மூதாதையர்களால் வழிபடப்பட்ட இந்துக் கோயில்கள் எதுவும் புனரமைக்கப்படாமல் தேடுவாரற்று காடுகளுக்குள் மறைந்து போய்க் கிடக்கின்றன. இதன் மூலம் புராதன அனுராதபுர இராச்சியத்தில் சைவசமயம் இருக்கவில்லை எனும் தோற்றப்பாட்டை எதிர்கால சந்ததியினர் நோக்கும் நிலை உருவாகியுள்ளது. அதேசமயம் இங்கிருந்து எடுக்கப்பட்ட அழகிய இந்து தெய்வச் சிலைகள் இலங்கையின் நூதன சாலைகளையும், தொல பொருள் காட்சிச் சாலைகளையும் அழகு படுத்திக் கொண்டு, உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் வகையில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

என்.கே.எஸ்.திருச்செல்வம்
வரலாற்று ஆய்வாளர்
இலங்கை

நன்றி: என்.கே.எஸ். திருச்செல்வம்

**விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது.**
**இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.**

**விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு தொடர்புகளுக்கு**
**437.345.4203**

# இந்திய உள்துறை அமைச்சர் இனப்படுகொலை என்று சொன்னாரா?

ஆகத்து 06, 2023

இந்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா கடந்த மாதம் 27ஆம் திகதி ராமேஸ்வரத்தில் வைத்து ஆற்றிய உரையில் இலங்கையில் இடம்பெற்றது மனிதப் பெரும்படுகொலை என்ற அர்த்தத்தில் ஒரு வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளார்.

தமிழக பாரதிய ஜனதா கட்சியின் அமைப்பாளரான அண்ணாமலை “என் மண் என் மக்கள்” என்ற பெயரில் ஒரு பாதயாத்திரையை ஆரம்பித்திருக்கிறார். அதன் தொடக்க நிகழ்வு ராமேஸ்வரத்தில் இடம்பெற்றது. அதில் அமித்ஷா பேசினார். பேச்சில் ஒருபகுதி பின்வருமாறு...” காங்கிரஸ் மற்றும் திமுகவின் ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் ஆட்சி காலத்தில்தான் இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலை நடந்தது, தமிழக மீனவர்கள் மீனவர்கள் பெரும் துன்பத்துக்கு ஆளானார்கள்...”




இதில் அமித்ஷா பயன்படுத்திய வார்த்தை நேரடியாக இனப்படுகொலை என்ற அர்த்தத்தை தருகிறதா என்று விடயம் தெரிந்தவர்களிடம் கேட்டேன். அவர் “நரசங்கார” என்ற வார்த்தையை பயன்படுத்தியதாகவும், அதன் முதல் நிலை அர்த்தம் பாரிய மனிதப் படுகொலை என்றும் விவரம் தெரிந்தவர்கள் கூறுகிறார்கள். எனினும் அதனை இனப்படுகொலை என்று வியாக்கியானம் செய்ய முடியும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். அதேசமயம் அமைச்சரின் உத்தியோகபூர்வ ருவிற்றர் தளத்தில் இனப்படுகொலை என்ற வார்த்தைதான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

மேற்படி அண்ணாமலையின் பாதயாத்திரை தொடர்பாக ஒரு காணொளித் வெளியிடப்பட்டிருக்கிறது. அதில் ஓரிடத்தில் “ஈழத் தமிழர் கண்ணீர்ச்சாபம் என்றும் வீணாய்ப் போகாது” என்ற ஒரு வசனம் உண்டு. அதை தொடர்ந்து “நமக்கு தமிழ் ஈழம் வேண்டும்” என்ற ஒரு சுலோக அட்டை, பாலச்சந்திரனின் முகம் போன்றன காட்டப்படுகின்றன. அக்காணொளியும் காங்கிரஸ், திமுக கூட்டுக்கு எதிராகத்தான் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

இப்பொழுது விடயத்தைத் தொகுத்துப் பார்க்கலாம். அண்ணாமலை தென்னகத்தில் பாரதிய ஜனதாவின் நம்பிக்கை நட்சத்திரமாக மேலெழுந்து வருகிறார். ஈழத்தமிழர்களில் ஒரு பகுதியினர் அவரை கொண்டாடுகிறார்கள். தமிழகத்தில் அடுத்த தேர்தலை நோக்கி காங்கிரசுக்கும் திமுகவுக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் கூட்டு பலமானது என்று நம்பப்படுகிறது. இக்கூட்டின் வெற்றி வாய்ப்புகளை குறைப்பதற்காக ஈழத்தமிழர்கள் விவகாரத்தையும் பாரதிய ஜனதா கையில் எடுத்திருக்கிறது. ஈழத்தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டதற்கு காங்கிரஸும் திமுகவும் காரணம் என்று பாரதிய ஜனதா பிரச்சாரம் செய்கின்றது. பிரச்சாரத்தின் ஒரு பகுதியாகவே அமித்ஷா இனப்படுகொலை என்ற வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளார்.

அமித்ஷா ஓர் உள்துறை அமைச்சர். உள்துறை அமைச்சு எனப்படுவது இந்தியாவைப் பொறுத்தவரையிலும் பிரதமருக்கு அடுத்தபடியான பதவி. அவ்வாறான பொறுப்பில் இருக்கும் ஒருவர், குறிப்பாக பாரதிய ஜனதாவின் பெருந் தலைவர்களில் ஒருவர், அவ்வாறு இனப்படுகொலை என்று தமிழில் ருவிற் செய்கிறார். அதை எப்படிப் பார்ப்பது?

உள்நாட்டு அரசியல் தேவைகளுக்காக வெளியுறவு சம்பந்தப்பட்ட ஒரு விவகாரத்தை பொறுப்பின்றிக் கையாள முடியாது. இலங்கைத்தீவில் இடம் பெற்றது பெரிய மனிதப் படுகொலை அல்லது இனப்படுகொலை என்று இந்திய உள்துறை அமைச்சர் கூறுகிறார். அது நிச்சயமாக இந்தியாவின் உத்தியோகபூர்வ நிலைப்பாடாகத் தெரியவில்லை. இந்தியா மட்டுமல்ல இனப்படுகொலை என்ற வார்த்தையைப் பயன்படுத்தி இலங்கைக்கு அச்சுறுத்தலான தீர்மானங்களை நிறைவேற்றிய கனடா கூட இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்பதனை அதன் உத்தியோகபூர்வ அரச நிலைப்பாடாக இதுவரை அறிவித்திருக்கவில்லை. உலகில் எந்த ஒரு நாடும் அறிவித்திருக்கவில்லை. இதில் மேற்கத்திய நாடுகளோடு ஒப்பிடுகையில் இந்தியா ஈழத் தமிழர்கள் பெருமெடுப்பில் படுகொலை செய்யப்பட்டார்கள் என்ற விடயத்தை வெளிப்படையாக உத்தியோபூர்வமாக கூறுவதற்கு அநேகமாக தவிர்த்து வந்தது. அமித்ஷா இப்பொழுது அதை “நரசங்கார் – Narasanhaar” என்று கூறுகிறார்.

1983ஆம் ஆண்டு ஓகஸ்ட் 16ஆம் திகதி திருமதி இந்திரா காந்தி நாடாளுமன்றத்தில் இலங்கையில் நடப்பது இனப்படுகொலை என்று கூறினார். 1983 ஜூலைப் படுகொலைகளை எதிர்த்து ஓகஸ்ட் மாதம் 16ஆம் திகதி தமிழகம் முழுவதும் வரலாறு காணாத பூரண கர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. அன்றைய தினம் இந்திரா காந்தி நாடாளுமன்றத்தில் பின்வருமாறு உரையாற்றினார்... “இலங்கைத் தீவில் நடப்பது என்ன? அது இனப்படுகொலை தவிர வேறு எதுவுமில்லை”.

ஒரு இந்திய தலைவர் அவ்வாறு குறிப்பிட்டமை அதுதான் முதல் தடவை. அதற்குப் பின் எந்த ஒரு இந்தியத் தலைவரும் அவ்வாறு கூறியிருக்கவில்லை. இந்திரா காந்தி அவ்வாறு கூறிச் சரியாக 40 ஆண்டுகளின்பின் இந்திய உள்துறை அமைச்சர் இப்பொழுது அதை இனப்படுகொலை என்ற பொருள்பட வர்ணித்துள்ளார்.

ஆனால் அதை அவர் ஓர் அரசியல் நிலைப்பாடாகக் கூறவில்லை என்று ஓர் இந்திய ஊடகவியலாளர் சுட்டிக்காட்டினார். தமிழகத்தில் திமுக, காங்கிரஸ் கூட்டைத் தோற்கடிப்பதற்கான வியூகத்தின் ஒரு பகுதியே அதுவென்று அவர் வர்ணித்தார். தமிழக அரசியலில் ஈழத்தமிழர் விவகாரம் எனப்படுவது ஈழத் தமிழ்நோக்கு நிலையில் இருந்து கையாளப்படுவதை விடவும் தமிழகத்தின் தேர்தல் அரசியல் நோக்கு நிலையில் இருந்துதான் கையாளப்பட்டு வருகிறது என்பது ஈழத் தமிழர்களின் துயரங்களில் ஒன்று. அண்ணாமலையின் வருகைக்குப்பின் பாரதிய ஜனதா தமிழகத்தில் எழுச்சியைக் காட்டுகின்றது. அதே சமயம் காங்கிரசுக்கும் திமுகவுக்கும் இடையிலான கூட்டு பலமானது; வெற்றி வாய்ப்புக்களைக் கொண்டது என்றும் நம்பப்படுகிறது. அதனால்தான் அந்தப் பலத்தை உடைக்கும் நோக்கத்தோடு ஈழத்தமிழர்களின் விடயத்தில் தவறிழைத்தது இந்த இரண்டு கட்சிகளின் கூட்டுத்தான் என்று அமித்ஷா கூறுகிறார்.

குறிப்பாக அமித்ஷா அவ்வாறு கூறிய இடம் கூறிய காலம் எது என்பதை இந்திய – இலங்கை உறவுகளின் பின்னணியில் வைத்தும் பார்க்கவேண்டும். அண்மையில் ரணில் விக்கிரமசிங்க டெல்லிக்கு சென்றிருந்தார். அங்கே அவர் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே ஒரு தரை வழிப் பாலத்தை கட்டுவது தொடர்பான முன்மொழிவை கொடுத்திருந்தார். அந்த முன்மொழிவை அவர் ஏற்கனவே 2004ஆம் ஆண்டும் முன்வைத்திருந்தார். அப்பொழுது அவர் பலவீனமான பிரதமர். அப்பொழுது திருமதி சந்திரிக்கா ஜனாதிபதியாக இருந்தார். அந்த ஆட்சியை விமர்சகர்கள் இரட்டை ஆட்சி என்று வர்ணித்தார்கள். சந்திரிகா ஒரு பக்கம் இழுக்க ரணில் இன்னொரு பக்கம் இழுத்தார்.

அதன்பின் 2015ல் ரணில் ஆட்சிக்கு வந்ததும் இந்திய வீதிப் போக்குவரத்து அமைச்சர் நிதின் கட்கரி பாலம் கட்டும் யோசனையைப் புதுப்பித்தார். அப்பொழுதும் ரணில் பலமான தலைவர் அல்ல. அவர் பலவீனமான ஒரு பிரதமராக இருந்தார். ஜனாதிபதியாக மைத்திரி இருந்தார். அங்கேயும் இருவருக்கும் இடையே இழுபறி இருந்தது. அதனால் நிதின் கட்கரியின் யோசனையின் தொடர்ச்சியாக உரையாட ரணில் தயாராக இருக்கவில்லை.

ஆனால் ரணில் அந்த யோசனையை முன்வைத்து 11 ஆண்டுகளின் பின் நிதின் கட்கரி அந்த யோசனையை மீண்டும் புதுப்பித்தமை என்பதில் இந்தியாவின் வெளியுறவு இலக்குகள் இருந்தன. ரணில் பலவீனமானவரோ இல்லையோ அவர் ஒரு தலைவர். அவர் முன்வைக்கும் யோசனையை இறுகப் பற்றிப் பிடித்துக் கொள்வதன்மூலம் இந்தியா அந்த விடயத்தை சீரியஸாகக் கையாள முற்பட்டது. ஆனால் அப்பொழுது ரணில் பலவீனமான ஒரு பிரதமராக இருந்தார்.

இப்பொழுது மீண்டும் 19 ஆண்டுகளின் பின் அதே யோசனையை ரணில் முன் வைத்திருக்கிறார். ஆனால் இப்பொழுதும் அவர் பலவீனமான, அதாவது மக்கள் ஆணை இல்லாத ஒரு ஜனாதிபதிதான். தாமரை மொட்டுக்களின் தயவில் தங்கியிருப்பவர். அதாவது அப்பாலத்தை கட்டும் முன்மொழி



வுகளை ரணில் முன்வைக்கும் போதெல்லாம் அவர் பலவீனமான ஒரு தலைவராகவே இருக்கிறார். ஆனால் அவர் பலவீனமானவரா பலமானவரா என்பதல்ல இங்கு பிரச்சனை. அவர் ஓர் அரசுத் தலைவர். மற்றொரு அரசுத் தலைவருக்கு அவர் வழங்கிய வாக்குறுதி அது. எனவே இந்தியா அந்த வாக்குறுதியை எப்படி நடைமுறைப்படுத்துவது என்றுதான் சிந்திக்கும்.

அப்படி ஒரு பாலத்தை ரணில் மட்டுமல்ல எந்த ஒரு சிங்களத் தலைவருமே கட்டத் துணியமாட்டார்கள் என்பது இந்தியாவுக்குத் தெரியும். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே சுமுகமான உறவு உள்ளவரை, அப்படி ஒரு பாலம் கட்டப்படுவதற்கு எந்த ஒரு இலங்கை தலைவரும் ஒப்புக்கொள்ளப் போவதில்லை. அப்படி ஒரு பாலம் கட்டப்பட்டால் இலங்கை இந்தியாவின் மாநிலம் ஆகிவிடும் என்றுதான் சிங்கள மக்கள் சிந்திப்பார்கள். எனவே அது விடயத்தில் எந்த ஒரு சிங்களத் தலைவரும் ரிஸ்க் எடுக்கத் துணிய மாட்டார்.

எனினும், ரணில் திரும்பத் திரும்ப அது தொடர்பான வாக்குறுதிகளை இந்தியாவுக்கு வழங்குகிறார். ஏன்? ஏனென்றால் இந்தியாவை வசப்படுத்த அது உதவும் என்று அவர் நம்புகின்றார். அடுத்த ஆண்டு நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் இந்தியாவைத் தன் பக்கம் வைத்துக்கொள்ள அது உதவும் என்றும் நம்புகிறார். சீன விரிவாக்கத்தின் ஒரு பகுதியாக மாறிய இச்சிறிய தீவை இந்தியாவுடன் இணைக்கத் தயார் என்று கூறுவதன்மூலம் இந்தியாவின் பாதுகாப்பு தொடர்பான அச்சங்களைப் போக்கலாம் என்றும் அவர் நம்புகின்றார்.

இதற்கு ஓர் உதாரணத்தைச் சொல்லலாம். நாய்கள் சண்டை போடும் பொழுது தோற்றுப்போன நாய் என்ன செய்யும் தெரியுமா? நான்கு கால்களையும் வானத்தை நோக்கி உயர்த்தியபடி தன் வயிற்றுப்பகுதியைக் காட்டியபடி மல்லாக்கக் கிடக்கும். அது ஒரு முழுச்சரணடைவு. நாயின் உறுப்புகளில் மிகப் பலவீனமானது அடி வயிற்றுப் பகுதி. அந்த மென்மையான அடிவயிற்று பகுதியை எதிரியிடம் முழுமையாக ஒப்படைத்து விட்டு நான் மோதலுக்கு தயார் இல்லை எனது பலவீனத்தை நீ தாக்கலாம் என்று சரணடைவது. ரணில் அத்தற்காப்பு உத்தியை நினைவுபடுத்துகிறார். திருகோணமலையில் உள்ள எண்ணைக் குதங்களை இந்தியா பாவிப்பதற்கு அனுமதித்ததும் அவர்தான். இந்திய நிறுவனங்கள் இலங்கையில் எரிபொருளை விநியோகிப்பதற்கு அனுமதித்ததும் அவர்தான். இப்பொழுது சீன நிறுவனங்களுக்கும் அவர் அவ்வாறு அனுமதியை வழங்கியுள்ளார்.

அவர் டெல்லியில் வைத்து பாலம் கட்டத் தயார் என்று கூறிய பின்னர் தயான் ஜெயதிலக போன்ற சிலரைத்தவிர பெரும்பாலான சிங்களக் கட்சிகள் அது தொடர்பாக பெரிய அளவில் எதிர்ப்பைக் காட்டவில்லை. ஏனெனில், எல்லாருக்குமே தெரியும் ரணில் ஒப்புக்கொண்ட பாலத்தை மனதால்தான் கட்ட முடியும் என்று. 63 நாயன்மார்களில் ஒருவராகிய பூசலார் கட்டிய மனக்கோவிலைப் போன்றதே அதுவும். அப்பாலம் ஒர் அரசியல் பௌதீக யதார்த்தமாக மாறக்கூடிய பிராந்தியச்சூழல் இப்பொழுது இல்லை. கொழும்புக்கும் புதுடெல்லிக்கும் இடையே நல்லுறவு உள்ளவரை அது சாத்தியமில்லை.

ஆனால் ஓர் அரசுத் தலைவர் என்ற அடிப்படையில் ரணில் சொன்னது இந்தியாவுக்கு ஒரு பிடி. அதை எப்படி நடைமுறைப்படுத்தலாம் என்றுதான் இந்தியா சிந்திக்கும். இவ்வாறான ஒரு புவிசார் அரசியல் சூழலில்தான் இந்திய உள்துறை அமைச்சர் இனப்படுகொலை என்ற வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளார். இந்தியாவின் மிகப்பொறுப்பு வாய்ந்த அமைச்சர் ஒருவர் அவ்வாறு கூறியதை வெறுமனே தேர்தல் நோக்கிலானது என்று எடுத்துக் கொள்வதா? அல்லது அதற்குள் ஏதும் ராஜதந்திர பரிபாசைகள் உண்டு என்று எடுத்துக் கொள்வதா?

நன்றி: நிலாந்தன்








# DEBT SOLUTIONS GTA INC.

## CREDIT CARD & DEBT SOLUTIONS

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

**Reduce your debts upto 80%**

கடன் அட்டைகளினது தொல்லையா? வங்கிக்கடன் தொல்லையா? சம்பளத்தில் பறிமுதலா?
CREDIT CARD PROBLEMS, BANK LOAN PROBLEMS, WAGE GARNISHEE PROBLEMS

உங்கள் வங்கிக் கடன்களை திருப்பிச் செலுத்துவது சதவீதத்தில் (PERCENTAGE) தீர்மானிக்கப்படமாட்டாது.

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், கடன் தொடர்பான சட்டப் பிரச்சனை.
COLLECTION COMPANIES PHONING AT WORK OR HOME, LAWSUITS

உங்கள் வருமானம் (INCOME), செலவு (EXPENSES), என்பவற்றை வைத்து உங்கள் கடன்களில் (DEBTS) சிறிய மாதாந்தத்தொகையை மட்டும் செலுத்தும் முறை மூலம் உங்கள் மொத்தக் கடன்களில் (TOTAL DEBTS) இருந்து விடுதலை பெறலாம்.

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்.
We will protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIG, Life Insurance, Stocks, Bonds & Shares)






**Suren Sornalingam**
Post Graduate Diploma in Business Management
Federal Government Registered & Certified (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

**Tel: 647-274-2832**
www.debtsolutioncanada.ca

**Head Office Location:**
10 Milner Business Court, Suite 300
Scarborough ON M1B 3C8
(One Block North of 401 on Markham)

2 Robert Speck Parkway, Suite 750
Mississauga ON, L4Z 1H8

2 Country Court Blvd, Suite 400
Brampton ON, L6W 3W8

# காவல்!

## உண்மைக் கதை

**இன்று எமது வரலாற்று பகைச் சக்தியான சிங்களப் பேரினவாதம் தற்போது தமிழீழ மண்ணை ஆக்கிரமித்து நமது மக்களுக்குச் செய்யும் இரத்தத்தை உறைய வைக்கும் கொடுமைகள் நாளாந்தம் வெளிவந்து கொண்டிருக்கின்றன.**

**இதேபோலவே தமிழீழ மண்ணை முழுமையாக விழுங்கிய இந்தியப் படையெடுப்பு. எமது போராட்டத்தின் இருண்ட காலமாக என்றைக்கும் இருக்கும் அந்த ஆக்கிரமிப்புக் காலகட்டத்தின் போது நிகழ்ந்த உண்மை நிகழ்வுகளை கதை வடிவில் – உணர்வு பூர்வமாக நமது தமிழீழ எழுத்தாளர்கள் எமது இனத்திற்கு ஏற்பட்ட கொடுமைகளின் வரலாற்றுப் பதிப்பாக – நூல் வடிவில் வெளியிட்டுள்ளனர். முதலாவது தொகுதி "அம்மானைக் கும்பிடுறானுகள்...!" என்ற பெயரிலும். இரண்டாவது தொகுதி "வில்லுக்குளத்துப் பறவை" என்ற பெயரிலும் வெளியிடப்பட்டுள்ளன.**

**சிங்கள வெறிப்படை ,**

**"அமைதிப் படை" – ஓநாய்களின் வேட்டைக்குப் பலியான அப்பாவி மக்களின் கதைகள் – போராட்டத்தை நெஞ்சார நேசித்துச் செயற்பட்டதில் தம்மைப் பலியாக்கிய மக்களின் கதைகள் – போராளிகளை நேசித்து. அவர்களைக் காப்பாற்றத் துணிவுடனும் சாதுரியத்துடனும் செயற்பட்ட மக்களின் கதைகள்...**

**எல்லாமே நாம் வாழ்ந்த காலத்தின் உண்மைகளை நெஞ்சிற் பதியுமாறு நெருக்கமாய்ச் சொல்கின்றன.
அவற்றில்... இருந்து.**

ரசித்தபடி நடக்கிறான்.
மீண்டும்...

"சூய்... சூய்... சூய்... சூ...ய்"

மிகவும் நெருங்கிய நிலையில் அந்தச் சத்தம்.
உன்னிப்பாக அவதானிக்கிறான்.



## காவல்!

வன்னிக் கிராமங்களுக்கே உரித்தான ரம்யமான விடியல் ஒன்று. சூரியனின் மஞ்சள் கதிர்கள் வெண்பனிபடர்ந்த பச்சைப் புல்மீது பட்டுத் தெறிக்கின்றன.



கிராமங்களின் செல்வங்களான கால்நடைகள் ஒழுங்கையை நிரப்பிக்கொண்டே, "உங்களுக்கு உல்லாநேரமும் வழிவிட முடியாது" என, முரண்டு பிடிப்பதுபோல் நின்று கொண்டிருந்தன.

மாடுகளின் முதுகில் வாஞ்சையுடன் தட்டியபடி, தனக்கிட்ட வேலையை எப்படிச் சுலபமாகச் செய்து முடிக்கலாம் என்று சிந்தித்தபடி, எமது தோழன் ஒருவன் சென்று கொண்டிருக்கிறான்.

"சூய்... சூய்... சூய்... சூய்"
சற்றுத் தள்ளி ஒரு பெண்ணின் ஆடு மேய்க்கும் சத்தம்.

சத்தம் வந்த திசையைப் பார்க்கிறான்.

ஆடுகளையோ... மாடுகளையோ காணவில்லை. வேலிக் கப்பால் இருந்து ஆடு மேய்க்கும் சத்தம் விட்டு விட்டுக் கேட்கிறது.

ஜனசந்தடி மிக்க நகர்ப்புறத்தில் பிறந்து வளர்ந்த அந்தத் தோழனுக்கு இவை எல்லாம் சுக அனுபவங்கள்.

இயற்கையை ஒட்டிய மனிதனின் வாழ்க்கை அந்த நகர்ப்புற இளைஞனுக்கு சுகந்தமான காட்சி.

ரசித்தபடி நடக்கிறான்.

மீண்டும்...

"சூய்... சூய்... சூய்... சூ...ய்"
மிகவும் நெருங்கிய நிலையில் அந்தச் சத்தம்.

உன்னிப்பாக அவதானிக்கிறான்.

அடைக்கப்படாமல் கிடந்த அலம்பல் வேலிக்கு மேலால் ஒரு "ஆச்சி" தெரிந்தான். தன்னுடைய அம்மாவை நினைத்துக் கொண்டு கேட்டான்.

"என்ன ஆச்சி! ஆடோ கலைக்கிறியள்?"

"சூய்... சூய்... சூய்... சூய்"
இப்போழுது. அந்தக் குரலில் ஒரு பதற்றம் தெரிந்தது.

அந்தச் சத்தத்துக்கூடாக ஒரு செய்தி அனுப்பப்படுகிறதா எனச் சந்தேகித்தவாறு, நடையை நிறுத்துகிறான். ஆச்சியினுடைய முகம் ஏதோ ஒன்றைச் சொல்ல அவசரப்படுகின்றது.

தன்னுடைய தலையைத் தடவுவதுபோல் பாசாங்கு செய்து கொண்டு கையைப் பின்புறமாகக் காட்டி "ஆமி" என வாயசைத்தாள்.

நிலைமையைப் புரிந்துகொண்ட எமது தோழனின் கண்கள் பாதையைத் துழாவுகின்றன.

சற்றுத் தள்ளி இருந்த பாலை மரத்துக்குப் பின்னால் நிலை எடுத்துக் கிடக்கும் இந்திய இராணுவத்தின் இரும்புத் தொப்பி தெரிகின்றது.

நிதானமாகத் திரும்பி வந்த வழியே நடக்கிறான்.

"சூய்... சூய்... ய்... சூ...ய்"
இப்போது ஒரு புதிய இராகத்துடன் ஒலிக்கும் அந்தக் குரலில், ஓர் ஆத்ம திருப்தி தென்படுகின்றது!

- உணர்வு

## உணர்வு!

சிரித்துப் பழகும் அவரை இந்தியப் படைக்குப் பிடித்திருக்கிறது.

ஒரு படை அதிகாரி இன்னொரு படை அதிகாரியிடம் இப்படிச் சொன்னதுண்டு – "He is very helpful to us".

முன்னாள் தமிழ்ப் பொலிஸ்காரர்.

ஊர் காங்கேசன்துறை.



ஒருகாலத்தில் காவலராகப் பணியாற்றியதால் ஆங்கிலம் தெரிந்திருக்கிறது.

இந்தியப் படையினர் அவரையே நாடுகிறார்கள்.

மக்களுக்கும் இந்தியப் படைக்கும் இடையில் மொழி பெயர்ப்பு வேலை.

சிரித்துப் பழகும் அவரை இந்தியப் படைக்குப் பிடித்திருக்கிறது.

ஒரு படை அதிகாரி இன்னொரு படை அதிகாரியிடம் இப்படிச் சொன்னதுண்டு – "He is very helpful to us".

பொலிஸ்காரரைப் பேட்டி காண்பது என்று முடிவு செய்கிறார்கள்–

இந்திய அரசுக்குப் பிரச்சாரமாக இருக்கும்!

தொலைக்காட்சிப் படப்பிடிப்பாளர்கள் – ஓர் இந்தியப் படை அதிகாரி – நிருபர் – படைவீரர்கள் – பொலிஸ்காரர் வீட்டில் குவிகிறார்கள்.

பெரிய எதிர்பார்ப்பு.

"கமெரா"க்கள் முடுக்கிவிடப்படுகின்றன.

கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு ஒருவர் தொடங்குகிறார்.

"இந்தியப் படையின் போரைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?"

முன்னாள் பொலிஸ்காரரின் முகம் சிவக்கிறது.

"தேவையற்ற போர்."

"அப்படியானால் விடுதலைப் புலிகளின் சண்டை?"

"நியாயமானது."



படைவீரர்கள் பற்களைக் கடிக்கிறார்கள்.

அதிகாரியின் கண்கள் எரிகின்றன. "விடுதலைப் புலி நாய்களை அழிப்போம்!" என்று உறுமுகிறார் அவர்.

பொலிஸ்காரர் சொல்லுகிறார் –

"அவர்கள் மக்களோடு இருக்கிறார்கள்."

ஒரு கொடியவன் தான்...
"மிருகத்தனம்" விளையாடுகிறது –

பொலிஸ்காரரை அடித்து இரத்தத்தில் போட்டுவிட்டு, முரடர்கள் வெளியேறுகிறார்கள்.

நல்ல காலம்...!

பொலிஸ்காரர் சாகவில்லை –

எலும்புகள் உடைந்து போய் இருக்கிறார்.

– தமிழீழம் தை 1989

# பாடம்!

கீழே விழுந்து கத்தியை இருளில் அவள் கவனமாக எடுக்கிறாள்.

அவனுக்கு வெறி.

ஓங்கிக் குத்துகிறாள்.

காலில் கத்தி பாய அவன் ஓடத் தொடங்குகிறான்...

வல்வெட்டித்துறை.

பிரபாகரனின் ஊர்.

கடற்கரைக் காற்று பனைமரங்களை உசுப்புகிறது.

நல்ல இரவு.

நெரிசலான ஒழுங்கையால் இரண்டு உருவங்கள் மெள்ள அவள் வீட்டை நெருங்குகின்றன.

"வீர்" என்று ஓர் அலறல்.

ஒருவனின் கையை இறுகப் பிடித்துக்கொண்டு விளக்கை அவள் போட்டபோதுதான் தெரிகிறது – இந்தியப்படை ஆட்கள்!

அடுத்தவன் இன்னொரு பெண்ணைப் பிடிக்கிறான்.

கூச்சல்.

கீழே விழுந்து கத்தியை இருளில் அவள் கவனமாக எடுக்கிறாள்.

அவனுக்கு வெறி.

ஓங்கிக் குத்துகிறாள்.

காலில் கத்தி பாய அவன் ஓடத் தொடங்குகிறான்...

ஊர் கூடுகிறது.

துரத்துகிறார்கள்.

முள்வேலியால் பாய்ந்துபோது அடுத்தவனின் முதுகு கிழிகிறது.

கம்பி வேலி முள்ளில் – அந்த "மாவீரனு"டைய கிழிந்த சட்டையை மக்கள் காண்கிறார்கள்.
மறுநாள்.

இந்தியப்படை முகாமில் ஊர் முறையீடு.

வெட்கம்கெட்டவர்கள் அடையாளம் காணப்படுகிறார்கள்.

ஒருவனுக்கு கிழிந்த முதுகு.

அடுத்வனுக்குப் புண்பட்ட கால்.

இப்பொழுதெல்லாம் வல்வெட்டித்துறை மக்கள் "இந்தியப் படையை" எப்படி அழைக்கிறார்கள் தெரியுமா?

# பிரிவு!

"முள்வேலிச் சட்டைகள்!"

– உணர்வு

கைகூப்பி விடை பெற்றபோது மகாகவி பாரதி நினைவுக்கு வந்தான்.

"தழல் வீரத்தில், குஞ்சென்றும் முப்பென்றும் உண்டோ...

ஓர் அமைதியான அதிகாலை, அன்றைய காலை மட்டும் ஏனோ ஓர் மயான அமைதியாய்...

விடியவில், வேலைக்காகப் புறப்பட்ட பாதங்கள் மீண்டும் தத்தம் வீடுகளிலேயே விரைவுடன் புகலிடம் தேடிக்கொள்கின்றன.

அண்மைக்காலமாக வேட்டுக்களுடன் கண்விழிக்கும் சாவகச்சேரி நகர் அன்றுமட்டும்... இரைதேடி வந்த "அமைதிக்" கும்பலினால், ஓசையின்றி முற்று கைவிடப்பட்டது. முற்று முழுதான முற்றுகை.

சப்பாத்துக்களின் சீரான ஓசை, அவரம் கேட்டு விழித்த நாய்கள் பச்சைத் தொப்பிகளைக் கண்டதும் அமர்க்களமாகக் குரைக்கத் தொடங்கின. மக்கள் கிலிகொண்டு வீடுகளினுள்ளேயே முடங்கிக் கிடந்தார்கள். அமைதிகாக்க வந்தவர்களினால் அன்றும் அமைதி சூறையாடப்பட்டது.

முற்றுகையில் அகப்பட்ட மூன்று விடுதலைப்புலிகள், பாய்வதா பதுங்குவதா என யோசித்தார்கள்; பாதுகாப்பிடம் ஒன்றில் தயார் நிலையில் பதுங்கியிருந்தனர்.

மதிய வேளையாகிக் கொண்டிருந்தது:

திடீரென்று, சரமாரியான துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள். அதைத் தொடர்ந்து மக்களின் பீதி நிறைந்த ஓலம். அந்த நேரத்தில்...

"தம்பி..." ஓர் குரல்.

"இந்த நேரத்தில் யார்?"

ஓர் எச்சரிக்கையுடனும் எதிர்பார்ப்புடனும் சிறிது நேரம் காத்திருந்தவர்கள். மெதுவாக எட்டிப் பார்த்தார்கள். யாரையும் காணவில்லை. ஆனால் சிறிய தோர் பானையில் குத்தரிசிப் "புக்கை" மட்டும் இருந்தது.

புரிந்துகொண்டனர். பசிக்களை தீர்ந்தது.

இடைக்கிடை கேட்ட துப்பாக்கி வேட்டுச் சத்தங்களையும், மனித வதையின்போது கேட்ட ஓலங்களையும் தவிர இப்போது வேறு ஓசையில்லை.

பொழுது சாயும் நேரம் மீண்டும்...

"தம்பி..."

அதே குரல்.

"அவங்கள் போட்டாங்கள்"

ஒரு வித ஆவலுடன் எட்டிப் பார்த்தபோது... ஓர் முதியவர்.

"தம்பியவை சாப்பிட்டியளோ...? குறை விளங்காதேயுங்கோ. என்னால் ஏலக்கூடியது இவ்வளவுதான் ராசா.

கண்கள் பனிக்க...

"குறையோ! என்ன ஐயா இது...?"

கைகூப்பி விடை பெற்றபோது மகாகவி பாரதி நினைவுக்கு வந்தான்.

"தழல் வீரத்தில், குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ..."

தள்ளாடும் வயது வரினும் மனிதநேயமும் விடுதலை உணர்வும் மறைந்திடுமா என்ன?



# 29 ஆம் ஆண்டு வீரவணக்கம்

16.08.1994 அன்று யாழ் – காங்கேசன்துறை
கடற்பரப்பில் சிறீலங்கா
கடற்படையினரின் கட்டளைக்
கப்பல் மீதும், டோறா விசைப் படகு
மீதும் நடத்திய கரும்புலித் தாக்குதலில்
வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்





கடற்கரும்புலி
கப்டன் அங்கயற்கண்ணி
[துரைசிங்கம் புஸ்பகலா]

## அங்கயற்கண்ணி அனல் திறந்தாள்
## அலைகடல் ஏறிடும் கடற்புலி ஆனாள்.
## கரும்புலி ஆகியே... கப்பலைத் தகர்த்தாள்
## காவியம் எழுதியெம் கண்களில் நிறைந்தாள்

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்



# அணில் கட்டிய பாலமும் ரணில் கட்டாத பாலமும்?

01.08.2023

ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்தைத் தொடர்ந்து இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பிணைப்பு திட்டங்கள் மேலும் விரிவுபடுத்தப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே பலாலியிலிருந்து மீனம்பாக்கத்திற்கும், காங்கேசன்துறையில் இருந்து தமிழ்நாட்டுக்கும், மன்னாரியிலிருந்து தமிழ்நாட்டுக்கும் என மூன்று திட்டங்கள் யோசிக்கப்பட்டன. இந்தக் கடல் வழிப் பிணைப்பு, வான்வழிப் பிணைப்பு, என்பவற்றோடு, தரை வழியாக ஒரு பாலத்தை கட்டுவது குறித்தும் பரிசீலிக்கப்படுகிறது. இவைதவிர ரணிலின் விஜயத்தின் பின்னணியில் இந்திய வெளியுறவுச் செயலர் தெரிவித்த கருத்துக்களின்படி கடல் வழி, வான்வழி, தரைவழிப் பிணைப்புகளோடு வர்த்தகப் பிணைப்பு, எரிசக்திப் பிணைப்பு, பொருளாதாரப் பிணைப்பு, டிஜிட்டல் பிணைப்பு, மின்சக்திப் பிணைப்பு, எரிபொருள் வினியோக குழாய்வழிப் பிணைப்பு என்றிவ்வாறாக பல்வேறு வகைப்பட்ட பிணைப்புகளைக் குறித்தும் பேசப்பட்டிருக்கிறது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான புவியியல் அருகாமை காரணமாக ஏற்கனவே இருநாட்டு மக்கள் கூட்டங்களுக்கும் இடையே கலாச்சார பிணைப்புகளும் மதம் சார்ந்த பிணைப்புகளும் உண்டு. ஒரு இந்திய ராஜதந்திரி தனிப்பட்ட உரையாடலின் போது சொன்னார், இப்புவியியல் அருகாமையும் அது சார்ந்த பிணைப்பும் தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல சிங்கள மக்களுக்கும் பொருந்தும் என்று. உண்மை. இப்பொழுது மிலிந்த மொரகொட அதைத்தான் புதுப்பிக்க முயற்சிக்கின்றார். அதாவது வட இந்தியாவுக்கும் பௌத்தத்துக்கும் இடையிலான பிணைப்பைக் கையாண்டு அவர் சிங்கள மக்களை பாரதிய ஜனதாவோடு சென்றிமென்ரலாகப் பிணைக்க முயற்சிக்கின்றார்.

ஆனால் ஈழத் தமிழர்களுக்கும் தமிழகத்திற்கும் இடையிலான பிணைப்பு ஆழமானது; பரந்தகன்ற பரிமாணங்களைக் கொண்டது. ஈழத் தமிழர்களையும் தமிழகத்தையும் பிரிப்பது ஒடுங்கிய பாக்கு நீரிணையாகும். பாக்கு நீரினையை அதன் பிரயோக வடிவத்தில் சொன்னால் அது ஒரு தமிழ் நீரிணைதான். அல்லது தமிழ் வாவிதான். அந்த நீரிணையின் இரு புறமும் தமிழர்கள் உண்டு. நவீன அரசியலின் சர்வதேச எல்லைகளால் பிரிக்கப் படுவதற்கு முன்பு, அது ஒரு தமிழ்க் கடலாகத்தான் காணப்பட்டது. ஈழப்போரின் போதும் அது அவ்வாறுதான் காணப்பட்டது. ஈழப்போரின் பலம் அதுதான் என்று மு.திருநாவுக்கரசு கூறுவார். இவ்வாறு ஒடுங்கலான தமிழ் நீரிணையால் பிரிக்கப்பட்ட இரு வேறு தமிழ்ச் சமூகங்களுக்கும் இடையிலான பிணைப்பு எனப்படுவது சிங்கள மக்களுக்கும் வட இந்தியாவுக்கும் இடையிலான பௌத்த பண்பாட்டுப் பிணைப்பை விடவும் ஆழமானது; உடனடியானது; வரலாற்றில் வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு விளைவுகளை ஏற்படுத்தியது.

இப்பிணைப்புக் காரணமாகத்தான் ஈழப்போர் அதன் அடுத்த கட்ட வளர்ச்சியை அடைந்தது. அதுமட்டுமல்ல தமிழகத்தில் மொத்தம் 19 பேர் ஈழத் தமிழர்களுக்காக தீக்குளித்திருக்கிறார்கள். இவர்களில் யாருமே திருகோணமலையில் இருக்கும் எண்ணெய் குதங்களுக்காகவோ அல்லது பலாலி விமான நிலையத்தை திற என்று கூறியோ அல்லது காங்கேசன் துறைக்கும் நாகப்பட்டினத்திற்கும் இடையில் கப்பலை விடு என்று கேட்டோ அல்லது கலாச்சார மண்டபம் ஒன்றை கட்டிக் கொடு என்று கேட்டோ அவர்கள் தீக்குளிக்கவில்லை. தமிழர்களுக்கு ஒன்று என்றதும் அவர்கள் தீக்குளித்தார்கள். ஈழத் தமிழர்கள் அந்த 19 பேரின் சாம்பலையும் கடந்து சென்று அதாவது தமிழகத்தைக் கடந்து சென்று அரசியல் செய்வது கடினம்.

இவ்வாறாக, ஈழத் தமிழர்களுக்கு தமிழகத்தோடு உள்ள ராஜதந்திர நலன்கள் கலக்காத பிணைப்பை, இந்தியா தனது புவிசார் அரசியல் நலன்களுக்காக பயன்படுத்தியது. அதன் விளைவாக ஈழப் போர் வளர்ந்தது. பின்னர் இந்தியா அதே புவிசார் நலன்களின் அடிப்படையில் இந்திய-இலங்கை உடன் படிக்கையைச் செய்தபொழுது விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் கசந்தன. விளைவாக துரோணர்களுக்கும் அர்ச்சுனர்களுக்கும் இடையே மோதல்கள் வெடித்தன. ஈழப் போர் தமிழகத்திற்கும் விரிவடைந்தது.

அது பழைய கதை. புதிய கதை என்னவென்றால், ஈழப்போரின் இறுதிக்கட்டத்தின் பின் தமிழகத்துக்கும் ஈழத் தமிழர்களுக்கும் இடையிலான இடைவெளிகள் முன்னப்பொழுதையும் விட அதிகரித்துள்ளன என்பதுதான். குறிப்பாக திராவிட கட்சிகளுக்கும் ஈழச் செயற்பாட்டாளர்களுக்கும் இடையே இடைவெளிகள் அதிகமாகி வருகின்றன. சமூக வலைத்தளங்களில் நடக்கும் வாதப்பிரதிவாதங்கள் அதைக் காட்டுகின்றன. மிகக்குறிப்பாக “நாம் தமிழர்” கட்சியின் எழுச்சியோடு தமிழகத்தில் உள்ள பெரிய கட்சிகள் ஈழத் தமிழர் விவகாரத்தில் இருந்து சற்று ஒதுங்கி நிற்கும் ஒரு நிலைமை தோன்றியிருக்கிறது. மேலும் பாரதிய ஜனதாவின் தமிழக அமைப்பாளர் தனது உள்நாட்டு அரசியல் தேவைகளுக்காக ஈழப் போராட்டத்தை திராவிட கட்சிகளிடமிருந்து ஹைஜாக் பண்ண முற்படும் ஒரு நிலைமையும் வளர்ந்து வருகிறது. இதில் கடந்த வாரம் ரணில்-மோடி சந்திப்பையொட்டி தமிழக முதல்வர் டெல்லிக்குக் கடிதம் எழுதியது ஒரு மாற்றம்.

அதாவது 2009க்கு முன்னைய நிலைமைகளோடு ஒப்பிடுகையில் இப்பொழுது தமிழகத்துக்கும் ஈழத் தமிழர்களுக்கும் இடையிலான உறவுகள் ஒப்பீட்டளவில் சோதனைக்கு உள்ளாகி வருகின்றன. புவியியல் அருகாமை, இன அருகாமை, மொழி






அருகாமை, பண்பாட்டு அருகாமை, மத அருகாமை போன்ற அருகாமைகள் காரணமாக பிணைக்கப்பட்டிருந்த மக்கள், அரசியல் காரணங்களால் படிப்படியாகத் தூரமாகிச் செல்லும் ஒரு பின்னணியில், பாக்குநீரிணையின் இருபுறங்களிலும் காணப்படும் தமிழ்ச் சமூகங்களுக்கிடையிலான பிணைப்பைப் பலப்படுத்தக்கூடிய சில திட்டங்களை இந்தியா முன்வைத்தது. அத்திட்டங்களை புலம்பெயர்ந்த தமிழர் அமைப்பான பி.ரி.எப். ஊக்குவித்தது. பலாலியில் இருந்து ஒரு வான் வழியையும் காங்கேசன்துறையில் இருந்தும், மன்னாரில் இருந்தும் இரண்டு கடல் வழிகளையுந் திறப்பது மேற்படி பிணைப்புத் திட்டங்களின் நோக்கம். யாழ்ப்பாணத்தில் இந்திய நிதி உதவியோடு கட்டப்பட்டுள்ள கலாச்சார மண்டபமும் அதற்குள் அடங்கும்.

ஆனால் இலங்கை அரசாங்கம் இத்திட்டங்கள் அவற்றின் முழு வளர்ச்சி அடைவதை ஏதோ ஒரு விதத்தில் தடுத்து வருகின்றது. பலாலி விமான நிலையத்தை ஒரு சர்வதேச விமான நிலையமாகத் தரமுயர்த்துவதற்கு அதன் ஓடு பாதையைப் பெரிதாக்க வேண்டும். அதற்கு இலங்கை அரசாங்கம் இன்றுவரை அனுமதிக்கவில்லை. சில “டியூற்றி பிறீ” மதுக்கடைகளைத் திறப்பதன் மூலம் பலாலியை சர்வதேச விமான நிலையமாகத் தரமுயர்த்திவிட முடியுமா? காங்கேசன் துறைக்கும் தமிழகத்துக்கும் இடையிலான கடல் வழி இன்றுவரை திறக்கப்படவில்லை. அது இதோ திறக்கப்படுகிறது என்று எத்தனை தடவைகள் கூறப்பட்டு விட்டது? மன்னாரிலும் அப்படித்தான். ஏன் அதிகம் போவான்? தமிழ் மக்களுக்கு என்று இந்தியா யாழ்ப்பாணத்தில் கட்டிக் கொடுத்த கலாச்சார மண்டபத்தை இன்றுவரை முழுமையாக இயங்க வைக்க முடியவில்லை. அதற்கு வேண்டிய நிர்வாகக் கட்டமைப்பையும் உருவாக்க முடியவில்லை. அக்கட்டடத்தை தமிழ் மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட மாநகர சபையிடம் கொடுப்பதா? அல்லது மத்திய அரசாங்கத்தின் கீழ் வைத்திருப்பதா என்று முடிவெடுக்கப்பட்டு விட்டதா?

இப்படிப்பட்டதோர் பின்னணியில், இப்பொழுது மேலும் புதிய பிணைப்புத் திட்டங்கள் பற்றிச் சிந்திக்கப்படுகிறது. குறிப்பாக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே தரை வழியைத் திறக்கும் நோக்கத்தோடு ஒரு பாலத்தைக் கட்டுவது பற்றிய முன்மொழிவை ரணில் விக்ரமசிங்க டெல்லியில் முன்வைத்திருக்கிறார். அவர் ஏற்கனவே இதுபோன்ற ஒரு முன்மொழிவை 2002-2004வரை பிரதமராக இருந்தபோது இந்தியாவிடம் முன்வைத்திருக்கிறார். இவ்வாறு இலங்கையை இந்தியாவோடு ஒரு பாலத்தின் மூலம் இணைக்கும் திட்டத்திற்கு அவர் தாமாக முன்வந்து வாய்ப்பை வழங்கியதன் மூலம் இந்திய அரசாங்கத்தை ஏதோ ஒரு விதத்தில் வெற்றிகரமாகக் கையாள முயற்சிக்கிறார் என்று எடுத்துக் கொள்ளலாம். சீன விரிவாக்கத்தின் ஒரு பகுதியாக மாறியுள்ள இச்சிறிய தீவை ஒரு பாலத்தின் மூலம் இந்தியாவோடு தொடுத்து விடலாம் என்று அவர் கேட்டுக் கொண்டதன் மூலம் இந்தியாவின் பாதுகாப்புசார் கவலைகளை நீக்க முயற்சிக்கிறார் என்றும் எடுத்துக் கொள்ளலாம். “உங்களோடு எங்களைப் பிணைத்துக் கொள்ளும் ஒரு பாலத்தைக் கட்ட நான் தயார்” என்ற செய்தியை அவர் இந்தியாவுக்கு வழங்கியிருக்கிறார். அதன்மூலம் இனப் பிரச்சினை தொடர்பில் இந்தியாவிலிருந்து வரக்கூடிய அழுத்தங்களை அவர் தவிர்த்திருக்கிறார் என்று எடுத்துக் கொள்ளலாமா?

ஆனால் நிச்சயமாக அப்படி ஒரு பாலத்தை அவர் கட்டப்போவதில்லை. அப்படிக் கட்டுவதற்கு சிங்களபௌத்த கூட்டுஉளவியல் அனுமதிக்காது. அப்பாலம் கட்டப்பட்டால் இச்சிறிய தீவு இந்தியாவின் மாநிலமாகிவிடும் என்ற அச்சம் சிங்கள பௌத்தர்களுக்கு உண்டு. அப்பாலத்தைக் கட்ட முற்பட்டால் 13-ஐ எதிர்ப்பது போல பிக்குகளும் அரசியல்வாதிகளும் எதிர்ப்பார்கள். அப்பொழுது எதிர்க்கட்சிகள் ஏற்றுக்கொள்ளவில்லை, பிக்குகள் எதிர்க்கிறார்கள் என்று சொல்லி ரணில் கையை விரிப்பார். எனவே அதில் அவர் விசுவாசமாக இல்லை. இப்போதைக்கு மோடியை எப்படி வசப்படுத்துவது என்றுதான் அவர் சிந்திக்கிறார்.

தமிழ் நோக்குநிலையில், பாக்கு நீரிணையின் இரு புறங்களிலும் உள்ள இரண்டு தமிழ் சமூகங்களுக்கும் இடையிலான பிணைப்பைப்பற்றி யோசித்துக் கொண்டிருக்க, ரணில் விக்கிரமசிங்க, அரசுக்கும் அரசுக்கும் இடையிலான பிணைப்புத் திட்டங்களுக்குரிய யோசனைகளை முன்வைத்திருக்கிறார். அதாவது, சிங்களத் தீவுக்கு ஒரு பாலம் அமைக்கலாம் என்று தாமாக முன்வைத்து ஒரு முன்மொழிவை கொடுத்திருக்கிறாரா? அண்ணாமலையை லண்டனுக்கு அழைத்து உறவுப் பாலம் அமைப்பதற்கு புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புக்கள் முயற்சிக்க, ரணில், “சிங்களத் தீவினுக்கோர் பாலம்” அமைக்க முன்வந்திருக்கிறாரா?

அல்லது இந்துத்துவாவை ஒரு கொழுக்கியாக பயன்படுத்தி பாரதிய ஜனதா அரசாங்கத்தை நெருங்கிச் செல்லலாம் என்று நம்பும் ஒரு பகுதி ஈழத் தமிழர்கள் அதற்காகக் கடுமையாக உழைத்துக் கொண்டிருக்க, ரணில் விக்கிரமசிங்க புதிய பிணைப்பு திட்டங்களின் மூலம் இந்தியாவை நெருங்கிச் சென்று இனப்பிரச்சினை தொடர்பில் இந்தியா தன் மீது அழுத்தங்களை பிரயோகிக்க முடியாதபடி நிலைமைகளை வெற்றிகரமாகக் கையாள முயற்சிக்கிறாரா?

நன்றி: நிலாந்தன்




International Colloquium to Remember Tamil Victims of Enforced Disappearance and to Observe the
INTERNATIONAL DAY OF THE DISAPPEARED
அனைத்துலக காணாமல்போனோர் நாள்
SEARCHING FOR THE UNKNOWN
Feeling the Piercing Scream of the Disappeared in Sri Lanka
AUG
30
THE UN RANKS
SRI LANKA AS THE COUNTRY
WITH THE SECOND HIGHEST
NUMBER OF DISAPPEARED
IN THE WORLD
சங்கத்தமிழ்

உலக வணிகம் ULAGA VANIKAM

2024



LIST YOUR BUSINESS

ON OUR BUSINESS DIRECTORY



உலக வணிகம் ULAGA VANIKAM

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்யும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

தொடர்புகளுக்கு 437.345.4203

# தமிழீழத் தேசியத் தலைவரின் வரலாற்றுச் சிறப்பு மிக்க சுதுமலைப் பிரகடனம்! 04.08.1987





1987ம் ஆண்டு யூலை மாதத்தில் ‘ஒப்பரேஷன் பூ மாலை’ நடவடிக்கை இந்தியப் படைகளால் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து இலங்கையும் இந்தியாவும் தமக்கிடையில் ஒரு ஒப்பந்தத்தைச் செய்து கொள்ளத் தயாராகியிருந்தன.

தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அப்பொழுது ஈழ மண்ணில் தமது தலைமையகத்தை அமைத்து, ஈழ மண்ணிலேயே நிலை கொண்டிருந்தார். இந்திய இலங்கை ஒப்பந்தம் பற்றி பிரபாகரன் அவர்களுக்கு அறிவித்து அவரது ஒப்புதலையும் எப்படியாவது பெற்றுவிடுவதற்கு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி திட்டம் தீட்டினார். அந்த ஒப்பந்தம் பற்றி திரு.பிரபாகரனுடன் நேரடியாகப் பேசுவதற்காக திரு.பிரபாகரனை புதுடில்லிக்கு வரும்படி அழைப்பு விடுத்தார். இந்தியாவின் உதவிப் பொருட்களை யாழ்ப்பாணம் கொண்டு சென்ற ஹர்தீப் பூரி, கப்டன் குப்தா என்ற இந்திய தூதரக அதிகாரிகள் மூலமாக இந்த அழைப்பு திரு.பிரபாகரனுக்கு விடுக்கப்பட்டிருந்தது இலங்கை அரசிற்கும் இந்தியாவிற்கும் இடையில் ஒரு ஒப்பந்தம் ஏற்படப்போகின்றது என்றும், ‘விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள்’ என்பதை இந்தியா ஏற்றுக்கொண்டுள்ளதாகவும், அந்த ஒப்பந்தம் புலிகளின் தலைவருடன் கலந்தாலோசிக்கப்பட்ட பின்னரே கைச்சாத்திடப்பட உள்ளதாகவும் அந்த இந்திய அதிகாரிகள் புலிகளிடம் தெரிவித்தார்கள்.

“தமிழீழத்தை கைவிடும் எந்தவொரு தீர்வுக்கும் புலிகள் சம்மதிக்கமாட்டார்கள்” என்று புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்கள் உறுதியாகத் தெரிவித்துவிட்டார்.

19.07.1987 இடம்பெற்ற இந்த சந்திப்பைத் தொடர்ந்து, பல தடவைகள் இந்திய அதிகாரிகளுக்கும் புலிகளின் தலைவருக்கும் இடையிலாக பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. தவிர்க்க முடியாமல் இந்திய நேரடித் தலையீடுகள் ஈழப் பிரச்சனையில் ஏற்பட்ட பின்னர், அதனை எப்படியாகிலும் எதிர்கொண்டேயாக வேண்டிய கட்டாயம் புலிகளுக்கு இருந்தது. அதனால் இந்திய பிரதமரின் அழைப்பை ஏற்றுக்கொண்டு இந்தியா பயணமாக புலிகளின் தலைவர் பிரபாகரன் இறுதியில் தீர்மானித்தார்.

இந்தியாவிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நீண்ட கால விரோதத்திற்கு வித்திட்ட ஒரு பயணமாக விமர்சகர்களால் கருதப்பட்ட திரு.பிரபாகரன் அவர்களின் அந்த இந்தியப் பயணம், 1987ம் ஆண்டு யூலை மாதம் 24ம் திகதி இடம் பெற்றது. யாழ்ப்பாணத்தில் உள்ள சுதுமலை அம்மன் கோவிலடி வயல்வெளியில் வந்திறங்கிய இந்திய ஹெலிக்காப்பரில் திரு.பிரபாகரன் புதுடில்லி அழைத்துச்செல்லப்பட்டார். புதுடில்லி அழைத்துச் செல்லப்பட்ட தமிழீழத் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தலைமையிலான குழுவினர், இந்தியாவின் தலைநகர் புதுடில்லியில் உள்ள ‘அஷோகா’ ஹோட்டலில், 518ம் இலக்க விடுதியில் தங்கவைக்கப்பட்டிருந்தார்கள் என்று கூறுவதை விட, ‘சிறை வைக்கப்பட்டிருந்தார்கள்’ என்று கூறுவது பொருத்தமாக இருக்கும்.

தமிழீழத் விடுதலைப்புலிகளின் தலைவர்கள் இருந்த விடுதியின் வெளியே இந்தியாவின் ‘கறுப்புப் பூனைகள்’ பாதுகாப்பு கடமைகளை மேற்கொண்டிருந்தார்கள். அறையில் இருந்த தலைவர்கள் வெளியே நடமாட இந்தக் ‘கறுப்புப் பூனை’ பிரிவைச் சேர்ந்த வீரர்கள் அனுமதி மறுத்திருந்தார்கள். புலிகளின் தலைவர்கள் வெளியில் எவரையும் தொடர்பு கொள்ளவும் அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. விடுதியின் உள்ளே இருந்த தொலையேசியின் இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டிருந்தன. பேச்சுவார்தைக்கு என்று கூறி இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியால் பிரத்தியேகமாக அழைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் தலைவர்கள், ஒருவகையில் சிறைவைக்கப்பட்டது போன்றே நடத்தப்பட்டார்கள்.

இந்திய அரசினதும், பிரதமர் ராஜீவ் காந்தியினதும் நேர்மையில் புலிகளைச் சந்தேகம் கொள்ளவைத்த மற்றுமொரு சம்பவமாக இந்த ‘அஷோக்கா ஹோட்டல்’ சிறைவைப்புச் சம்பவம் அமைந்திருந்தது. இந்தியா மீது புலிகளுக்கு இருந்த கொஞ்சநஞ்ச நம்பிக்கையையும் சிதறடித்த ஒரு சம்பவமாக இந்த சிறைவைப்புச் சம்பவம் அமைந்திருந்தது. இந்தியாவை நம்பி அதன் விருந்தினராக வந்திருந்த புலிகளின் தலைவரை கைதுசெய்து சிறைவைத்தது போன்று நடந்துகொண்ட இந்தியாவின் நம்பிக்கைத் துரோகச் செயலே, இந்தியா பற்றிய ஒரு எதிர் நிலைப்பாட்டை புலிகள் பிற்காலத்தில் எடுப்பதற்கும் காரணமாக அமைந்தது என்று ஆய்வாளர்கள் சுட்டிக் காண்பிக்கின்றார்கள்.

இந்தியாவிற்கு ஒரு பாடம் கற்பிக்கவேண்டும், இந்தியாவின் முகத்தில் கரிபூசவேண்டும் என்று ஒவ்வொரு ஈழத்தமிழனையும் நினைக்கவைத்த ஒரு சம்பவமாக இந்தச் சம்பவத்தைக் பல இராணுவ ஆய்வாளர்கள் அடையாளப்படுத்துகின்றார்கள். தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களை அடைத்து வைத்து, பேச்சுவார்த்தை என்ற பெயரில் ஒப்பந்தத்தை அவர் மீது திணித்த இந்திய அரசின் அடாவடித்தனத்தையும், எதேச்சாதிகாரத்தையும், நம்பிக்கைத் துரோகத்தையும், ஈழத் தமிழர்கள் இன்றுவரை மனதினில் நிறுத்தியபடிதான் இருக்கின்றார்கள்.

24ம் திகதி முதல் ‘அஷோகா’ ஹோட்டலில் அடைத்து வைக்கப்பட்டிருந்த புலிகளின் தலைவர்களை, 28ம் திகதியே இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி சந்தித்தார். புலிகளின் தலைவர்கள் வெளித் தொடர்புகள் எதுவும் இன்றி அடைத்து வைக்கப்பட்டிருந்ததால், ‘புலிகள் ஒப்பந்தத்திற்குச் சம்மதித்துவிட்டார்கள்’ என்று இந்திய தரப்பினரால் வெளி உலகிற்கு கூறப்பட்ட பொய்யையும் மறுப்பதற்கு எவருமே இல்லாமல் போயிருந்தது.

சிறைவைக்கப்பட்டிருந்த நிலையில் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்த ராஜீவ் காந்தி, பலவாறான நெருக்குதல்களையும், மிரட்டல்களையும் பிரயோகித்து புலிகளை அந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளும்படி நிர்ப்பந்தித்தார்.

வெறும் கலந்துரையாடல்களுக்கு என்று கூறி அழைத்துச் செல்லப்பட்டிருந்த தமிழீழ தலைவர்கள் மீது இந்தியா அழுத்தங்களைப் பிரயோகித்ததானது, ஈழப் பிரச்சனையில் இந்தியாவின் மன்னிக்கமுடியாத துரோகத்தை ஈழத் தமிழருக்கு வெளிப்படுத்தியிருந்தது.

இந்தியத் தலைவருடனான சந்திப்பின் போதான அந்தச் சந்தர்ப்பத்தில் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் காணப்பட்ட மனநிலை பற்றி, அப்பொழுது தி.மு.கா.வின் ‘போர் வாள்’ என்று அழைக்கப்பட்டவரும், தற்போதைய ம.தி.மு.கா.வின் தலைவரும்,, ஈழ விடுதலை பற்றி பேசி ‘பொடா’ சட்டத்தின் கீழ் கைதாகி சிறை சென்றவருமான வை. கோபாலசாமி (வைகோ) பின்னர் ஒரு தடவை நினைவு கூர்ந்திருந்தார்.

அஷோகா ஹோட்டலில் பிரபாகரன் அவர்கள் மீதான கடும் பாதுகாப்பு தளர்த்தப்பட்ட பின்னர், திரு. பிரபாகரன் அவர்கள் வை.கோபாலசாமியுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசியிருந்தார். அப்போது திரு.பிரபாகரன் தன்னிடம் தெரிவித்ததை வை.கோபாலசாமி இவ்வாறு நினைவு கூர்ந்திருந்தார்,

அவரது குரல் இப்பொழுதும் எனது நினைவுகளில் பசுமையாக உள்ளது. பிரபாகரன் என்னிடம் கூறினார்: நாங்கள் இந்திய அரசாங்கத்தினாலும், பிரதமர் ராஜீவ் காந்தியினாலும் ஏமாற்றப்பட்டுவிட்டோம். எனது முதுகில் குத்தப்பட்டுவிட்டது. என்னிடம் சயனைட் கழுத்தில் தொங்குகின்றது. தற்கொலை செய்துவிடலாமோ என்றுகூட நினைத்தேன். ஆனால், பல்லாயிரக்கணக்கான எனது சகோதர சகோதரிகளை நினைத்து என்னால் அந்த முடிவை எடுக்கமுடியவில்லை. இவ்வாறு திரு. பிரபாகரன் தெரிவித்ததாக வைகோ நினைவுகூர்ந்திருந்தார்.

இந்திய அரசினதும், பிரதமர் ராஜீவ் காந்தியினதும் இந்த துரோக நடவடிக்கையே, பின்னாளில் இந்தியாவிற்கு எதிராக பல நடவடிக்கைகளை புலிகள் எடுக்கக் காரணமாக அமைந்திருந்தன.

இந்தியத் தலைவருக்கு எதிரான துன்பியல் சம்பவம் இடம் பெறவும், இந்திய அரசின் இந்த நம்பிக்கைத் துரோகச் செயலே பிரதான காரணமாக அமைந்தது என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

இப்படியெல்லாம் இந்தியாவால் நெருக்கடிக்குள்ளான நிலையில் அந்த ஒப்பந்தத்தை ஏற்றதாகக் கூறி 02.08.1987 அன்று யாழ்ப்பாணம் திரும்பிய தமிழீழத் தேசியத் தலைவர் திரு.வே. பிரபாகரன் அவர்கள் 04.08.1987 அன்று சுதுமலை அம்மன் ஆலய முன்றலில் ஒரு உரையை நிகழ்த்தினார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்கள் தமிழீழப் பொதுமக்கள் முன்னிலையில் நிகழ்த்திய முதலாவது உரை என்று அந்த உரை பிரசித்தி பெற்றிருந்தது.

திரு.பிரபாகரன் அவர்களது அந்த உரை சுதுமலைப் பிரகடனம் என்றே வரலாற்றில் பதிவாகியுள்ளது. ‘வட்டுக்கோட்டைத் தீர்மானம்’, ‘திம்புக் கோட்பாடு’, என்பது போன்று சுதுமலையில் புலிகளின் தலைமை ஆற்றிய உரை ‘சுதுமலைப் பிரகடனம்’ என்றே அழைக்கப்படுகின்றது. இந்தியாவால் ஏமாற்றப்பட்ட நிலையில், இந்தியாவால் முதுகில் குத்தப்பட்ட நிலையில், இந்தியாவால் புலிகள் நிராயுதபாணிகளாக்கப்படுவது உறுதிப்படுத்



தப்பட்ட நிலையில், விடுதலைப் புலிகளின் ஆயுதக்களைவுத் திகதிகள் தீர்மானிக்கப்பட்ட நிலையில், இன்னும் குறிப்பாகக் கூறுவதானால் இந்தியப்படைகளுக்கு எதிராகப் போராடுவது என்று புலிகள் தீர்மானம் எடுத்துவிட்ட பின்னர்தான், புலிகளின் தலைவரது சுதுமலைப் பிரகடனம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த பிரகடனம்:

எனது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய தமிழீழ மக்களே!

இன்று எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு மாபெரும் திருப்பம் ஏற்பட்டிருக்கிறது. திடீரென எமக்கு அதிர்ச்சியூட்டுவது போல, எமது சக்திக்கு அப்பாற்பட்டதுபோல இந்தத் திருப்பம் ஏற்பட்டு இருக்கிறது. இதன் விளைவுகள் நமக்குச் சாதகமாக அமையுமா என்பதை நாம் பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

திடீரென மிகவும் அவசரமாக, எமது மக்களையோ, எமது மக்களின் பிரதிநிதியாகிய எம்மையோ கலந்தாலோசிக்காமல் இந்தியாவும் - இலங்கையும் செய்துகொண்ட ஒப்பந்தம் இப்போது அவசர அவசரமாக அமலாக்கப்பட்டு வருகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். நான் டெல்லி செல்லும்வரை இந்த ஒப்பந்தம் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது.

பாரதப் பிரதமர் என்னைச் சந்திக்க விரும்புவதாகச் சொல்லி டெல்லிக்கு அவசரமாக அழைத்துச் சென்றார்கள். அங்கு சென்றதும் இந்த ஒப்பந்தம் எமக்குக் காண்பிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் பல சிக்கல்கள் இருந்தன... பல கேள்விக்குறிகள் இருந்தன.

இந்த ஒப்பந்தத்தால் எமது மக்களின் பிரச்னைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு ஏற்படுமா என்பதைப் பற்றி எமக்குச் சந்தேகம் எழுந்தது. ஆகவே, இந்த ஒப்பந்தத்தை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை இந்திய அரசுக்குத் தெள்ளத்தெளிவாக விளக்கினோம். ஆனால், நாம் ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக்கொள்ளாமல் போனாலும் இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றியே தீருவோம் என இந்திய அரசு கங்கணம் கட்டி நின்றது.

இந்திய அரசின் நிலைப்பாடு குறித்து நாம் ஆச்சர்யப்படவில்லை. இந்த ஒப்பந்தம் தமிழர் பிரச்னையை மட்டும் தொட்டு நிற்கவில்லை. இது, பிரதானமாக இந்திய - இலங்கை உறவு பற்றியது. இந்திய வல்லாதிக்க வியூகத்தின்கீழ் இலங்கையைக் கட்டுப்படுத்தும் விதிகளும் இதில் அடங்கியிருக்கின்றன. இலங்கையில் அந்நிய நாசகாரச் சக்திகள் காலூன்றாமல் தடுக்கவும் இது வழிவகுக்கிறது.

ஆகவேதான், இந்திய அரசு அதிக அக்கறை காட்டியது. ஆனால், அதேசமயம் ஈழத்தமிழரின் அரசியல் தலைவிதியை நிர்ணயிப்பதாகவும் இந்த ஒப்பந்தம் அமைகிறது. ஆகவேதான், எமது மக்களைக் கலந்தாலோசிக்காது எமது கருத்துகளைக் கேளாது இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டதை நாம் கடுமையாக எதிர்த்தோம். ஆனால், நாம் எதிர்த்ததில் அர்த்தமில்லை.

எமது அரசியல் தலைவிதியை எமது வல்லமைக்கு அப்பாற்பட்ட ஒரு மாபெரும் வல்லரசு நிச்சயிக்க முடிவு செய்திருக்கும்போது நாம் என்ன செய்வது?

இந்த ஒப்பந்தம் எமது இயக்கத்தைப் பாதிக்கிறது... எமது அரசியல் லட்சியத்தைப் பாதிக்கிறது... எமது போராட்ட வடிவத்தைப்... எமது ஆயுதப் போராட்டத்துக்கு ஆப்பு வைப்பதாகவும் அமைகிறது. பதினைந்து வருடங்களாக ரத்தம் சிந்தி, தியாகம் புரிந்து, சாதனை ஈட்டி, எத்தனையோ உயிர்பலி கொடுத்துக் கட்டி எழுதப்பட்ட ஒரு போராட்ட வடிவம் ஒருசில தினங்களில் கலைக்கப்படுவதென்றால் அதை நாம் ஜீரணிக்க முடியாமல் இருக்கிறது.

திடீரெனக் கால அவகாசமின்றி எமது போராளிகளின் ஒப்புதலின்றி, எமது மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் இன்றி இந்த ஒப்பந்தம் எம்மை நிராயுதபாணியாக்குகிறது. ஆகவே, நாம் ஆயுதங்களை ஒப்படைக்க மறுத்தோம். இந்தச் சூழ்நிலையில் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி என்னை அழைத்துப் பேசினார். அவரிடம், எமது பிரச்னைகளை மனம்திறந்து பேசினேன்.

சிங்கள் இனவாத அரசின்மீது எமக்குத் துளிகூட நம்பிக்கை இல்லை என்பதயும், இந்த ஒப்பந்தத்தை அவர்கள் நிறைவேற்றப் போவதில்லை என்பதையும் இந்தியப் பிரதமரிடம் எடுத்துரைத்தேன். எமது மக்களின் பாதுகாப்புப் பிரச்னை பற்றியும் அதற்கான உத்தரவாதங்கள் பற்றியும் பேசினேன். பாரதப் பிரதமர் எமக்குச் சில வாக்குறுதிகள் அளித்தார். எமது மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளித்தார்.

பாரதப் பிரதமரின் நேர்மையில் எமக்கு நம்பிக்கை இருக்கிறது. அவரது உறுதிமொழிகளில் நம்பிக்கை இருக்கிறது. சிங்கள இனவாத அரசு மீண்டும் தமிழர் இன அழிப்பு நடவடிக்கையில்



இறங்க, இந்தியா அனுமதிக்காது என நாம் நம்புகிறோம். இந்த நம்பிக்கையில்தான் நாம் இந்தியச் சமாதானப் படையிடம் ஆயுதங்களை ஒப்படைக்க முடிவு செய்கிறோம்.

நாம் எமது மக்களின் பாதுகாப்புக்காக எத்தனை அளப்பரிய தியாகங்களைப் புரிந்தோம் என்பதை நான் இங்கு விளக்கிக் கூறத் தேவையில்லை. எமது லட்சியப் பற்றும் தியாக உணர்வும் எத்தன்மை வாய்ந்தது என்பதை எமது மக்களாகிய நீங்கள் நன்கு அறிவீர்கள். உங்களது பாதுகாப்புக்காக, உங்களது விடுதலைக்காக, உங்களது விடிவுக்காக நாங்கள் ஏந்திய ஆயுதங்களை இந்திய அரசிடம் ஒப்படைக்கிறோம்.

நாம் இந்த ஆயுதங்களை ஒப்படைக்கும் கணத்திலிருந்து எமது மக்களாகிய உங்களின் பாதுகாப்புப் பொறுப்பையும் இந்தியாவிடம் ஒப்படைக்கிறோம். ஈழத் தமிழரின் ஒரே பாதுகாப்பு சாதனமாக இருந்துவந்த இந்த ஆயுதங்களை இந்திய அரசு எம்மிடம் பெற்றுக்கொள்வதிலிருந்து மக்களின் பாதுகாப்பு என்ற பெரும் பொறுப்பையும் ஏற்றுக்கொள்கிறது. ஆயுதக் கையளிப்பு என்பது, இந்தப் பொறுப்பு மாற்றத்தைக் குறிக்கிறது.

நாம் ஆயுதங்களைக் கையளிக்காதுப் போனால் இந்திய ராணுவத்துடன் மோதும் துர்பாக்ய சூழ்நிலை ஏற்படும். இதை நாம் விரும்பவில்லை. இந்தியாவை நாம் நேசிக்கிறோம். இந்திய வீரருக்கு எதிராக நாம் ஆயுதங்கள் நீட்டத் தயாராக இல்லை. எமது எதிரியிடம் இருந்து எம்மைப் பாதுகாக்கும் பொறுப்பை இந்திய ராணுவ வீரர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். நாம் ஆயுதங்களை அவர்களிடம் கையளிப்பதிலிருந்து ஈழத் தமிழன் ஒவ்வொருவருடைய உயிருக்கும், பாதுகாப்புக்கும் இந்திய அரசுதான் பொறுப்பாக இருக்க வேண்டும் என்பதை நான் இங்கு அடித்துக் கூற விரும்புகிறேன். இந்தியாவின் இந்த முயற்சிக்கு நாம் ஒத்துழைப்பதைத் தவிர, எமக்கு வேறு வழியில்லை. இந்தச் சந்தர்ப்பத்தை நாம் அவர்களுக்கு வழங்குவோம்.

ஆனால், இந்த ஒப்பந்தத்தால் தமிழரின் பிரச்னைக்குத் தீர்வு ஏற்படுமென நான் நினைக்கவில்லை. சிங்கள் இனவாத பூதம் இந்த ஒப்பந்தத்தை விழுங்கிவிடும் காலம் வெகுதூரத்தில் இல்லை. தமிழீழத் தனியரசே, தமிழீழ மக்களின் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வை அளிக்கும் என்பதில் எனக்கு அசையாத நம்பிக்கை உண்டு.

தமிழீழ லட்சியத்துக்காகவே நான் தொடர்ந்து போராடுவேன் என்பதையும் இங்கு திட்டவட்டமாக உங்களுக்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். போராட்ட வடிவங்கள் மாறலாம். ஆனால், போராட்ட லட்சியம் மாறப்போவதில்லை. எமது லட்சியம் வெற்றி பெறுவதானால், எமது மக்களாகிய உங்களின் ஏகோபித்த ஆதரவு என்றும் எமக்கு இருக்க வேண்டும்.

தமிழீழ மக்களின் நலன் கருதி இடைக்கால அரசில் அல்லது தேர்தலில் போட்டியிட வேண்டிய சூழ்நிலை எமது ஏற்படலாம். ஆனால், நான் எந்தக் காலகட்டத்திலும் தேர்தலில் பங்குபெறப் போவதில்லை. முதலமைச்சர் பதவியையும் ஏற்கப் போவதில்லை. இதை நான் மிகவும் உறுதியாகச் சொல்ல விரும்புகிறேன்.

# 'தராக்கி' ஈழத் தமிழ் ஊடக முன்னோடி நூல் வெளியீடு:
# தமிழர் போராட்டத்தை தெற்கிற்கு புரிய வைத்தவர் சிவராம்!

– நவீனன் –

யூலை 29, 2023

தமிழர்களின் போராட்டம் ஒரு நியாயமற்ற, காட்டுமிராண்டித் தனமான பயங்கரவாதம் எனச் சிங்கள மற்றும் ஆங்கில ஊடகங்கள் சிங்கள மக்களுக்குப் போதித்துக் கொண்டிருந்த காலகட்டத்தில் தமிழர்களின் போராட்ட நியாயத்தையும், அவர்களுக்கு உரிமைகள் வழுங்கப்படுவதால் மாத்திரமே இலங்கைத் தீவில் அமைதி நிலவும் என்ற யதார்த்தத்தையும் தர்க்க நியாயங்களோடு சிங்களவர்களுக்கும் புரியக் கூடியவாறு சிவராம் ஆங்கிலத்தில விளக்கினார். சிவராமுடைய எழுத்தின் போக்கை மட்டுமன்றி அன்றைய காலகட்டத்தில் பணியாற்றிய பெரும்பாலான தமிழ் எழுத்தாளர்களின் போக்கையும் மாற்றியமைத்தது.

## சிவராமின் ஆங்கிலப் புலமை:

பத்திரிகைகளில் அவர் எழுதிய கட்டுரைகளுக்கு அப்பால் சிங்களத் தேசியம் பேசிய ஊடகவியலாளர்களுடனும் அவர் திரை மறைவில் தர்க்கிக்க வேண்டியிருந்தது. எவருமே துணிந்து செய்ய முன்வராத ஒரு காரியத்தை கொழும்பில் இருந்து கொண்டே செய்ய முன்வந்த சிவராமின் துணிச்சல் பாராட்டப்பட வேண்டியது.

சிவராம் பத்திரிகைகளில் முன்வைத்த கருத்துக்களுக்காக நேரில் கேள்வி எழுப்பப்பட்ட போதுகளில் அவற்றுக்கு அவர் ஆணித்தரமாகப் பதில் கூறவேண்டி ஏற்பட்டது.

தனது கருத்துக்களுக்காக சிங்கள ஊடகவியலாளர்களுடன் மோதவேண்டிய சூழல் உருவான போதிலும் அவர்களுடனான தொழில்முறை உறவை வளர்த்துக் கொள்ள சிவராம் தவறவில்லை.

அது மட்டுமன்றி சிங்களப் பேரினவாதத்தை எதிர்த்து நிற்கும் மாற்றின ஊடகவியலாளர்களுடனும் பல்வேறு தளங்களில் அவர் கரங் கோர்த்துக் கொண்டார்.

மறுபுறம், தமிழ் ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கிய பல பிரச்சினைகள் சிங்கள ஊடக அமைப்புக்களால் கண்டு கொள்ளாமல் விடப்பட்டபோது 'இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம்' என்ற அமைப்பை உருவாக்குவதில் முன்னோடியாக நின்றும் செயற்பட்டார். பின்னர் 28 ஏப்பரல் 2005 அன்று சிவராம் கடத்தப்பட்டு கொல்லப்பட்டார்.

## ஈழத் தமிழ் ஊடக முன்னோடி நூல்:

ஈழத் தமிழ் ஊடக ஆளுமைகளின் முன்னோடியும், தமிழர் போராட்டத்தை தெற்கிற்கு புரிய முனைந்தவரே தராக்கி சிவராம். 2005இல் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் தராக்கி டி.சிவராமை நினைவுகூரும் பல ஊடகவியலாளர்கள் மற்றும் கட்டுரையாளர்களின் கவிதைப் படைப்புகள் அடங்கிய நூல் வெளியீடு கடந்த ஜூலை 15 மாலை மட்டக்களப்பு YMCA நிலையத்தில் வெளியானது.









சிவராம் இலங்கையில் நன்கு அறியப்பட்ட, அரசியல் ஊடகவியலாளர் மற்றும் தமிழ்நெட் மூத்த ஆசிரியராக இருந்தார். 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்திற்கு அருகில் வெள்ளை வேனில் வந்த நான்கு நபர்களால் அவர் கடத்தப்பட்டார். மறுநாள் அவரது உடல் ஹிம்புலாலாவில் கண்டெடுக்கப்பட்டது. அவரது மரணம் தாக்கப்பட்டு தலையில் சுடப்பட்டதன் விளைவாக ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

தமிழின உரிமைப் போராட்டத்தில் பல ஊடகவியலாளர்கள் பலி கொள்ளப்பட்டுள்ள போதிலும், அவர்களுக்கு முன்னோடியாக, கவர்ந்திழுக்கும் சக்தியாக அமைந்தவர் சிவராம். ஈழத் தமிழின உரிமைப் போராட்ட வரலாற்றில் ஊடகப் பரப்பில் தவிர்க்க முடியாது நினைவுக்கு வருகின்ற ஒருவர் என்றால் 'தராக்கி" என்ற புனைபெயர் கொண்ட டி. சிவராம்.

அவரது இடைவெளி ஊடகப் பரப்பில் மாத்திரமன்றி, இன உரிமைப் போராட்டத் தளத்தில் கூட பாரியதொரு வெற்றிடத்தை விட்டு வைத்திருக்கின்றமையை மறுப்பதற்கில்லை. அவர் நினைவாக 'தராக்கி : ஈழத்தமிழ் ஊடக முன்னோடி' எனும் கட்டுரை தொகுப்பு நூலின் வெளியீட்டு நிகழ்வு கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் (மட்டக்களப்பு) ஏற்பாட்டில் அதன் தலைவர் எல்.தேவஅதிரன் தலைமையில் மட்டக்களப்பு வை.எம்.சி.ஏ மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நூல் பிரதம அதிதியான தராக்கியின் மனைவி பவானி சிவராமிடம் வழுங்கி வைக்கப்பட்டதுடன், வெளியீட்டு விழாவை கிழக்கு மத்திய சமூகம் ஏற்பாடு செய்திருந்தது. இந்நிகழ்வில் மறைந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் "தராக்கி" சிவராமின் உருவப்படத்துக்கு அவரது மனைவி பவானி சிவராமினால் மலர் மாலை அணிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தீபச்சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனை தொடர்ந்து நூலின் முதல் பிரதியை சிரேஷ்ட ஊடகவியலாளர் சிவராமின் மனைவி பவானி சிவராமுக்கு சிரேஷ்ட ஊடகவியலாளர் இ.பாக்கியராசாவால் வழங்கிவைக்கப்பட்டது.

இதன்போது பிரபல சிங்கள மொழி பாடகர் ஜெயதிலக பண்டாரவால் சிரேஷ்ட ஊடகவியலாளர் சிவராம் பற்றி எழுப்பப்பட்ட







தமிழ் மற்றும் சிங்கள மொழியிலான பாடல்களை அவர் பாடினார். இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேந்திரன், ஞா. சிறிநேசன், துரைராஜசிங்கம், சிரேஷ்ட ஊடகவியலாளர் சிவராமின் குடும்ப உறவினர்கள், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ், ஜனநாயக போராளிகள் கட்சியின் உப தலைவர் நா.நகுலேஸ், மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக சங்கத்தினர், அரச திணைக்கள உத்தியோகத்தர்கள், மதத் தலைவர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள், இலக்கியவாதிகள், ஆய்வாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## சிவராமின் ஊடகப் பணி:

இதன்போது மறைந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் சிவராமின் ஊடகப் பணி தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன், தொழில்சார் இணைய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் பெடி கமகே, ஆய்வாளரும் ஊடகவியலாளருமான சரவணன் உள்ளிட்டோர் உரையாற்றினர்.

ஈழத் தமிழர்களின் இன விடுதலைப் போராட்டத்தின் நியாயத்தை சிங்கள மக்களுக்கு தர்க்க நியாயங்களுடன் புரிய வைத்ததில் ஊடக முன்னோடி தராக்கியின் பங்கு அளப்பரியது. அவர் நினைவாக வெளிவந்த 'தராக்கி: ஈழத்தமிழ் ஊடக முன்னோடி' கட்டுரை தொகுப்பு நூலில் சிவராம் - பன்முக ஆளுமை - பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு,சிவராம்: நினைவெழுதல் - பேராசிரியர் உ.சேரன், ஆய்வறிவுப் புலமை மிகுந்த ஊடகவியலாளன் - பேராசிரியர் சி.மௌனகுரு, சிவராமும், மட்டக்களப்பு வாசகர் வட்டமும் - ப.மகாதேவா, பத்திரிகையாளர் டி.சிவராம் - ஒரு சிறு நினைவுக் குறிப்பு - எஸ்.கே. விக்னேஸ்வரன், பூகோள அரசியலில் ஈழத் தமிழர் நலன்கள் : சிவராமின் புரிதலும் வெளிப்படுத்தலும் - பேராசிரியர் சி. ரகுராம், தராக்கியின் ஊடகவெளியும் தமிழர் சமூகவெளியும் - தெ.மதுசூதனன், ஊடகப் போராளியான உண்மைப் போராளி - வீ.தேவராஜ், எனது பார்வையில் சிவராம் - நிலாந்தன், இலங்கையில் வாழ்வதே அர்த்தமுள்ள வாழ்வு - இரவி அருணாசலம், இங்கே சாகாமல் நான் வேறு எங்கே சாவேன்? - வீரகத்தி தனபாலசிங்கம், சிவராம் - ஒரு நினைவுக் குறிப்பு - கலாநிதி சர்வேந்திரா தர்மலிங்கம், சிவராமின் படுகொலையும் தண்டனையிலிருந்து தப்பித்தலும் - பாரதி இராஜநாயகம் "துரோகம் - தியாகம்" இருநிலை அடையாளத்தின் வரலாறு "தராக்கி சிவராம்" - சிவராசா கருணாகரன் ஆகிய கட்டுரைகள் அடங்குகின்றன.

## சிங்களத்தின் குகைக்குள் இருந்த வண்ணம் :

சிங்களத்தின் குகைக்குள் இருந்த வண்ணமே தன் ஊடகப் பணியைக் கொழும்பில் இருந்து கொண்டே சிங்களவர்களுக்கும் புரியும் மொழியிலேயே செய்ய முடிந்தமை சிவராமின் சாமர்த்தியம் எனலாம். சிவராம் நினைவாக வெளிவந்த இந்நூலில் சிவராமின் குரல்... - சிறிதரன் சோமீதரன், மறுவாசிப்பில் சிவராம்: ஒரு பிராரம்ப வரைவு - ச.அமரதாஸ், சிவராமின் தீர்க்க திரிசனம் - செயற்படுத்தத் தவறிய தமிழ்த் தேசியக் கட்சிகள் - அ.நிக்ஸன், சமூகங்களைத் தட்டி எழுப்பிய ஊடக சிற்பி சிவராம் - க. குணராசா, கொஞ்ச நேரம் கொஞ்ச நேரம்... - பூபாலரத்தினம் சீவகன், சிவராமிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய அரசியல் பல உண்டு - இரா துரைரத்தினம், தராக்கி சிவராமின் இற்றைத் தேவை - உலகத் தமிழர் ஆவண மையம், மறக்க முடியாத மாமனிதன் - அ.சுகுமாரன், சிவராம் ஒரு நிதர்சனம் - கலாநிதி எம்.பி.ரவிச்சந்திரா, சிவராம்: மானுட விடுதலையின் மகத்துவம் மிக்க போர் வாள் - அகதித் தமிழன், சிவராம் - தமிழ் ஊடகத் துறையினதும் அரசியலினதும் வரலாற்று நாயகன் - பி.மாணிக்கவாசகம், மாமனிதர் சிவராம் பலமும், பலவீனமும்! - பா.அரியநேத்திரன், ஊடகத் துறையில் ஒரு ஜாம்பவான் சிவராம் - என்.கே.துரைசிங்கம், சிவராம் எனும் சிகரம் - கலாபூஷணம் ஏ.எல்.எம்.சலீம், தென் தமிழீழம் தந்த தவப்புதல்வன்! - வி.ரி.சகாதேவராஜா, பேனாவை ஆயுதமாக்கிய ஊடகப் போராளி - எஸ்.கே.ராஜென், ஊடக முன்னோடிப் போராளி மாமனிதர் சிவராம் - பரா பிரபா, சிவராம் ஓர் ஊடக ஆளுமை - ஞா.குகநாதன், அடிநுனியறியாப் பரம்பொருளாய் ஆனாய் நீயே! - இரா தயாபரன்,?தமிழ் ஊடகத் துறையின் தந்தை - வே.தவச்செல்வம் , சிவராமண்ணையும் நானும் - மகாமுனி சுப்பிரமணியம், இருமுனைப் போராளி - சி.பிரபாகரன் ,?என்னுடன் தராக்கி... - பிரசன்னா இந்திரகுமார், Whom did I actually know? Sivaram or Taraki? - Kusal Perera, Sivaram, impunity, memorialization and dissent in mainstream media - Ruki Fernando, 'Siva' reloads with words - Johan Mikaelsson, In memory of our loving appa - Vaishnavi, Vaitheki & Seralathan ஆகியோரின் கட்டுரைகள் அடங்குகின்றன.

சிவராமின் ஆங்கிலப் புலமையும், தர்க்க நியாயங்களை அவர் முன்வைக்கும் விதமும் பேரினவாதிகளால் அவரது எழுத்துக்குப் பதிலளிக்க முடியாத நிலையைத் தோற்றுவித்ததும் உண்மையே. எவருமே துணிந்து செய்ய முன்வராத ஒரு காரியத்தை கொழும்பில் இருந்து கொண்டே செய்ய முன்வந்த சிவராமின் துணிச்சல் பாராட்டப்பட வேண்டியது. அவரின் இழப்பு தமிழ் ஊடகத்துறையில் பாரிய வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளமை உண்மையே.

# நிக்கரகுவா புரட்சியின் பின் நிமிர்ந்ததா? விடுதலையின் பின் சரிந்து வீழ்ந்ததா?

02.08.2023

1979 ஆம் ஆண்டில் சன்டினிஸ்ட் படைகள் (THE SANDINISTA REVOLUTION DAY 1979 July 19) ஆட்சியைக் கைப்பற்றி 44 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளதைக் கொண்டாடும் நிகழ்வுகளால் நிக்கரகுவா தேசம் மீண்டும் விழாக் கோலம் கொண்டுள்ளது.







## ஸ்பானிய ஆதிக்கம் :

கியூபப் புரட்சிக்குப் பிறகு, இலத்தீன் அமெரிக்காவில் இன்னொரு புரட்சிக்குச் சாத்தியமே இல்லை எனச் சொல்லப்பட்ட நிலையில், இந்த நிக்கரகுவா புரட்சி சாத்தியமானது. தனக்கெனத் தனித் தன்மைகளைக் கொண்ட இப்புரட்சி தற்போது பாரியளவில் நினைவுகூரப்படுகிறது.

மத்திய அமெரிக்காவின் மிகப் பெரிய நாடாக நிக்கரகுவா, வடக்கே ஹெண்டுரஸ்ஸையும் தெற்கே கோஸ்டரீகாவையும் மேற்கே பசுபிக் கடலையும் கிழக்கே கரீபியக் கடலையும் எல்லைகளாகக் கொண்டது. ஆறு மில்லியன் மக்கள் தொகையையுடைய நாடு, முதலில் ஸ்பானியர்களின் காலனியாதிக்கத்துக்கு உட்பட்டது.

20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அமெரிக்காவின் நேரடியான கட்டுப்பாட்டுக்குள் வந்த நிக்கரகுவா, 1979இல் புரட்சியினூடாகச் சர்வாதிகாரி துரத்தப்படும் வரை, அமெரிக்காவின் கைப்பாவை அரசாகவே இருந்தது.

இலத்தீன் அமெரிக்காவில், மற்றய மத்திய அமெரிக்க நாடுகளைப் போலவும் நிக்கரகுவாவும் 1523-ல் ஸ்பானிய தளபதியான கோட்டஸ் என்ல் கைப்பற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட காலனியாதிக்கப் போட்டிகளால் நிக்கரகுவாவின் தலைவிதியை அந்நியர் நிர்ணயிப்பதற்கான அடித்தளம் அமைக்கப்பட்டது.

சுமார் மூன்று நூற்றாண்டுகள் ஸ்பானிய காலனியாதிக்கத்தின் கீழ் இருந்து பின்னர் 1821-ல் நிக்கரகுவா விடுதலை அடைந்தது. ஸ்பானியர் காலத்தில் நிலையூன்றிய நிலபிரபுத்துவமும் சமூக அடிமை முறையும் சுதந்திரத்தின் பின்னரும் வளர்ந்து சென்றது. அரசியல் ரீதியாக லிபரல், கன்சவேட்டிவ் என நாடு பிளவுண்டிருந்தது. இதனால் தொடர்நது பல காலமாக நாட்டின் ஆட்சி பாரிய அளவில் சீர்குலைவுக்குள்ளாகி இருந்தது.

## பரம்பரை ஆட்சியில் நிக்கரகுவா:

20ஆம் நூற்றாண்டின் தொடக்கம் தொட்டு, பல இலத்தீன் அமெரிக்க நாடுகளைக் குடும்ப ஆட்சிகள் தலைமுறை தலைமுறையாக ஆண்டன. மிக நீண்ட காலமாக நிக்கரகுவா, ஒரு பரம்பரை ஆட்சியில் சிக்கித் தவித்தது.

அதைப்போலவே, நிக்கரகுவாவில் சோமோசா பரம்பரையின் ஆட்சி (Somoza Family Dictatorship) 1936 முதல் இருந்தது.

இன்றைக்குச் சரியாக 44 ஆண்டுகளுக்கு முன்னர், மத்திய அமெரிக்காவின் சின்னஞ்சிறிய நாடுகளில் ஒன்றான நிக்கரகுவாவில் நீண்டகாலப் புரட்சியின் விளைவால், சர்வாதிகார




ஆட்சி ஒழிக்கப்பட்டது.

அமெரிக்க ஆதரவுடன் நிகரகுவாவில் சர்வாதிகார ஆட்சியை நடத்தி வந்த அனஸ்டேசியோ சோமோசாவின் ஆட்சிக்கு எதிராக சன்டினிஸ்ட் தேசிய விடுதலை முன்னணி வீரஞ்செறிந்த போராட்டத்தை நடத்தியது. மக்களின் ஆதரவுடன் அந்த

தலைநகரான மனாகுவாவில் சர்வதிகாரி சோமோசா மக்களின் சொத்துக்களை சூறையாடினான். இதன் பின் மக்கள் எழுச்சியால் FSLN - சன்டினிஸ்ட் தோற்றம் பெற்றது.

1977 செப்டம்பரில் வாஷிங்டனின் கோரிக்கைக்கு இணங்க அவசர நிலை நீடிக்கப்பட்டதுடன் பின் சன்டினிஸ்ட் தன்

**நிக்கரகுவா 44 ஆண்டுகள் புரட்சியின் மூலம் விடுதலை பெற்றுள்ளதை தற்போது கொண்டாடுகிறது. கியூபப் புரட்சிக்குப் பிறகு, இலத்தீன் அமெரிக்காவில் இன்னொரு புரட்சிக்குச் சாத்தியமே இல்லை எனச்சொல்லப்பட்ட நிலையில், இந்த நிக்கரகுவா புரட்சி சாத்தியமானது. தனக்கெனத் தனித்தன்மைகளைக் கொண்ட இப்புரட்சி தற்போது பாரியளவில் நினைவு கூரப்படுகிறது**




ஆட்சியைத் தூக்கி எறியவும் செய்தது.

## சர்வதிகாரி சோமோசா:

1970 களில் நிக்கரகுவாவில் பொருளாதார முரண்பாடுகள் மோசமடைந்தன. 1970-ல் 1.7 வீதமாக இருந்த பணவீக்கம் 1977-ல் 11 வீதமாக அதிகரித்தது. கடுமையான வேலைநிறுத்தம் நிலவியதால் நாட்டில் உற்பத்தி பாதிக்கப்பட்டது. தேசியக் கடன் என்றுமில்லாத உச்சக்கட்டத்தை அடைந்தது. 1972-ல்

இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்தது. சன்டினிஸ்ட் தேசிப் படைகளின் மீதான தாக்குதல் இராணுவ ரீதியான பாதிப்பை ஏற்படுத்தியது. அடக்குமுறை எந்தப் பிரச்சினையையும் தீர்க்கவில்லை என்பதன் மூலம் ஆட்சிக்கெதிரான வெகுஜன எதிர்ப்பைக் கிளப்பிவிட்டது.

### அமெரிக்க ஆக்கிரமிப்பு தலையீடு :

1979 ஜூன் 4-ல் சன்டினிஸ்ட் பொது வேலைநிறுத்தத்திற்கான






அழைப்பை விடுத்தது. அடுத்தநாள் நாடு முற்றாகச் செயலிழந்தது. ஒன்றின் பின் ஒன்றாக முக்கிய நகரங்கள் கிளர்ச்சிக்கான கட்டளையைப் பெற்றன. ஜூன் 10-ம் திகதி மனாகுவா வாசிகளைம் சன்டினிஸ்ட் குறிப்பிட்ட திகதிக்கு முன்னதாகவே தம் மிச்சையாகக் கிளர்ந்தெழுந்தனர். அரச படைகள் தலைநகரை நோக்கிப் பின்வாங்க நேரிட்டது. ஜூன் 14-ல் சாஸ்யோசிலுள்ள கோஸ்டாரிக்கா என்ற நகரில் ஒரு அரசாங்கம் அமைக்கப்பட்டது. இவ்வரசாங்கத்தின் பெரும்பான்மைப் பலத்தை சன்டினிஸ்ட் FSLN பெற்றது. சமாதானப் படையை அனுப்பும் சைரஸ் வான்ஸ் (அமெரிக்க இராஜாங்க அமைச்சர்)ன் திட்டமும் பின்னர் கைவிடப்பட்டது. அமெரிக்காவின் எவ்வித தலையீடும் இருக்கக் கூடாது என அறிவிக்கப்பட்டது.

ஜூன் 16-ம் திகதி நாட்டின் முக்கிய நகரங்கள் கட்டுப் பாட்டின் கீழ்வந்தன. 19-ம் திகதி சர்வதிகாரி அனஸ்டாசியோ சோமோசா




டிபேயல் நாட்டை விட்டு ஓடினான். தேசியப்படையானது சோமோசா தப்பியோடியதும் சீர்குலையலாயிற்று. பல போராட்டங்களின் நெருக்கடிகளிலும் உடையாத இப்படை அதன் தலைவனின் வீழ்ச்சியோடு உடையத் தொடங்கியது. FSLN உடனடியாக இறுதித் தாக்குதலை நடத்தவதற்கான அழைப்பை விடுத்தது.

யூன் 19-ம் திகதி சன்டினிஸ்ட் படைகள் வெற்றிகரமாக மனாகுவா நகருள் பிரவேசித்தன. தேசியப் படை சிதறுண்டது. 7,000 வீரர் கைதிகளாக்கப்பட்டனர். மற்றவர்கள் ஹொன்ரோசிற்குத் தப்பியோட முயற்சித்தனர். மக்களின் பழிவாங்கலுக்குப் பயந்த எல்லா அதிகாரிகளும் மனாகுவாவை விட்டு வெளியேறினர்.

சன்டினிஸ்ட் முழுமையாக நாட்டை வெற்றியீட்டிக்கொண்டது. ஆனால் 50,000 உயிர்கள் பலியானதோடு (சனத்தொகையில் 2 வீதம்) அளப்பரிய இழப்புகளும் ஏற்பட்டன. ஏனெனில் நாட்டின் தொழிற்சாலைகள் யாவற்றையும் சர்வதிகாரி சோமோசா குண்டுவீசித் தகர்த்திருந்தான். இறுதியாக 1979 யூன் 19-ல் குளுடுடே சன்டினிஸ்ட் ஆட்சிப் பொறுப்பைக் கையேற்றது.

## புரட்சி நடந்து 44 ஆண்டுகள் நிறைவு:

எதற்காக புரட்சியை மேற்கொண்டோமோ அதை நோக்கிய பாதையில் நிகரகுவா நடைபோட்டுக் கொண்டிருக்கிறது என்று அந்நாட்டின் ஜனாதிபதியும், புரட்சியை நடத்திய தலைவர்களில் ஒருவருமான டேனியல் ஓர்டேகா தற்போது கூறியுள்ளார்.

நிகரகுவாவில் மிகவும் கடுமையான வறுமையில் மக்கள் அவதிப்பட்டு வந்தனர். எழுத்தறிவே இல்லாத சூழலும் நிலவியது. இவற்றிலிருந்து மக்கள் மீள வேண்டும் என்று நாங்கள் கருதினோம். இதற்காகவே புரட்சி நடத்தப்பட்டது. எந்த நோக்கத்திற்காக நடத்தினோமோ, அதற்கான பாதையில் நடைபோடுகிறோம். மேலும் மேம்பட்ட உலகையே நாங்கள் விரும்புகிறோம் என்று குறிப்பிட்டார்.

1979 ஆம் ஆண்டில் சன்டினிஸ்ட் படைகள் ஆட்சியைக் கைப்பற்றின. புரட்சி நடந்து 44 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளதைக் கொண்டாடும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு நிகரகுவாவில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

## தாமஸ் சங்கராவிற்கு புகழாரம் :

இரண்டு மணி நேரத்திற்கும் மேலாகப் பேசிய அவர், புரட்சியின் நாயகர்கள் அகஸ்டோ சீசர் சாண்டினோ, ரிகோபெர்ட்டோ லோபஸ் பெரஸ் மற்றும் கார்லோஸ் ஃபொன்சேகா உள்ளிட்டோரின் முக்கியத்துவத்தை நினைவு கூர்ந்தார். பர்கினோ ஃபசோவில் இருந்து நிகரகுவாவுக்கு வந்து புரட்சிக்கான பங்களிப்பை செலுத்திய தாமஸ் சங்கராவிற்கு புகழாரம் சூட்டினார்.

புரட்சிக்கான பாதை தொடர்கிறது என்று ஓர்டேகா கூறியபோது மக்கள் ஆரவாரத்துடன் அதை வரவேற்றனர். ஓர்டேகாவின் இடது சாரிக் கொள்கைகளுக்கு மக்கள் மத்தியில் பெரும் ஆதரவு தொடர்ந்தும் இருந்து வருகிறது. அண்மையில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பு ஒன்றில், அவரது செயல்பாடுகளுக்கு 80 வீத மக்கள் ஆதரவு தெரிவித்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கியூபப் புரட்சிக்குப் பிறகு, இலத்தீன் அமெரிக்காவில் இன்னொரு புரட்சிக்குச் சாத்தியமே இல்லை எனச் சொல்லப்பட்ட நிலையில், இந்தப் புரட்சி சாத்தியமானது என்பது அமெரிக்காவிற்கு பாரிய அதிர்ச்சியை உருவாக்கியது எனலாம்.

நன்றி: ஜ. வி

# ஆகஸ்ட் 15, 1977
# தமிழ் இனப்படுகொலை



**1500க்கும் மேற்பட்ட தமிழர்கள் படுகொலை**
**10,000 க்கும் மேற்பட்ட தமிழர்கள் காயமடைந்தனர்**
**80,000க்கும் மேற்பட்ட தமிழர்கள் சொத்துக்களை இழந்தனர்**
**70 கோடிக்கு மேல் மதிப்புள்ள சேதமடைந்த தமிழர் சொத்துக்கள்**
**இதனால் பல இலட்சம் தமிழர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்**

கொழும்பு –இரத்தினபுரி – களுத்துறை – காலி – மாத்தறை
அம்பாந்தோட்டை – மொனறாகலை – பதுளை – மட்டக்களப்பு
யாழ்ப்பாணம் – அனுராதபுரம் – வவுனியா – மன்னார் – முல்லைத்தீவு
கண்டி – குருநாகல் – கேகாலை –திருகோணமலை – நுவரெலியா
மாத்தளை